என் மனைவியின்
ஆன்மாவுடன் உரையாடல்

என் மனைவியின் ஆன்மாவுடன் உரையாடல்

(ஆத்மாக்கள் உலகை பற்றி வெளிப்படுத்த பட்டவை)

ஜேசுராஜன்

அர்ப்பணிப்பு

இந்த நூல்,

என் வாழ்கை பயணத்தில் வழிகாட்டியாக இருந்து

உண்மையையும், உணர்வையும், அறிமுகப் படுத்திய ஆத்மகளின் வழிகாட்டி, திரு,சாமிநாதன் அவர்களுக்கு, அன்புடனும் நன்றியுடனும் அர்ப்பணிக்கப் படுகிறது.

மேலும், இந்த நூலை எழுதும் ஒவ்வொரு தருணத்திலும், என்னுடன் இருந்து ஊக்கமளித்து,

உள்ளுணர்வாக துணைநின்ற அனைத்து ஆத்மாக்களுக்கும், என் பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன், தங்கள் வாழ்க்கையில் மிக நேசித்தவர்களை இழந்து, விடை தெரியாத கேள்விகளுடனும், வலி நிறைந்த மௌனத்துடனும், வாழும் அனைத்து மனித உள்ளங்களுக்கும் இந்த நூல் ஒரு சிறிய ஆறுதலாக அமையவேண்டும் என்ற வேண்டுதலுடன், இந்நூல் அர்ப்பணிக்கப் படுகிறது.

ஜேசுராஜன்

இந்த நூலை எழுத உதவிய ஆத்மாக்கள்

திருமதி.அருள் மேரி

திரு.கல்பனா MCA

(ஆத்மாக்களின் வழிகாட்டி)

திருமதி.மரிய ராஜ சுந்தரி

திரு.ஜெரால்ட்

மற்றும்:
திரு.சாமிநாதன்(ஆத்மாக்களின் வழிகாட்டி)
திருமதி.பாக்கியம், திருமதி.ஜெயசீலி, திரு.சலீம்,
திருமதி.ஷக்கிலாபாணு, திரு.எபெனேசர்,
திருமதி.எமல்ட, திரு.ஆல்பர்ட், திருமதி.எஸ்தர்,
திரு.எட்வின், திருமதி.ரோஸ், திருமதி.ரஞ்சிதம்,
திருமதி.நிறைமதி, திரு.காயத்திரி, திருமதி.ரேவதி,
திரு.ஜெயலக்ஷ்மி, திருமதி.மகாலட்சுமி,
திருமதி.மாலதி

Title:

என் மனைவியின் ஆன்மாவுடன் உரையாடல்

நூல் ஆசிரியர்

ஜேசுராஜன்

பதிப்பு

ஜனவரி 2026

பொருள் அடக்கம் பக்கம்

1.பொறுப்பு துறப்பு 8
2.நூலைப்பற்றி 9
3.நன்றிச் சொற்கள் 12
4.இந்த நூலை யார் படிக்கவேண்டும் 20
5.அறிமுகம் 21
6.சிலரது இறப்பின் அனுபவங்கள் 24
7.கேள்வி, பதில்கள் 70
8.மறுபிறவி மையத்தில் அதிசெய்ய நிகழ்வு 141
9. அடுத்து வருவது 151

பொறுப்பு துறப்பு:

இந்த நூல், "என் மனைவியின் ஆன்மாவுடன் உரையாடல்", மரணத்திற்குப் பிறகு ஆத்மாவின் தன்மையைப் பற்றிய கருத்துகள் மற்றும் பார்வைகளை எடுத்துரைகிறது. இதில் பகிரப்படும் உள்ளடக்கம், ஆய்வு, தத்துவ விசாரணை, ஆன்மீக விளக்கங்கள் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் ஒருங்கிணை ப்பாகும். இது சிந்தனை, மற்றும் கல்விக்காக மட்டுமே உருவாக்கப்பட்டது.

இறப்பிற்குப் பிறகும் வாழ்க்கை தொடரும் என்பதற்கு அறிவியல் ஆதாரம் உள்ளதா?

இந்த நூல் இறப்பிற்குப் பிறகு உள்ள வாழ்வைப் பற்றிய, இறுதியான பதில்களையோ அல்லது அறிவியல் ஆதாரத்தையோ, வழங்குவதில்லை. வாசகர்கள் இதை திறந்த மனதுடன் அணுகி, தங்களது சொந்த நம்பிக்கைகள், அனுபவங்கள், மற்றும் மதவியல் அல்லது அறிவுச் சொத்துகளை அடிப்படையாகக் கொண்டு, புரிந்துகொள்ள ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

மருத்துவ, சட்ட, மற்றும் உளவியல் ஆலோசனை:

இந்த நூலில் உள்ள கருத்துகள், தொழில் முறை மருத்துவ, சட்ட, அல்லது உளவியல் ஆலோசனைக்கு மாற்றாக இருக்க முடியாது.

நீங்கள், துயரமோ, வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றிய குழப்பமோ, அல்லது உடல் நல குறைபாடுகளோ, ஆகியவற்றை எதிர்கொள் கிறீர்களெனில், தகுதியுடைய நிபுணர்களின் ஆலோசனை பெறுவது முக்கியம்.

கலாச்சார மற்றும் மத உணர்வுகள்:

இந்த நூலில் பல்வேறு பாரம்பரியங்கள் மற்றும் பார்வைகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இது எந்த ஒரு மத நம்பிக்கையையும் உயர்த்தவோ, குறைக்கவோ, நோக்கமில்லை. நூலின் உள்ளடக்கம் உண்மையான மனிதர்கள், நிகழ்வுகள், அல்லது அனுபவங்களுடன் தொடர்பு பெற்றதாக இருப்பது நிபந்தனை அல்ல, அது குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி.

பயன்படுத்தும் பொறுப்பு:

இந்த நூலில் உள்ள தகவல்களை, வாசகர்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள், பயன்படுத்துகிறார்கள் என்பதற்கான முழுப் பொறுப்பும் அவர்களுடையதே. இதில் கூறப்பட்டுள்ள கருத்துகளால் ஏற்படும் தத்துவ, ஆன்மீக, அல்லது தனிப்பட்ட விளைவுகளுக்கு, எழுத்தாளர் அல்லது பதிப்பாளர் பொறுப்பேற்கமாட்டார்கள்.

நூலைப்பற்றி:

இறப்பின் எல்லைகளை அன்பால் கடந்து செல்ல முடியுமா? “என் மனைவியின் ஆன்மாவுடன்

உரையாடல்" என்ற இந்த நூலில் நான் ஜேசுராஜன், என்னுடைய அன்பான மனைவியின் மறைவுக்குப் பிறகு, அவரது ஆன்மாவுடன் ஏற்பட்ட ஆழமான மற்றும் நெருக்கமான உறவின் பயணத்தில் வாசகர்களை அழைக்கிறேன். இந்த தனிப்பட்ட மற்றும் ஆத்மாக்களுடன் பயணத்தின் மூலம், மறைவுக்குப் பிறகான மர்மங்களை ஒரு தனித்துவமான நெகிழ்ச்சியுடன் உயிருள்ளவர் களுக்கும், மறைந்தவர்களுக்கும், இடையிலான இதயம் தொட்ட உரையாடல்களாக அமைத் திருக்கிறேன்.

இந்த மனதை ஈர்க்கும் நூலில், இறப்புக்குப் பிறகான வாழ்க்கையும் அதன் இயல்புகளும் குறித்து, அன்பும் ஞானமும் ஒளிரும் உரையாடல்களாக கூறியிருக்கிறேன். இந்த நூல், ஐம்புல உணர்ச்சி உலகத்தை மீறி நிலைக்கும் ஆத்மாக்களின் உறவுகளைப் பற்றிய ஒரு ஆழமான உணர்வுப் பூர்வமான புரிதலை வழங்குகிறது. இது நம்மை விட்டுப் பிரிந்த அன்பானவர்களுடன் தொடர்பு கொள்ளும் சாத்தியத்தை வெளிப்படுத்தி, ஆறுதல், நம்பிக்கை மற்றும் வாழ்க்கையின் நிரந்தர அழகை தொகுத்து வழங்குகிறது "என் மனைவியின் ஆன்மாவுடன் உரையாடல்" என்பது ஒரு சாதாரண நூலாக மட்டுமல்ல; அது அன்பு, இழப்பு மற்றும் ஆத்மாக்களை பற்றியதான ஒரு விழிப்புணர்வின் பயணமாகும். நீங்கள் ஒருவரின்

இழப்பை அனுபவித்திருக்கிறீர்களோ அல்லது இறப்புக்குப் பிறகான மர்மங்களை கண்டறிய ஆர்வமுள்ளவர்களோ, இந்த உணர்வுபூர்வமான கதைக்களம், அன்பின் நிலைத்திருக்கும் சக்தி மற்றும் மனித ஆன்மாவின் எல்லையற்ற வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ள உங்களை ஊக்குவிக்கும். "என் மனைவியின் ஆன்மாவுடன் உரையாடல்" என்ற இந்த நூலை கடவுளின் சித்தத்தின்படியும், புனித அதிதூதர் மைக்கேலின் வழிகாட்டுதலும், பாதுகாப்பையும் அடிப்படை யாகக் கொண்டு எழுதுகிறேன். இதை முடிக்கும் வரை, கடவுளின் சித்தத்திலிருந்தும், இயற்கையின் விதிகளிருந்தும், சிறிதும் விலகாமலிருக்க புனித அதிதூதர் மைக்கேல் எனக்கு வழிகாட்ட வேண்டுமென நான் வேண்டுகிறேன். மேலும், புனித அதிதூதர்

மைக்கேல், தூய மரியன்னைம, தூய

அந்தோனியார் எனது தோழர்களாக இருக்க வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

கடவுளுக்கு நன்றி, புனித மைக்கேலுக்கு நன்றி, புனித மரியன்னைக்கு நன்றி, புனித அந்தோனி யாருக்கு நன்றி.

நன்றிச் சொற்கள்:

அன்பும் மரியாதையும் நிறைந்த இதயத்துடன், என் மனைவி திருமதி பிளோரெட் பிரின்ஸஸ் மேரியுடைய ஆத்மா உடன் உரையாடல் என்ற நூலை எழுதும் இந்த புனிதப் பயணத்தில், என் மனிவியுடன் இருக்கும் ஆத்மாகளுக்கு எனது ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் உறுதியே எனக்கு வழிகாட்டும் ஒளியாகவும், ஆறுதலும் ஊக்கமும் அளிக்கிற சக்தியாகவும் இருந்தது. இந்த நூலின் ஒவ்வொரு சொல்லிலும், நம்மை ஒன்றிணைக்கும், நிரந்தர பிணைப்பின் தடம் பதியப்பட்டுள்ளது. என் கேள்விகளுக்கு அன்பும் ஞானமும் கலந்த ஆறுதல் வார்த்தைகளுடன் பதிலளித்து, வாழ்க் கையும், மரணமும், தாண்டிய அந்த உண்மை யான தொடர்பிணை நினைவூட்டியதற்கு மனமார்ந்த நன்றி.

என் அன்பான அம்மா திருமதி.மரியரஜசுந்தரி ஆன்மாவுக்கு, உங்கள் நிலைத்த அன்பும், உறுதியான வலிமையும், என் வாழ்விலும், இந்த

முயற்சியிலும் எனக்கு தைரியம் அளித்தவை. உங்கள் ஆன்மா தொடர்ந்து என்னை வளர்த்து, வழிகாட்டுகிறது, நான் எடுக்கும் ஒவ்வொரு படியிலும் உங்கள் ஆசீர்வாதத்தை உணர்கிறேன்.

என் மனைவியுடன் ஆத்மாக்கள் உலகத்தில் இருக்கும் நண்பர்களுக்கு, இந்த பாதையில் உங்களின் அறிவு, தோழமை மற்றும் நீங்கள் பகிர்ந்த வெளிச்சத்திற்கு, நான் ஆழமாக நன்றி கூறுகிறேன். உங்களின் வழிகாட்டலும், ஞானமும், இந்த படைப்பிற்கு தெளிவு மற்றும் ஆழத்தை வழங்கிநீர்கள், இவை இல்லாமல் இந்த வேலைச் சிறப்பாக செய்திருக்க முடியாது.

என் மனைவி இறந்த சமயத்தில், அவருடன் இருந்த ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.கல்பனா புவனேஸ்வரி பற்றி இங்கு நான் கூறியே ஆக வேண்டும். தேனி மாவட்டம் கம்பம் என்ற ஊரில், என் மனைவி இறந்த சமயத்தில் அவருக்கு அருகில் இருந்த திரு.கல்பனா புவனேஸ்வரி அவர்கள், ஆத்மாக்களின் வழிகாட்டியாக பணி புரிகிறார், அவரின் சொந்த ஊர் விருதுநகர், MCA படித்தவர், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் பணியில் இருந்தவர், ஒரு விபத்தில் இறந்திருக்கிறார். 2019லிருந்து ஆத்மாக்களின் வழிகாட்டியாக பணி புரிகிறார். இந்த செய்தியை படிக்கும் அவரது பெற்றோர்களும், உடன்பிறப்புகளும், நண்பர்களும், இவரைப் பற்றி நினைவுகூற சொல்கிறார். மேலும் திரு.கல்பனா

புவனேஸ்வரி அவர்கள் கூறுகையில், அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆத்மாக்களின் வழிகாட்டியாக பணிபுரிவதாகவும், அவரைப் பற்றி அவர் உறவினர்களும், நண்பர்களும், கவலை கொள்ளாமல் மகிழ்ச்சியாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறார். மேலும் அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய நண்பர் திரு.ரமேஷ் அவர்களுக்கு தன் நன்றியை தெரிவிக்கிறார். இதேபோல் தான் படித்த காலத்தில், அவருடன் இருந்த இரண்டு பெண் நண்பர்களை பற்றி இங்கு நினைவு கூறுகிறார். திரு.லதா மற்றும் திரு.கோகிலா இவர்களுக்கும் தன் நன்றியை தெரிவிக்கிறார். இந்தப் பெண் நண்பர்கள் திரு.லதா மற்றும் திரு.கோகிலா அவர்களுக்கு இந்த நூலின் மூலம் கீழ் வரும் செய்தியை தெரிவிக்கிறார் “நீங்கள் என்னுடைய நண்பர்களாய் இருந்த காலத்தில், நீங்கள் செய்த எல்லா பண உதவிகளுக்கும், என் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்”.

என் மனைவியின் வழிகாட்டியாக (Soulguide) இருந்து கொண்டிருக்கிற, சித்த வைத்தியர் திரு. சாமிநாதன் ஆவார்கள், ஆத்மாக்களின் வழிகாட்டியாக மட்டுமல்லாமல், அவர் ஒரு மறுபிறவி வழிகாட்டுதல் மையத்தை நடத்தி வருகிறார், அங்கு மறுபிறவி அடைய விரும்பும் ஆத்மாக்களுக்கு குண்டலினி யோகா மூலம் எவ்வாறு மறுபிறவியை செயல்படுத்துவது என்பதை கற்பிக்கிறார். மறுபிறவி வழிகாட்டுதல்

மையத்தை பற்றி திரு சாமிநாதன் கூறுகையில் ஒரே நேரத்தில் சுமார் 100 ஆத்மாக்கள் கூடக் கூடிய இடத்தில், ஆத்மாக்களுக்கு குண்டலினி யோகாவை பயிற்றுவிக்கிறார். ஒரு அமர்வு சுமார் நான்கு மணி நேரம் நீடிக்கும். இவ்வாறு ஆத்மாக்கள் இந்த குண்டலினி யோகா பயிற்சியை மேற்கொள்ளும் பொழுது, சில ஆத்மாக்களுக்கு அவர்களின் ஆத்ம சரீரத்தை சுற்றி வெள்ளை நிற ஒளி தோன்றும், இது சில வினாடிகளே நீடிக்கும், பிறகு அவர்களின் ஆத்ம சரீரம் மேலே சென்று மறைந்துவிடும், இதையே அந்த ஆத்மா மறுபிறவி அடைந்து விட்டதாக திரு.சாமிநாதன் அவர்கள் கூறுகிறார். இதை பார்த்துக் கொண்டிருக்கும் சக ஆத்மாக்கள், இத்தகைய யோகா பயிற்சியே மறுபிறவி அடைவதற்கு எளிய வழி என்று புரிந்து கொண்டு, தொடர்ந்து இந்த யோகா பயிற்சியை மேற்கொள்கின்றனர். சில ஆத்மாக்கள் இந்த யோகா பயிற்சியை, திரு.சாமிநாதன் அவர்களிடம் கற்றுக்கொண்டு, தாங்கள் வாழும் இடத்தில் இதைத் தொடர்ந்து பயில்கின்றனர். மேலும் ஒரு ஆத்மா மறுபிறவி அடைவதற்கு மூன்று நாட்கள் தன் யோகா மையத்திற்கோ, அல்லது அவர்கள் தங்கியிருக்கும் இடத்திலேயே இந்த யோகா பயிற்சியை செய்தால் போதும் என்கிறார் திரு.சாமிநாதன். அவர் மேலும் கூறுகையில்,

தான் அறிந்தவரை இந்த யோகா பயிற்சி

குண்டலனி யோகா பயிலும் ஆத்மாக்கள்

மறுபிறவி அடைவதற்கு ஒரு சிறந்த எளிய வழியாக இருக்கிறது என்கிறார். திரு.சாமிநாதன் பற்றி ஒரு சிறு குறிப்பு: நான் இந்த நூலை எழுதும் பொழுது, ஆத்மாக்களின் வழிகாட்டியாகிய திரு. சாமிநாதன், சித்த வைத்தியர் அவர்கள், அவரைப் பற்றியதான விவரங்களை, இந்த நூலில் எழுதச் சொன்னார், அவர் வேண்டுதலுக்கு இணங்க அவரைப் பற்றிய விவரத்தை, இந்த நூலில் பதிவிடுகிறேன். திரு.சாமிநாதன் அவர்களின் சொந்த ஊர் விருதுநகர், அவர் ஒரு பரம்பரை சித்த வைத்தியர் அவரது மனைவி பெயர் திருமதி. வக்க்ஷலா, இவர்களுக்கு இரண்டு மகன்களும்

நாண்கு மகள்களும் இருக்கின்றனர், இந்த நூலை எழுதும் சமயத்தில் மகன்களும், மகள்களும் சென்னையில் வசிக்கின்றனர், சென்னையில் திருவல்லிக்கேணி, நுங்கம்பாக்கம், கோடம் பாக்கம், வடபழனி, இந்த நான்கு இடங்களில், திரு. சாமிநாதன் அவர்களுடைய மகன்களும், மகள்களும், வசிக்கின்றனர். திரு.சாமிநாதன் அவர்களுக்கு மொத்தமாக ஆறு பேரப்பிள்ளைகள் இருக்கின்றனர். மேலும் ஆத்மாக்களின் வழிகாட்டி சித்த வைத்தியர் திரு.சாமிநாதன் அவர்கள் கூறுகிறார், அவருடைய விவரங்களை, இந்த நூலில் இருந்து படிக்கும், அவரது உறவினர்கள், நண்பர்கள், தங்களுக்கு விருப்பம் இருந்தால், இந்த நூலாசிரியரை, வாட்ஸப் நம்பர் 8825521968 உடன் தொடர்பு கொள்ளலாம்.

திரு.சாமிநாதன் (ஆத்மாகளின் வழிகாட்டி) இந்த நூலை நான் எழுதும் பயணத்தில், உங்கள் அறிவும், உங்கள் தோழமையும், நீங்கள் பகிர்ந்த ஒளியும், என் நெஞ்சை நெகிழச் செய்தவை. உங்கள் வழிகாட்டுதலும், ஆழ்ந்த ஞானமும், இந்த எழுத்துப் படைப்பிற்கு தெளிவையும் ஆழத்தையும் ஏற்படுத்தின. நீங்கள் இல்லாமல், இந்த முயற்சி இவ்வளவு பரிபுர்ணமாக நடைபெற வாய்ப்பே இல்லை. உங்கள் பங்களிப்பிற்கு, என் ஆழ்ந்த நன்றி மற்றும் மனம் கனிந்த மரியாதை.

இந்த நூலை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில், இறந்துவிட்ட என் அண்ணி திருமதி.அருள்மேரி

அவர்களின் வேண்டுதலுக்கு இணங்க, அவர்கள் பெயரை இங்கு குறிப்பிடுகிறேன். மேலும் தற்சமயம், நான் தங்கி இருக்கும் இடத்தில் வாழும், இந்த ஆத்மாக்கள் குழுவை வழி நடத்தும் சித்த வைத்தியர், திரு.சாமிநாதனுடன் இணைந்து ஆத்மாக்களின் வழிகாட்டியாக பணி புரிகிறார். அவருக்கும் இத்தருணத்தில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவர் இந்த ஆத்மாக்கள் குழுவுடன் எவ்வாறு இணைந்தார், என்பதைப் பற்றிய செய்திகள், கேள்வி பதிலாக தந்திருக்கிறேன். இந்த நூலை எழுத, என் அண்ணியின் இறப்புக்குப் பின் உள்ள, ஆத்மாக்கள் உடனான எனது அனுபவம், இறப்புக்குப் பின், ஒரு வாழ்க்கை உள்ளது, என்பதற்கு ஒரு சாட்சியாக அமைந்துள்ளது. மேலும் இந்த நூலை எழுதம் பொழுது, என் மனைவி தற்செயலக சந்தித்த, என் அத்தை (அப்பாவின் தங்கை) திருமதி.பாக்கியம் அவர்களின் இறபிற்குபின் உள்ள அவர்களின் அனுபவங்களை, இங்கு கேள்வி, பதிலாக, கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு என் நன்றி. இத்தருணத்தில், ஒரு முஸ்லிம் தம்பதியருக்கு என் நன்றியை சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் பெயர் திரு.சலீம் மற்றும் திருமதி. ஷகிலாபானு. இவர்கள் இருவரும், இறந்த பிறகு, தனியாக தன் மகன் வீட்டில் வாழ்ந்து வந்தார்கள், பிறகு நான் இந்த நூலை எழுதும் சமயத்தில், திரு.

சாமிநாதன் அவர்கள் தலைமையில் இங்கு செயல்படும், ஆத்மா குழுக்களுடன் தங்கியுள்ளனர். இந்த முஸ்லிம் தம்பதியரின், ஆத்ம உலக அனுபவத்தை இங்கே கேள்வி பதிலாக தந்திருக்கிறேன். இவர்களின் ஆத்ம உலக அனுபவம், இறப்புக்குப் பிறகு, ஒரு வாழ்க்கை உள்ளது என்பதற்கு, சாட்சியாக அமைந்துள்ளது. இவர்களுடைய அனுபவங் களை, எனக்கு பகிர்ந்ததற்கு, அவருக்கும், அவர் மனைவிக்கும், மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த நூலை எழுதும் சமயத்தில், எனக்கு எழுந்த ஆத்ம உலக செயல்பாடுகளின் சந்தேகங்களை, எனக்கு புரியும் படியும், அது எவ்வாறு தமிழில் பிழை இல்லாமல் எழுதுவது என்றும், எனக்கு அருகில் இருந்து கற்றுக் கொடுத்தார். இதற்கும் சலீம் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக, நீங்கள் என் ஆசிரியர்களாகவும், தோழர்களாகவும், மனித கண்களுக்கு காணாமல் இருந்தாலும், எப்பொழுதும் ஒத்துழைப்பாளர்களாகவும் இருந்தீர்கள். இந்த நூல் ஆத்மாகளின் உலகத்தை பற்றி பதிவு செய்யும் சாட்சியாகும். இந்த படைப்பு, உயிர்ப்பூண்டதில், உங்கள் அன்புக்கும், உண்மை க்கும், நிலைத்த ஆதரவுக்கும் நன்றி

நன்றியுடன்,

ஜேசுராஜன் .

இந்த நூலை யார் படிக்க வேண்டும்?

பெரும்பாலும் 60வயதிற்கு உட்பட்ட வர்களுக்கு இந்த நூலில் உள்ள செய்திகள் பயன்படாது. ஆனால் ஆத்மாக்கள் உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பதை தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருந்தால் அவர்களும் இந்த நூலை படிக்கலாம்.

யார் படிக்க வேண்டும்:

*தங்கள் அன்பானவர்களை இழந்து வருந்துகிறவர்கள், இந்த நூலை படித்தால், அவர்களுக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும். நூலில் உள்ள செய்திகளை புரிந்து கொண்ட பிறகு, தங்கள் மனதில் நிம்மதியும் புத்துணர்ச்சியும் அடைவார்கள், இறந்த அன்பான ஆத்மாக்களும் உங்களை நினைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

*வயோதிகத்தில் இறப்பை நினைத்து அஞ்சுபவர்கள், இந்த நூலை படித்து புரிந்து கொண்ட பிறகு, இறப்பைப் பற்றிய பயம் முற்றிலும் நீங்கிவிடும். இறப்பை மிக சந்தோஷமாக எதிர்கொள்ள இந்த நூல் அவர்களுக்கு உதவும்.

*உடல் நோயால் நீண்ட காலம் அவதிப்படுகிறவர்கள் மற்றும் இறப்பை வரவழைக்கும் நோய்களால் ஆட் கொண்ட வர்கள், இந்த நூலைப் படித்தால், அவர்களுக்கு இறப்பு

என்பது எல்லா உடல் உபாதைகளில் இருந்து நமக்கு கிடைக்கும் விடுதலை என்றும், இறந்த பிறகு மூப்பு, பிணி, இல்லாத ஆத்ம சரீரம் கிடைக்கும் என்றும், புரிந்து கொள்வார்கள். இந்த புரிதல் அவர்களின் மனதில் அமைதியையும், தற்பொழுது உள்ள நோயை எதிர்கொள்ளும் ஆற்றலையும் அவர்களுக்குத் தரும்.

*இளமையில் இருப்பவர்கள் இந்த நூலை படித்தால், தேவையில்லாத மத சடங்குகளிலிருந்து விலகி, பிறர் அன்பு ஒன்று மட்டும் தான், நாம் இறந்த பிறகு நமக்கு உதவும் என்று புரிந்து கொள்வார்கள். மேலும் இறந்தவர்கள், அடுத்து எதிர்கொள்ளப் போவது மறுபிறவி மட்டும்தான் என்று புரிந்து கொள்வார்கள்.

அறிமுகம்:

அன்பு என்பது முடிவற்றது. ஆன்மாக்களுக் கிடையிலான உறவும் அதேபோல். “என் மனைவியின் ஆன்மா உடன் உரையாடல்” என்ற இந்த நூல், என் மனைவியின், இறப்புக்குப் பிறகும் தொடர்ந்த, எனது உறவின் வெளிப்பாடாகும்.

எனக்கும் ஆத்மாக்கள் உலகத்திற்கும் உள்ள தொடர்பு எவ்வாறு ஏற்பட்டது?

என் மனைவி இறந்த சமயத்தில் எலோரையும் போல் நானும் மிகுந்த துக்கத்திலிருந்தேன்.

அன்பானவர்களை இழந்த எல்லோரும் அனுபவிக்கும், மன அழுத்தம், விரத்தி, அழுகை, குற்ற உணர்ச்சி, யாவும் எனக்கும் இருந்தது. ஆனால் இறந்த என் மனைவி என் அருகில் இருப்பது போல் தொடர்ந்து உணர்ந்தேன். அச்சமயத்தில் திருச்சியில் உள்ள, என் நண்பர் சாய் கிஷோர் அவர்களிடம் என் நிலைமையை கூறினேன், அவர் என்னை என் மனைவி இறந்து 40 நாட்கள் கழித்து திருச்சிக்கு வரும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி நான் திருச்சிக்கு சென்றேன். அங்கு அவர் என்னை திரு.ஐயாசாமி ரிட்டையர்டு போஸ்ட் மாஸ்டர் அவர்களிடம் அழைத்துச் சென்றார், அவர் ஆத்துமாக்களுடன் தியானத்தில் பேசும் வல்லமை உள்ளவர், அவர் கூறினார்: இறந்தவர்கள் யாவரும் ஆத்ம வடிவில் நம்மோடு தான் இருக்கிறார்கள், அவர்களுக்கு நம்மைப் போல் உடல் மட்டும் இல்லை மற்றவை எல்லாம் நம்மைப் போல் தான், நம் கண்ணுக்குத் தெரியாமல் வாழ்கிறார்கள். மேலும் அவர் கூறுகையில், அவர் செய்யும், இந்த ஆத்மாக்களுடன் பேச உதவும் தியான பயிற்சியை, கற்றுக் கொடுத்தவர், ஒரு கிறிஸ்தவ பாஸ்டர் என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து நான் ஊருக்கு வந்து விட்டேன். ஒரு நாள் என் மனைவியிடம் நீ அருகில் இருப்பது உண்மை என்றால், எனக்கு தொடு உணர்வு ஏற்படுத்தும்படி கூறினேன், அப்போது என்

உள்ளங்கையில் ஊசி குத்துவது போல் உணர்ந்தேன், என் மனதில் அவள் நகத்தால் உள்ளங்கையில் குத்தின எண்ணம் தோன்றியது. இவ்வாறு படிப்படியாக எங்களுக்குள் உணர்வு பரிமாற்றம் நடந்தது. ஒரு கட்டத்தில் என் மனைவி பேசுவது, எனக்கு என் மனதில் ஒலித்தது, அவர் உடல் உலகத்தைவிட்டு சென்ற பிறகும், நான் அவரது குரலையும், தொடுதலையும் உணர முடிந்தது. இது உண்மையான உரையாடல்களாக உருவெடுத்து, இந்த நூலை எழுத உதவியது. இந்த நூலில் எழுத்தப்பட்டவைகள் யாவும், என் மனைவி, பிளரட் பிரின்ஸஸ் மேரி அவர்களால் எனக்கு, ஆத்மாக்கள் உலகை பற்றி வெளிப்படுத்த பட்டவை. எனவே இங்கு பகிரப்படும் வார்த்தைகள் கற்பனையல்ல, நானே நேரடியாக பெற்ற உணர்வுகள், பதில்கள் மற்றும் அனுபவங்களின் பதிவு.

இந்நூல், வாழ்க்கையும், இறப்பும், ஒட்டியிருக்கும் அந்த நுண்ணிய இடத்திற்கு உங்களை அழைத்து செல்கிறது. அங்கு ஆன்மா, உயிருடன் பேசுகிறது, அன்பு எல்லைகளை கடக்கிறது, மற்றும் இறந்தவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை தழுவுகிறது.

இந்த நூல், எனது மனைவியின் ஆன்மாவுடன் உரையாடிய நிகழ்வுகளின் நிஜப்பதிப்பாகவும், அதன்மூலம் பெற்ற ஆறுதலும், வழிப்புணர்வும்,

அறிவும், மற்றவர்களுக்கும் உதவக்கூடுமென்ற நம்பிக்கையுடன் பகிர்கிறேன்.

இனிவரும் “ஆத்ம்மாகள் உலகை” பற்றிய கேள்வி, பதில்கள்யாவும் என் மனைவின் ஆத்மாவுடன், நான் நடத்திய உரையடல்களாகும். பல கேள்வி பதில்கள், என் மனைவியால் தொகுகப்பட்டவை. இந்த கேள்வி பதில்களுக்கு செல்லும் முன், என் மனைவியுடன் தங்கியிருக்கும், ஆத்மாக்களுடன் வாழும் சிலரது இறப்பின் அனுபவங்களை, என் மனைவி வழியாக அவர்கள் சொல்ல, நான் இங்கு பதிவிட் டிருகிறேன்.

<u>சிலரது இறப்பின் அனுபவங்கள்:</u>

என் அம்மா மரிய ராஜசுந்தரி இறந்த சமயத்தில் நடந்தது என்ன?

இதற்கு பதில் என் அம்மா கூற, என் மனைவி வழியாக நான் தெரிந்து கொண்டதை, என் அம்மா கூறுவது போல், இங்கே பதிவிட்டிருக்கிறேன். முதல் நிலை நான் தூங்கி விழித்தார் போல் இருந்தது, அருகில் என் மகள் பாப்பா நின்று கொண்டிருந்தாள், நான் அவளை கூப்பிட்டேன், அவளுக்கு காதில் விழவில்லை, நான் படுத்திருப்பதை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். என்னை நானே எழுப்ப முயற்சி செய்தேன், என் உடலில் எந்த அசைவும் இல்லை, என்னை நானே தட்டி எழுப்ப முயற்சி

செய்தேன், நான் அசைவற்றுக் கிடந்தது எனக்கு பயத்தைதந்தது. எனக்கு புதுத்துணி உடுத்தினார்கள், என்னை ஐஸ் பெட்டியில் வைத்தார்கள், எனக்கு அது குளிர வில்லை, பிறகு என் மகள் பாப்பாவின் நண்பர்கள் வந்து எனக்காக பாட்டு பாடி ஜெபித்தார்கள், பிறகு என் பிள்ளைகள் ஊரிலிருந்து வந்தார்கள். முன்பு பார்த்திராத ஒரு பெண் என் அருகில் வந்தார், நான் இறந்து விட்டதை அவர் எனக்கு உணர்த்தினார், ஆச்சரியமும் பயமும் என்னை ஆட்கொண்டது, நான் அந்த பெண்ணுடன் மட்டும் பேச முடிந்தது, பிறகு என்னை அடக்கம் செய்தனர். என்னை அடக்கம் செய்த இடத்திற்கு நான் செல்லவில்லை. நான் இறந்து விட்டேன் என்று எனக்கு புரிந்து கொள்ள ஆறு நாட்கள் ஆயிற்று, அந்த ஆறு நாட்கள் வரை அந்தப் பெண்ணும், அவருடன் இருந்த மற்றவர்களும் என்னை பார்த்துக் கொண்டனர். பிறகு அவர்கள், நான் வாழ்ந்த வீட்டிலேயே, என் அனுமதி உடன் தங்கி கொண்டார்கள். ஒரு கட்டத்தில் என்னை விட்டு எல்லா நோய்களும் போய்விட்டதை நான் உணர்ந்தேன். என் தற்போதைய உடல், மிகவும் லேசாக இருந்தது, நான் விரும்பிய உணவை என்னால் உட்கொள்ள முடிந்தது, உயிரோடு இருப்பவர்களுக்கும் எனக்கும் உள்ள வேறுபாடு புரிந்தது. உயிருள்ள என் மகன் குட்டியுடன் (ஜேசுராஜன்) மட்டும், என் மருமகள்(பிளோரெட்

பிரின்ஸஸ் மேரி) வழியாக என்னால் பேச முடிந்தது, அவனுக்கும் நான் பேசுவது கேட்கிறது, இது தினமும் நடந்தாலும், என்னால் இதை நம்ப முடியவில்லை. இவ்வாறாக இரண்டு வருட காலம் என் உறவுகளுடன் பேச முடியாத மன கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தேன். எனக்கு இருந்த ஒரே நிம்மதி, என்னுடன் தங்கி இருக்கும், ஆத்ம குழுக்கள் மட்டுமே. இறந்து ஒரு மாதம் கழித்து, என் மகள் பாப்பா மற்றவர்களுடனும் போனிலும் பேசுவது எனக்கு புரிய ஆரம்பித்தது, இதன் மூலம் என் மருமகள் பிளாரெட் பிரின்ஸஸ் மேரி சிகிச்சைக்காக நான் தங்கி இருக்கும் வீட்டிற்கு வரப்போவதை தெரிந்து கொண்டேன். மருமகள் நான் இருக்கும் வீட்டில் தங்கி சிகிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில், அவள் மிகுந்த நோய்வாய்ப்பட்டு, கஷ்டப்படுவதை, கண்டேன், அவள் உடனே இறந்து, என்னுடன் வரமாட்டாளா என்று என் மனம் தவித்தது. ஆனால் சில நாட்களில் அவள் உடல் தேறி, ஊருக்குச் சென்று விட்டார்கள். பிறகு ஒரு வருடம் கழித்து, என் மகள் பாப்பா போனில் பேசுவதை வைத்து, மருமகள் இறந்துவிட்டதை புரிந்து கொண்டேன். பிறகு ஒரு ஆறு மாதம் கழித்து, என் மகன் (ஜேசுராஜன்) குட்டியுடன் என் மருமகள் (ஆத்மா) கூட வந்திருந்தார், அவர்களுடன் பல ஆத்மாக்களும் வந்திருந்தனர், என்னால் அவர்களுடன் பேச முடிந்தது. பிறகு நான் அவர்களுடன் செல்ல முடிவு

செய்தேன். தற்போது நான் என் மகன் தங்கியிருக்கும் முதியோர் இல்லத்தில், தங்கி இருக்கிறேன், இங்குள்ள ஆத்மாக்களின் குழுவை, திரு.சாமிநாதன் என்ற ஆத்மாக்களின் வழிகாட்டி பராமரித்து வருகிறார். இந்த ஆத்மாக்கள் உலக வாழ்க்கை, எவ்வளவு காலம் என்று தெரியவில்லை, மறுபிறவி ஒன்று தான் அடுத்து நடக்கும் என்று கூறுகிறார்கள், இதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. என்னுடன் இருக்கும் நாத்தனார் திருமதி.பாக்கியம் கூறியது போல், இறப்புக்கு பின் நரகமும் இல்லை, மோட்சமும் இல்லை. உயிருடன் இருந்த சமயத்தில், எனக்கு கற்பிக்கப்பட்ட மதக் கோட்பாடுகள், யாவும் பொய்த்து போயின என்று மட்டும் தெரிந்து கொண்டேன்.

என்னுடைய அத்தை திருமதி.பாக்கியம் அவர்கள் இறந்த சமயத்தில் நடந்தது என்ன?

என் மனைவி தற்செயலாக பாக்கியம் அவர்களை, ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் சந்தித்தார், பிறகு திருமதி பாக்கியம் அவர்கள் அவர்களின் விருப்பப்படி, நான் தங்கியிருக்கும் முதியோர் இல்லத்தில், என் அம்மா இருப்பதை அறிந்து அவர்களும் தற்போது இங்கேயே தங்கி உள்ளார்கள். அவர்கள் இறந்த சமயத்தில் என்ன நடந்தது, என்பதை என் மனைவி மூலம் கேட்டறிந்து இங்கு எழுதுகிறேன். திருமதி. பாக்கியம் இறந்த சமயத்தில், அவர் வீட்டில்

இருந்திருக்கிறார், அவருக்கு இறப்பு என்பது, தூங்கி விழித்தார் போல் இருந்ததாக கூறுகிறார். அவர் அருகே வேற ஆத்மாக்கள் யாரும் இல்லை, அவர் கணவர் அவர் அருகில் அழுது கொண்டிருந்திருக்கிறார், அவருடன் பேச முயற்சி செய்து இருக்கிறார், ஆனால் அழுது கொண்டிருக்கும் கணவருக்கு பாக்கியம் அவர்களின் ஆத்மா பேசுவது அவருக்கு கேட்கவில்லை. ஏன் என்னால் யாருடனும் பேச முடியவில்லை, நான் இருப்பதை அவர்களால் உணர முடியவில்லை, என்ற குழப்பம் அவருக்கு நீடித்தது அவர் உடலை அவராலேயே பார்க்க முடிந்தது. தன் உடல் அசைவற்று கிடைப்பதை பார்த்து தனக்கு ஒன்றும் புரியவில்லை என்று கூறுகிறார். இறுதிச் சடங்கு நடக்கும் போது தான் அவருக்கு புரிந்தது தான் இறந்து விட்டோம் என்று. அவர் தன்னுடைய உடல் அடக்கம் செய்த இடத்திற்கு சென்று மற்றவர்களுடன் வீடு திரும்பி இருக்கிறார். அப்போதுதான் அவருக்கு புரிந்தது தன்னை யாராலும் பார்க்க இயலவில்லை என்று. அவர் உணவு உண்ண முயற்சித்த போது விரல்களால் உணவை எடுக்க முடியவில்லை, என்பதை கூறுகிறார். இதைத்தொடர்ந்து அவர் நேரடியாக தன் வாயை வைத்து உணவை உண்டதாக கூறுகிறார். உணவு உண்பதிலும் தண்ணீர் பருகுவதிலும் மிகவும் சிரமப்பட்டதாக கூறுகிறார். ஒரு வாரம் கழித்து வீட்டை விட்டு

வெளியே சென்றதாக கூறுகிறார். அவரை சுற்றியுள்ள யாருடைய கண்களுக்கும் தெரியவில்லை என்பதை உணர்ந்திருக்கிறார். குழப்பமும் பயமும் அவரை ஆட்கொண்டது. அச்சமயத்தில் யாரோ ஒரு பெண் அவர் தோளை தொட்டிருக்கிறார், அவருடன் மட்டும் அவரால் பேச முடிந்தது. அவர் பேசுவதும் இவருக்கு கேட்டது, அந்தப் பெண் இவரிடம் கூறுகிறார், “நாம் இருப்பது ஆத்மாக்கள் உலகம், நாம் உயிரோடு இருக்கும் யாருடனும் பேச முடியாது”. அந்தப் பெண் தான் ஒரு ஆத்மாக்களின் வழிகாட்டி என்றும், அவர் பெயர் மகாலட்சுமி என்றும், தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பிறகு ஆத்மாக்களின் வழிகாட்டி தான் தங்கி இருக்கும் இடத்திற்கு, என் அத்தையை அழைத்துச் சென்றிருக்கிறார். அங்குதான் அவர் உணவு உண்ணும் முறையையும், பொருட்களை பயன்படுத்தும் முறையையும் கற்றுக் கொடுத்திருக்கிறார். மேலும் பாக்கியமத்தை என் மனைவியை சந்திக்கும் வரை, ஆத்மா வழிகாட்டியான மகாலட்சுமியுடன் தங்கி இருந்திருக்கிறார். மேலும் என் அத்தை பாக்கியம் அவர்கள் கூறுகையில், “நான் நம்பி இருந்த மத கோட்பாடுகள் யாவும் என்னை ஏமாற்றி விட்டது, இறப்புக்கு பின் நரகமும் இல்லை, மோட்சமும் இல்லை, நாம் எங்கும் செல்லவும் இல்லை. இதே உலகத்தில் உயிரோடு இருவர்கள் கண்களுக்கு

தெரியாமல் ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மறுபிறவி தான் ஒரே வாய்ப்பு என்று கூறுகிறார்கள், இதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை, எத்தனை காலம் இந்த ஆத்மாக்கள் உலகத்தில் வாழ வேண்டும் என்றும் புரியவில்லை, ஆனால் ஒரு உண்மை மட்டும் எனக்கு புரிந்தது, நான் உயிருடன் இருந்தபோது எனக்கு பயிற்றுவிக்கபட்ட மத கோட்பாடுகள் யாவும் பொய் என்று.

5/10/25 அன்று பாக்கியம் அத்தை ஆத்மாவிற்கு என்ன நடந்தது:

பத்தாம் மாதம் 2025 ஆம் வருடம் என் மனைவி என்னிடம் பாக்கியமத்தை சென்னை பெசன்ட் நகர் வேளாங்கண்ணி கோயிலுக்கு கூட்டிச் செல்லும்படி கூறுகிறார்கள் என்றார். அன்றைய தினம் மழை பெய்து கொண்டிருந்ததால் வெயில் வரட்டும் நான் கூட்டி செல்கிறேன் என்று கூறினேன்.

5/10/25 ஞாயிற்றுக்கிழமை அன்று என் மனைவி பாக்கியமத்தை உட்பட ஆத்ம குழுக்கள், தாங்கள் நாகப்பட்டினம் வேளாங்கண்ணி செல்வதாக கூறினார்கள். அவர்களுடன் என் மச்சான் ஜெரால்டும், திரு.சலீம் அவர்களும் வருவதாக கூறினார்கள் இதைத்தொடர்ந்து அவர்கள் வேளாங்கண்ணி சென்று விட்டனர். சிறிது நேரத்தில் வேளாங்கண்ணியில் இருந்து என் மனைவி என்னிடம் பேசினார் “நாங்கள்

எல்லோரும் பழைய வேளாங்கண்ணி கோவிலில் இருக்கிறோம், எல்லோரும் ஜெபித்துக் கொண்டிருக்கும் பொழுது பாக்கியம் அத்தையை சுற்றி ஒளி தோன்றியது பிறகு அவர்களின் ஆத்ம சரீரம் அந்த ஒளியால் மேலே தூக்கிச் செல்லப்பட்டது, பிறகு அத்தையின் ஆத்ம சரீரம் மறைந்துவிட்டது". இதை என் மனைவி கூறி முடித்த பின், நான் என் மனைவியிடம் கேட்டேன் திருமதி.பாக்கியம் அவர்கள் மறுபிறவிக்கு சென்று விட்டதாக எடுத்துக் கொள்ளலாமா? அதற்கு என் மனைவி திரு.சாமிநாதன் அவர்கள் நடத்தும் மறுபிறவி வழிகாட்டு மையத்திலும் இது போல் தான் ஆத்மாக்கள் மறுபிறவிக்கு செல்கின்றனர், திரு.சாமிநாதன் அவர்களின் நம்பிக்கைப்படி, திருமதி.பாக்கியம் அத்தை ஆத்மாவும் மறுபிறவிக்கு சென்று விட்டதாக நம்புவோம் என்றார். நான் மீண்டும் என் மனைவியிடம் மறுபிறவிக்கு சென்றவர்களுடன் உங்களால் தொடர்பு கொள்ள முடியுமா என்று கேட்டேன் அதற்கு என் மனைவி மறுபிறவிக்குச் சென்றவர்களுடன் மற்ற ஆத்மாக்கள் தொடர்பு கொள்ள முடியாது என்று கூறினார்.

திரு.சலீம் மற்றும் அவர் மனைவி ஷகிலா பாணு இறந்த சமயத்தில் நடந்தது என்ன?

இந்த நூலை நான் எழுதி கொண்டிருக்கும் சமயத்தில், சென்னை விருகம்பாக்கத்தில் இருந்து ஒரு ஆத்மா நான் தங்கி இருக்கும்

இடத்தில் உள்ள ஆத்மாக்களை காண வந்தார். அவர் என் மனைவியிடம் இந்த நூலில் தன்னைப் பற்றி எழுத சொன்னார். அவர் வேண்டுதலுக்கு இணங்க அவரைப் பற்றி இங்கு எழுதுகிறேன்.

அவர் பெயர் திரு.சலீம், உயற்கல்வி ஆசிரியராக அரசு கல்லூரியில் பணிபுரிந்தவர். 1988 நவம்பர் 26 இல் இறந்திருக்கிறார். அவர் இறந்த பிறகு, தன் குடும்ப உறுப்பினர்கள் வாழ்ந்த வீட்டில், உயிருடன் இருந்த அவர் மனைவி ஷகிலா பானு உடன் இருந்திருக்கிறார். அவருக்கு இரண்டு மகன்கள் மட்டும் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் அப்துல்லா மற்றும் ஷெரிஃப். அவர்கள் இருவரும் ஆசிரியராக பணிபுரிகின்றனர். ஆத்மாக்கள் உலக வாழ்க்கையை பற்றி அவர் மேலும் கூறுகையில், தான் இறந்த சமயத்தில் ஏற்பட்ட அவருடைய அனுபவங்களை இங்கு விளக்குகிறார். நான் சிறுநீரக கோளாறு காரணமாக டயாலிசிஸ் செய்து கொண்டிருந்தேன், அச்சமயத்தில் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்துவிட்டேன். அருகில் என் மனைவி இருந்தாள், மருத்துவர் நான் இறந்து விட்டதை உறுதி செய்தார், என்னால் நம்ப முடியவில்லை, என் உடல் அசைவற்று கிடப்பதை பார்த்தேன். பிறகு என்னை என் மத முறைப்படி அடக்கம் செய்தார்கள். குழப்பத்துடன் சில நாட்கள் கழிந்தது. இனி நான் டயாலிசிஸ் செய்ய வேண்டியது இல்லை என்பதை உணர்ந்தேன்.

நான் நலம் பெற்று விட்டதாக நினைத்தேன். என் மனைவியிடம் இதைத் தெரிவித்தேன், ஆனால் அவளால் நான் பேசுவதை கேட்க முடியவில்லை. நான் உணவு அருந்த முற்பட்டபோது உணவு என் விரல்களுக்கு பிடிபடவில்லை, இது எனக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியது. நான் வாயை வைத்து நேரடியாக உணவு உண்டேன், தண்ணீர் அருந்துவதும் இதேபோல் தான். பிறகு நான் வெளியே செல்ல ஆரம்பித்தேன். முதலில் அருகிலுள்ள தர்காவுக்கு சென்றேன். அங்கு, ஒரு வயது முதிர்ந்த ஒருவரை கண்டேன், அவர் பெயர் அகமதுல்லா, நான் பேசுவது அவருக்கு கேட்டது, அவர் தான் ஒரு ஆத்மா என்றார். நான் இறந்து விட்டதை அவர் வழியாக தான் புரிந்து கொண்டேன். அவர்தான் எனக்கு உணவு உண்ண கற்றுக் கொடுத்தார், மேலும் ஆத்மாக்களின் உலகில் வாழ்வது பற்றி எனக்கு கற்பித்தார்.

இவ்வாறாக நான் தனிமையில், உயிருடன் இருக்கும் என் மனைவி மகன்கள் இருந்த வீட்டில், அவர்கள் கண்ணுக்கு தெரியாமல் வாழ்ந்தேன். இதற்கிடையில் வேறு சில ஆத்மாக்களை சந்தித்தேன். நான் முதலில் சந்தித்த ஆத்மாவின் பெயர் ராஜாராம். இந்த சூழ்நிலையில் சுமார் பத்து வருடம் சென்றது, என் மனைவியும் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். நான் அவருக்கு, ஆத்மா வழிகாட்டியாக செயல்பட்டு, என் மனைவியின் ஆத்மாவிற்கு எந்த குழப்பமும்

இல்லாமல், அவளுக்கு ஆத்ம உலக வாழ்க்கையைப் பற்றி புரிய வைத்தேன். முடிவாக இங்கு நான் ஒன்றை கூறும் விரும்புகிறேன். “நான் உயிருடன் இருந்த சமயத்தில், இறந்த பிறகு என்ன நடக்கும் என்று, எனக்கு கற்பிக்கப்பட்டவை யாவும் பொய்த்து போயின, இருந்தும் எனக்கு மறுபிறவியில் நம்பிக்கை இல்லை, ஆத்மாக்கள் உலகில் இருந்து கடவுள் விதித்த நேரத்தில் மறைந்து போய், சொர்க்கத்திற்கு செல்வேன் என்று நம்புகிறேன்”

திரு.சலீம், தன் மனைவி ஷகிலாபானு இறந்த சமயத்தில் என்ன நடந்தது என்பதை பற்றி இங்கு அவர் கூறுகிறார். என் மனைவி ஷகீலா பானு கூறுவது போல் இங்கு எழுதி இருக்கிறேன்.

நான் ஷகிலாபாணு, நான் இறந்த சமயத்தில் எனக்கு தூங்கி எழுந்தார் போல் இருந்தது. இறந்து போன என் கணவர் அருகில் (உயிருடன்) இருந்தார்! நான் பேசுவது உனக்கு கேட்கிறதா பானு என்றார். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது, எப்படி என்னால் இறந்து போன என் கணவரை பார்க்க, பேச, முடிகிறது என்று, பிறகு அவர் மெல்லா என்னிடம் சொன்னார், பானு நீ இறந்து போய் விட்டாய். நாம் இப்பொழுது ஆத்மாக்கள் உலகில் இருக்கிறோம். இந்த ஆத்மாக்கள் உலகம், வேறு எங்கும் இல்லை, நம் வாழ்ந்த இதே இடத்தில் தான் உள்ளது. நம் உயிருள்ளவர்களின் கண்களுக்கு தெரிய

மாட்டோம், ஆனால் நம் கண்களுக்கு மற்ற ஆத்மாக்களும், உயிருள்ளவர்கள் தெரிவார்கள், என்று புரிய வைத்தார். என்னைப்போல் பெண்களுக்கு நான் கூற விரும்புவது, இறக்கும் சமயத்தில் கண்டிப்பாக உறவுகளுடன் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள், இல்லை யென்றால் நீங்கள் தனியாக விடப்பட்டு, ஆத்மாக்களின் வழிகாட்டிகள் அல்லது வேறு ஒரு ஆத்மாவை சந்திக்கும் வரை உங்களுக்கு குழப்பமும், வேதனையும், தொடரும். ஆகவே உயிருள்ள நீங்கள், தினமும், எல்லாம் வல்ல அல்லாவிடம் இவ்வாறு வேண்டுங்கள், “நான் இறக்கும் போது, எனக்கு அருகில், எனது உறவு உள்ள ஆத்மாக்களை அல்லது ஆத்மாக்களின் வழிகாட்டி இருக்கும்படி பார்த்துக் கொள் என்று.”

திரு.சலீம் அவர்களின் நாகூர் பயண அனுபவம்:

இங்கு நான் ஒன்றை கூற விரும்புகிறேன், நான் சென்று வந்த எல்லா தர்காக்களிலும், ஆத்மாக்கள் இருந்தார்கள். முக்கியமாக நான் நாகூர் தர்கா சென்ற பொழுது, ஏராளமான ஆத்மாக்கள் இருப்பதை கண்டேன். மேலும் இந்த ஆத்மாகள், உயிருடன் இருப்பவர்களுக்கு, ஏற்படும் மன உடல் உபாதைகளை போக்க வல்லவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே பல தர்காக்களில், உயிருள்ள மக்கள் தங்கள், மனம்

மற்றும் உடல் நலத்திற்கு நிவாரணம் தேடி செல்கின்றனர்.

என் நாகூர் பயண அனுபவத்தை இங்கு கூற விரும்புகிறேன். நானும் ஒரு சில ஆத்மாக்களும், நாகூர் செல்ல முடிவு செய்தோம். சென்னையில் இருந்து நாகூர் செல்லும் பஸ்ஸில் ஏறினோம். எங்களுக்கென்று இருக்கைகள் இல்லாததால், உயிரோடு இருக்கும் மற்றவர்கள் மடியில் அமர்ந்தோம், அவர்களால் நாங்கள் அமர்ந்திருப்பதை உணர முடியவில்லை. பேருந்தில் பயணிச்சிட்டு நங்கள் எடுக்க வேண்டியது இல்லை, என்பதை உணரும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பேருந்து போகிற வழியில், உணவிற்காக நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்த உணவு விடுதிகளில், எந்த செலவும் இல்லாமல் நங்கள் உணவு அருந்தினோம். எங்களுக்கு சொர்க்கத்தில் இருப்பது போல் இருந்தது, நாகூர் வந்தடைந்தோம். அங்கு உயிரோடு இருக்கும் மனிதர்கள் படும் கஷ்டத்தை பார்த்து, இந்த உயிரோடு வாழும் வாழ்க்கை நரகத்திற்கு ஒப்பாக இருப்பதாக உணர்ந்தோம்.

நாகூர் தர்காவில், உடல் நலம் வேண்டி வரும் மனிதர்கள், எவ்வாறு குணம் பெறுகிறார்கள் என்பதை இங்கு கூற விரும்புகிறேன். மன, உடல், உபாதையுடன் வரும் நபரின் தலையில், அங்குள்ள வலிமார்கள் எனப்படும் இறைநேசர்கள், கை வைக்கிறார்கள், பிறகு

அவர்களின் குறையை சொல்லி, அரபி மொழியில், ஹதீஸிலிருந்து, சில வசனங்களை உச்சரிக்கிறார். பல பேருக்கு, அவ்லியாக்கள், இந்த வசனங்களை உச்சரிக்கும் போது, நோய்வாய் பட்டவரின் உடல் சிலிர்க்கிறது, இதைத்தொடர்ந்து அவர்கள் குணம் பெறுகிறார்கள். சிலர் குணமடைவதில்லை, “இவ்வாறு குண மடைவது எங்களைப் போல் இருக்கும் ஆத்மாக்களுக்கு தெரிகிறது”. உடலில் உபாதை அடைந்த உறுப்புக்கள் என்னைப் போன்ற ஆத்மாக்களின் கண்களுக்கு தெரிகிறது, அது குணமாவதும் எங்களுக்கு தெரிகிறது. மன உபாதைகளை பொருத்தவரை, மன உபாதைக்கு உட்பட்டவரின் உடலை சுற்றி உள்ள ஒளி மாறுதல் அடைகிறது. இது அவர்களின் ஆத்மா உடல் நலம் பெறுவதை குறிக்கிறது. மனநலம் குன்றிய ஒருவரின் உடலை சுற்றியுள்ள ஒளி, சாம்பல் நிறத்துடன் சிதைந்து காணப்படுகிறது, அவர் நலம் பெற்றவுடன் பிரகாசமான சீரான நீல நிற ஒளி தென்படுகிறது, இதுவே அவர் குணம் பெற்றுவிட்டார் என்பதற்குரிய அறிகுறியாக உள்ளது. குணம் பெறாதவர்களை சுற்றியுள்ள ஒளி, சாம்பல் நிறத்துடன் சிதைந்தே காணப்படுகிறது, இதை பற்றி வலிமார்கள் கூறுகையில், தீர்க்க முடியாத நோய்க்காட்பட்டவர்கள், தாங்கள் செய்த தவறுகளுக்கு தண்டனை அனுபவிக்கிறார்கள்.

இதிலிருந்து அவர்கள் விடுபடுவதற்கு, தங்கள் மனதளவில் கீழ்க்கண்டவாறு அல்லாவிடம் வேண்ட வேண்டும், " எல்லாம் வல்ல இறைவா, நான் முற்பிறவியில் செய்த தவறுகளுக்காக நான் முழு மனதுடன் மன்னிப்பு கேட்கிறேன், என்னை இந்த மன, உடல், உபாதையில் இருந்து விடுவியும்" என்று மன்றாடுங்கள், ஒருவேளை இறைவன் உங்களை மன்னித்து சுகம் அளிக்கக்கூடும்.

திருமதி.அருள்மேரியின் அம்மா, திருமதி ரஞ்ஜிதம் இறந்த சமயத்தில் என்ன நடந்தது? திருமதி.ரஞ்ஜிதம் இறந்த சமயத்தில் (மகள்)அருள்மேரி அவர்கள் உயிரோடு தான் இருந்தார்கள். திருமதி.ரஞ்சிதம் இறக்கும் தருவாயில், திரு.சாமிநாதன் மற்றும் என் மனைவி உட்பட பல ஆத்மாக்கள் உடன் இருந்தனர். திருமதி.ரஞ்ஜிதம் இறந்தவுடன் அவரது ஆத்மாவால் என் மனைவியை நன்றாக அடையாளம் தெரிந்தது. இதன் காரணமாக திருமதி.ரஞ்ஜிதம் எந்த குழப்பமும் இல்லாமல் ஆத்மாக்கள் உலகத்தை புரிந்து கொண்டார். திருமதி.ரஞ்சிதம் உடலை அடக்கம் செய்வதற்காக சென்னையிலிருந்து முத்துப்பேட்டை என்று அவர்களின் சொந்த ஊருக்கு கொண்டு சென்றனர். திருமதி.ரஞ்ஜிதம் அவர்கள், அவர் உறவுகளுடன் முத்துப்பேட்டைக்கு சென்று விட்டார். இந்த முடிவை மாற்ற, மற்ற ஆத்மாக்கள்,

மனைவி உட்பட பலர் தடுத்து பார்த்தனர், ஏனென்றால் முத்துப்பேட்டைக்கு திருமதி. ரஞ்ஜிதத்துடன் செல்ல மற்ற ஆத்மாக்கள் தயாராக இல்லை, மேலும் திருமதி.ரஞ்ஜிதம் தனியாக சென்றால் அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பு பிரச்சனை வரலாம் என்று மற்ற ஆத்மாக்கள் கருதினர், ஆனால் இது எதையும் பொருட் படுத்தாமல் திருமதி.ரஞ்ஜிதம் தனியே அவர்களை சொந்த ஊரான முத்துப்பேட்டைக்கு மற்ற உயிருள்ள உறவு உடன் சென்றுவிட்டார்.

ரஞ்ஜிதம் அவர்கள் தான் தனியாக உயிருள்ள உறவுகளுடன் சென்றதை விவரிக்கையில், போகும் வழியில் தன்னால் உயிருள்ள உறவுகளுடன் பேச முடியவில்லை என்பதை முதல் முறையாக உணர்ந்தவுடன் மிகவும் பயமும் குழப்பமும் ஏற்பட்டது. முத்துப் பேட்டையில் யாராவது ஆத்மாக்கள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன், மரியன்னையை வேண்டிக் கொண்டே என் பயணத்தை தொடர்ந்தேன். முத்துப் பேட்டை சென்றடைந்த உடன், என் சொந்த வீட்டில் சில ஆத்மாக்கள் தங்கிருப்பதை கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இதைத் தொடர்ந்து எனக்கு நண்பர்களாக இருந்த சில ஆத்மாக் களையும் அங்க நான் சந்தித்தேன். சென்னைக்கு திரும்பி வர மனமில்லாமல் முத்துப்பேட்டையில் இரண்டு வருட காலம் தங்கி விட்டேன்.

இதற்கிடையில் என் மகள் அருள்மேரி அவர்கள் இறந்துவிட்டார்.

டிசம்பர் 7ஆம் தேதி 2025 ஆம் வருடம் இரவு சுமார் ஒன்பது மணி அளவில் நான் என் அண்ணி அருள் மேரி வீட்டில் மற்ற ஆத்மாக்களுடன் தங்கியிருந்த சமயத்தில் என் மனைவி கூப்பிட்டு என்னிடம் ஏதோ பேசினார். எனக்கு முதலில் அது புரியவில்லை, சில வினாடிகளுக்கு பிறகு அவர் சொன்னது எனக்கு புரிந்தது. திருமதி.ரஞ்ஜிதம் அவர்கள் முத்துப்பேட்டையிலிருந்து இரண்டு ஆண் ஆத்மாக்களுடன், சென்னையில் உள்ள தன் மகள் அருள்மேரியின் வீட்டை தேடி கண்டுபிடித்து வந்திருக்கிறார். இதைப் பற்றி என் மனைவி கூறுகையில் அந்த ஆண் ஆத்மாக்களுக்கு சென்னை நன்றாக தெரிந்திருக்கிறபடியால், ரஞ்சிதம் அவர்கள் சொன்ன, வீட்டு அடையாளத்தை வைத்து சுமார் 4 மணி நேரம் தேடியிருக்கிறார்கள். தன் மகள் வீட்டை கண்டுபிடிக்க முடியாத நிலையில், தன் மகள் செல்லும் கோவிலுக்கு சென்று இருக்கின்றனர், அங்குள்ள குருக்கள் தங்கும் இடத்தில் தங்கியிருந்த ஆத்மாக்களின் உதவியுடன், தன் மகளின் வீட்டை இரவு ஒன்பதரை மணிக்கு கண்டுபிடித்து விட்டனர். திரு.சாமிநாதன் அவர்கள் ஆத்மாக்களின் வழிகாட்டி இதைப் பற்றி கூறுகையில், முதலில் எந்த ஒரு ஆத்மாவும், ரஞ்ஜிதம் அவர்கள் செய்தது போல் உயிருள்ள

உறவுகளுடன் தனியாக, மற்ற ஆத்மாக்களின் துணை இல்லாமல் செல்ல மாட்டார்கள், மேலும் இவ்வாறு சென்றவர்கள் மீண்டும் திரும்பி வந்து, தன் மகளுடன் இணைந்தது, தனக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது என்கிறார். இவ்வாறான மன தைரியம் சில ஆத்மாக்களுக்கு மட்டுமே தான் வரும் என்கிறார்.

என் அண்ணி திருமதி.அருள்மேரி இறந்த சமயத்தில் நடந்தது என்ன?

என் அண்ணி, பல மாதம் நோய்வாய்ப்பட்டு, ஒரு தனியார் மருத்துவமனையின் ஐ.சி.யு வார்டில் இறந்தார்கள். அவர் இறக்கும் சமயத்தில், ஐ.சி.யு வார்டில் அவர் அருகே அவர் குடும்ப உறுப்பினர்கள் யாரும் இல்லை. குடும்ப உறுப்பினர்கள் யாவரும் கீழ்தளத்தில் இருந்திருக்கிறார்கள். அவர் இறந்த செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன். அவர்கள் யாரும் ஐ.சி.யு வார்டிற்கு வரவில்லை, மாறாக நெருங்கிய உறவினர்கள் வர காலதாமதம் ஆகும் என்பதால், அவர் உடலை சில நாட்கள் பிணவறையில் வைக்க திட்டமிடப்பட்டது. மேலும் என் அண்ணி கூறுகையில், தான் இறந்தபோது தூக்கத்திலிருந்து எழுந்தது போல் இருந்தது. நான் என்னையே வெளியில் இருந்து பார்ப்பது போல் இருந்தது. என்னை நானே எழுப்ப முயன்றேன், என்னுடலில் எந்த அசைவும் தெரியவில்லை, என்னை தட்டி பார்த்தேன், என்

கைகளை தூக்கி பார்த்தேன், அசைவற்று கிடந்ததை பார்த்து எனக்கு மிகவும் பயமாக இருந்தது. அச்சமயத்தில் சிலர் என்னை தூக்கிச் சென்றனர், அவர்கள் பின்னே நான் சென்றேன், என் உடலை ஆம்புலன்சில் ஏற்றினார்கள், நான் ஆம்புலன்ஸில் ஏறவில்லை மாறாக மீண்டும் ஐ.சி.யூ வார்டிர்கே வந்து விட்டேன். சாப்பிட உணவு கிடைக்குமா என்று பார்த்தேன், நர்ஸ் சாப்பிட்டுக் கொண்டிருந்தது, அவர் கையில் எடுத்த உணவை நான் என் வாயில் வாங்கிக் கொண்டேன், ஏனென்றால் உணவு என் விரல்களுக்கு பிடிபடவில்லை, இதேபோல் தண்ணீர் குடித்தேன். இதுபோல் மூன்று வேளையும், நர்சுகளுடன் அவர்கள் சாப்பிடும் போது இருந்தேன். அவர்களிடம் என் உடம்பு எப்பொழுது வரும் என்று கேட்டேன், அவர்கள் என்னையோ நான் பேசுவதையோ கவனிக்கவில்லை. இப்படியே சில நாட்கள் சென்றது. நெருங்கிய உறவினர்கள் வர காலதாமதம் ஆனதால், என் அண்ணியின் உடலை, சில நாட்கள் பிணவறையில் வைக்க திட்டமிடப்பட்டதை அறியாத என் அண்ணியின் ஆத்மா, தன் உடலுக்கு சிகிச்சை நடப்பதாக நினைத்துக் கொண்டு, தொடர்ந்து ஐ.சி.யு வார்டில் காத்திருந்தது. அடக்கம் செய்யும் நாள் வந்தவுடன், என் அண்ணியின் உடலை பிணவறையில் இருந்து வீட்டிற்கு எடுத்துச் சென்றார்கள். என் அண்ணியின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள

நானும், முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் ஆத்மாக்களின் குழுக்களும், (என் மனைவி என் அம்மா மேலும் சில ஆத்மாக்கள்) என் அண்ணியின் வீட்டிற்கு சென்றோம். பிறகு என் அண்ணியின் உடலை அடக்கம் செய்துவிட்டு நான் வீடு திரும்பியவுடன், என் மனைவி என்னிடம் கூறினார் "உங்கள் அண்ணியின் ஆத்மாவை எங்களால் காண முடியவில்லை, அவர்கள் வீட்டிலும் இல்லை, அடக்கம் செய்த இடத்திலும் காணப்படவில்லை"

என் அண்ணி அடக்கம் செய்யப்பட்ட அந்த இரவு, ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.சாமிநாதன் அவர்கள், என் மனைவி வழியாக என்னிடம், தன்னை, என் அண்ணி இறந்த அந்த தனியார் மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லும்படி கூறினார். அதன்படி நான் ஆத்மாக்கள் குழுவுடன் மறுநாள் காலை அந்த தனியார் மருத்துவமனைக்கு சென்றேன்.

அங்கு ஆத்மாக்கள் குழுவினர், என் அண்ணியின் ஆத்மாவை கண்டுபிடித்து விட்டதாகவும், அவரை, என் அண்ணி வாழ்ந்த வீட்டிற்கு கூட்டி செலும்படி கூறினார்கள். அதே போல் நான், அவர்களை அழைத்து கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். ஒரு நாள் கடந்தது. ஆத்மாக்கள், தாங்கள், மருத்துவமனையில் இருந்து கூட்டி வந்தது அண்ணியின் ஆத்மா இல்லை, அது வெறும் கற்பனை உருவம் என்று கூறினார்கள். அந்த

கற்பனை உருவம் ஒரு சில மணி நேரங்களில் மறைந்து விட்டதாகவும் கூறினார்கள். அன்று இரவு என் அண்ணியின் மகன் வீட்டிற்கு வந்திருந்தார், அவரிடம் நான் செய்து கொண்டிருக்கும் செயலைப் பற்றி எதுவும் கூறாமல், அவரிடம் விசாரிக்கையில், ஒரே பேரில், இரண்டு வேறு வேறு இடங்களில் மருத்துவமனை இருப்பதாக கூறினார். மேலும் என் அண்ணி எந்த இடத்தில் உள்ள மருத்துவமனையில் இறந்ததார் என்பதையும் கூறினார். இதைக்கேட்டுக் கொண்டிருந்த ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.சாமிநாதன் அவர்கள், மறுநாள் காலை, அந்த குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைக்கு, என் மனைவி, என் அம்மா, உட்பட வேறு சில ஆத்மாக்களுடன் அங்கு சென்றோம். நான் மருத்துவமனை வாயிலில் நின்றிருந்தேன். என் உடன் வந்த ஆத்மாக்கள், என் அண்ணியை அழைத்து வர உள்ளே சென்றார்கள். சிறிது நேரம் கழித்து, என் அண்ணியை அழைத்து வந்து விட்டதாக கூறினார்கள். என் அண்ணிக்கு, என் அம்மாவையும், என் மனைவியையும், அடையாளம் தெரிந்ததாக கூறினார்கள். என் அண்ணி அவர்களிடம் கேட்ட முதல் கேள்வி பால்ராஜ் (பால்ராஜ் என்பது என் அண்ணியின் கணவர் பெயர்) எங்கே என்று, அதற்கு என் மனைவி “பால்ராஜ் வெளிஊரிளிருந்து இருந்து வந்து கொண்டிருப்பதால், தன் தம்பியை விட்டு

உங்களை அழைத்து வரும்படி எங்களை அனுப்பினார்”. இதில் திருப்தி அடைந்த என் அண்ணி எங்களுடன் வர சம்மதித்தார். ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.சாமிநாதன் அவர்களின் அறிவுரைப்படி, என் அண்ணியை அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லாமல் நேராக நாங்கள் தங்கியிருந்த முதியோர் இல்லத்திற்கு காரில் அழைத்து வந்தோம். வரும் வழியில் என் அண்ணி என்னுடன் பேச முயற்சி செய்திருக்கிறார், என்னிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை என்பதால், அவர் குழப்பம் அடைந்து, ஏன் குட்டி பேச மாட்டேங்கிறாங்க, என்று என் மனைவியிடம் கேட்டிருக்கிறார். அதற்கு என் மனைவி "நீங்கள் இறந்து விட்டீர்கள், உயிருடன் இருப்பார்களுடன் நாம் பேச முடியாது, நாம் இருப்பதை அவர்களால் பார்க்க முடியாது," என்று கூறி இருக்கிறார்.

ஆத்மாக்கள், என் அண்ணியை முதியோர் இல்லத்திற்கு அழைத்து வந்தார்கள். அண்ணியின் வீட்டிற்கு செல்லாமல் அவர்கள் இங்கு அழைத்து வந்ததற்கு, என் மனைவி சொன்ன காரணம், " என் அண்ணி மிகவும் சோர்வாகவும், குழப்பத்துடன், பசியுடனும், இருப்பதால் இங்கு ஒரு நாள் தங்க வைத்து, அவர் இறந்ததை புரிந்து கொண்டவுடன், கணவர் இருக்கும் வீட்டிற்கு செல்வோம் என்றார்."

அதன்படி அடுத்த நாள், அண்ணியை அழைத்துக் கொண்டு அவர் வாழ்ந்த வீட்டிற்கு சென்றோம். அங்கு சென்றவுடன், என் அண்ணி கணவருடன் பேச முயற்சி செய்திருக்கிறார், இயலாது என்பதை புரிந்து கொண்டு சோர்வுடன் தூங்கிவிட்டார். என் அண்ணியை, வேறு சில ஆத்மாக்களுடன் அங்கேயே தங்க வைத்துவிட்டு, நாங்கள் முதியோர் இல்லத்திற்கு திரும்பி விட்டோம். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன, என் அண்ணிக்கு தான் இறந்து விட்டோம் என்பது தெளிவானது. இச்சூழ்நிலையில், என் அண்ணி என் மனைவியிடம் " நீ மட்டும் எப்படி (உயிரோட இருக்கும், ஜேசுராஜன்னுடன்) குட்டியுடன் பேச முடிகிறது என்னால் மட்டும் ஏன் (உயிரோடு இருக்கும்) பால்ராஜிடம் பேச முடியவில்லை" என்று கேட்டிருக்கிறார், அதற்கு என் மனைவிக்கு பதில் சொல்ல தெரியவில்லை. இவ்வாறு நாட்கள் கடந்தன. என் அண்ணி, ஆத்மாக்கள் உலகத்தைப் பற்றி புரிந்து கொண்டார். இச்சூழ் நிலையில் அவர் வீட்டை விட்டு, நான் தங்கி இருக்கும் முதியோர் இல்லத்தில், திரு.சாமிநாதனுடன் இணைந்து, ஆத்ம வழிகாட்டியாக பணிபுரிகிறார். என் அண்ணி அவர் தான் இறந்த அனுபவத்தை கூறுகையில், இறப்பு என்பது தூக்கத்திலிருந்து எழுந்தார் போல் இருந்தது, என் உடல் நோய்கள் யாவும் மறைந்து போய்விட்டன, என்னால், சுற்றி இருப்பவர்களுடன் பேச முடியவில்லை, மேலும்

அவர்கள் என்னை கவனிக்கவும் இல்லை, என்பதை உணர்ந்த போது நான் மிகவும் குழப்பம் அடைந்தேன். அடிக்கடி சோர்வடைந்தேன், நீண்ட நேரம் தூங்கினேன், என்னால் உணவை கையில் எடுத்து உண்ண தெரியவில்லை, இது மேலும் எனக்கு குழப்பத்தை தந்தது. ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.சாமிநாதனையும், அவர் குழுக்களையும் சந்திக்கும் வரை எனக்கு உணவு உட்கொள்ள தெரியவில்லை. வயோதிகத்தில் இருக்கும் எல்லாருக்கும் நான் கூறுவது, நோய்வாய்ப்படும் சமயத்தில் தனித்திராமல் உறவுகளுடனே இருங்கள், முக்கியமாக ஐ.சி.யு வார்டில் எனக்கு நேர்ந்தது போல் நிகழாமல் இருக்க, உங்கள் உடலை, உறவினர்களே வீட்டுக்கு எடுத்து செல்லும்படி ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

எனக்கு ஏற்பட்ட அடுத்த அதிர்ச்சி, நான் உயிருடன் இருந்தபோது, மத நம்பிக்கை மிகவும் உடையவர், வின்சென்ட்தேபவுல் சபையின் மாநில தலைவியாக பணியாற்றி வந்தேன், நான் இறந்து விட்டேன் என்று எனக்கு புரிந்தவுடன், நான் முதலில் தேடியது மோட்சத்தை தான், அதற்கு பதிலாக என்னை சுற்றி எனக்கு முன்னால் இறந்த என் அத்தையையும், பிரின்சியையும் பார்க்கவும் பேசவும் முடிந்தது. நான் இறப்பதற்கு முன்னால் உள்ள அதே சூழ்நிலை, இடங்கள், மனிதர்கள், எல்லாம் மாறாமல் இருந்தது. என்னால்

உயிருள்ள மனிதர்களுடன் பேச முடியவில்லை. அவர்களைத் தொட்டால், அந்த உணர்வு அவர்களுக்கு தெரிவதில்லை. ஆனால் குட்டியை (என் கணவரின் தம்பி) தொடுகையில் அவர் அதை உணர்கிறார், இது எவ்வாறு என்று எனக்கு புரியவில்லை, இத்தகைய தொடு உணர்வையும், நான் பேசுவதை கேட்கும் திறனையும், என் கணவருக்கு கற்றுத் தரும்படி நான் குட்டியிடம் கேட்டுடிருக்கிறேன்.

மேலும் என் அண்ணி கூறுகையில், ஒருவர் இறந்த பின் என்ன நடக்கும் என்று என் மதத்தில் கற்பிக்கப்பட்டவைகள் எதுவும் எனக்கு நடக்கவில்லை. இந்த நூலை வாசிக்கும், மத குருக்கள் தயவுசெய்து இறந்த பின் என்ன நடக்கும் என்ற உண்மையை, இனியாவது உங்களை நம்பி உள்ள மக்களுக்கு கூற வேண்டும். இறந்த பின் என்ன நடக்கும் என்று மதத்தின் பெயரால் கற்பிக்கப்படும் யாவற்றையும் திருத்தி எழுத வேண்டும்.

மேலும் என் அண்ணி கூறுகையில், ஒருவர் இறந்த சமயத்தில், அவருக்காக செய்யப்படும் மத சடங்குகள் யாவும், எந்த விதத்திலும், இறந்தவரின் ஆத்மாவுக்கு, எந்த பலனையும் அளிக்காது. இறந்தவரின் நினைவு நாள் அன்று செய்யப்படும் சடங்குகள், மூன்றாம் நாள், நாற்பதாவது நாள், முதல் வருடம், போன்றவர்கள்

யாவும் இறந்த ஆத்மாக்களுக்கு எந்த பலனையும் அளிப்பதில்லை.

மாறாக ஒருவர் இறந்த சமயத்தில் அவரின் ஆத்மா எங்கும் செல்லவில்லை, அந்த குடும்பத்துடன் தான் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆத்மாக்களால் குடும்பத்தில் உள்ளவரை பார்க்க முடியும், அவர்கள் பேசுவதை கேட்கவும் முடியும், என்று புரிந்து கொள்ளுங்கள். இறந்தவர் களின் ஆத்மாவை வழி அனுப்பி வைக்கும் சடங்குகள், அந்த ஆத்மாக் களுக்கு மிகுந்த மன வேதனையை தரும் என்று புரிந்து கொள்ளுங்கள்.

ஆத்மாக்கள் அவர்கள் குடும்பத்துடன் தான் தங்கி, குடும்பத்தின் சுக துக்கங்களில் பங்கு பெற விரும்புகிறார்கள், அவர்களை சடங்கு என்ற பெயரால் வீட்டை விட்டு அனுப்பினால், அவர்கள் அனாதைகளாக, ஆத்மாக்கள் குழுக்களுடன் தங்கும் நிலை ஏற்படும். இறந்தவர்கள் ஆத்ம வடிவில், தங்கள் குடும்பத்தார் உடன் தான் இருக்க விரும்புகிறார்கள். அவர்களுடன் பேச முயற்சி செய்யுங்கள், உங்கள் ஆழ்மனதில் ஆத்மாக்கள் பேசுவது உங்களுக்கு கட்டாயம் கேட்கும், இது ஒன்றே இறந்தவர்களுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை கொடுக்கும்.

மாறாக ஆத்மாக்கள் மோட்சத்திற்கு செல்ல வேண்டும் என்று நீங்களாகவே கற்பனை செய்து கொண்டு, அதற்காக ஜெபிப்பது அர்த்தமற்றது.

இறந்தவர்களின் ஆத்மாக்கள் எங்கும் செல்வதில்லை, அது அவர்கள் குடும்பத்துடன் தான் தங்கி இருக்க விரும்புகிறார்கள், என்ற உண்மையை புரிந்து கொள்ளுங்கள். மத சடங்குகளை வைத்து, அவர்களை மோட்சத்துக்கு அனுப்பும் செயல், அவர்களை அனாதையாக்கி, ஆத்மாக்கள் குழுக்களுடன் அவர்களை தங்க வைக்கும்.

திருமதி.ஜெயசீலி அவர்கள் இறந்த சமயத்தில் என்ன நடந்தது?

என் அண்ணி அவர்கள் இறந்த பல மாதங்கள் கழித்து, அவர்களின் வீட்டின் அருகில் உள்ள திருமதி.ஜெயசீலி என்பவர் இறந்துவிட்டார். இதை என் மூலம் அறிந்து கொண்ட என் அண்ணியும், சில ஆத்மாக்களும், அங்கு சென்றனர். இறந்த உடலின் அருகே குழப் பத்துடன் அமர்ந்திருந்த திருமதி.ஜெயசீலி அவர்களுக்கு தான் இறந்த விட்டதை புரிய வைத்தனர். பிறகு அவர்கள் உடலை அடக்கம் செய்தவர்களுடன் கல்லறை வரை சென்று வந்தனர். திருமதி.ஜெயசீலி அவர்கள் தான் இரறந்த அனுபவத்தை கூறுகையில், அவருக்கு தான் இறந்த அனுபவம் தூக்கத்தில் இருந்து எழுந்தார் போல் இருந்தது, எல்லா நோய்களும் என்னை விட்டு சென்று விட்டதை உணர்ந்தேன். நான் இறந்த சில மணி நேரத்திலேயே திருமதி.அருள்மேரியும் வேறு சில ஆத்மாக்களும்

என்னை சந்தித்ததால் எனக்கு எந்த குழப்பமும் இல்லாமல் ஆத்மாக்கள் உலகை புரிந்து கொண்டேன். திருமதி.ஜெயசீலி அவர்கள் மேலும் கூறுகையில், ஒருவர் இறந்த பிறகு என்ன நடக்கும் என்று மதத்தின் பெயரால் கற்பிக்கப்பட்டவை எதுவும் எனக்கு நடக்கவில்லை, எனக்கு முன் இறந்தவர்கள் என்னை சுற்றி இருப்பதையும், உயிருடன் இருப்பவர்களும், என் சூழ்நிலையையும், எந்த மாற்றமும் அடையவில்லை. என்னால் உயிருடன் இருப்பவர்களுடன் பேச முடியவில்லை, ஆனால் இறப்புக்கு முன் எவ்வாறு இருந்ததோ அதே போல் தான் நான் இறந்த பிறகும் உள்ளது. நான் என் கணவர் பெலிக்ஸ் உடன் பேச முயற்சி செய்தேன், அவரால் நான் பேசுவதை உணர முடிகிறது, ஆனால் அச்சம் காரணமாக அவர் பதில் கூறவில்லை. நான் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறேன் என்றாவது அவர் என்னுடன் பேசுவார் என்று நம்புகிறேன். எனக்கு அவருடன் அவர் இருக்கும் வீட்டில் இருக்க விரும்புகிறேன். அவர் இறந்து என்னை சந்திக்கும் வரை அவருக்காக நான் காத்திருப்பேன்.

திருமதி.ஜெயசீலியின் மறுபிறவி:

தேதி 11.11.2025 அன்று ஜெயசீலி அவர்கள் வழக்கத்திற்கு மாறாக தூங்கிக் கொண்டிருந்தார்கள். இரவு 8.30 மணி இருக்கும், உடன் இருக்கும் ஆத்மாக்கள் இரவு உணவுக்காக

ஜெயசீலி அவர்ளை எழுப்ப முயற்சித்திருக் கிறார்கள், அந்த சமயத்தில் ஜெயசீலி அவர்களின் ஆத்ம சரீரத்தை சுற்றி வெள்ளை நிற ஒளி தோன்றி பிறகு அவர்களின் ஆத்மா சரீரம் மேலே சென்று மறைந்து விட்டது. திரு.சாமிநாதன் ஆத்மாக்களின் வழிகாட்டி இதைப் பற்றி கூறுகையில் திருமதி.ஜெயசீலி அம்மா மறுபிறவி அடைந்து விட்டதாகவும், இதே போல் தான், தான் பயிற்றுவிக்கும் மறுபிறவி மையத்தில் குண்டலினி தியானம் செய்யும் ஆத்மாக்கள் அவர்களின் ஆத்ம சரீரத்தை சுற்றி வெள்ளை நிற ஒளியுடன் மேலே எழும்பி மறைந்து விடுவார்கள் என்றார்.

கிறிஸ்தவ ஊழியர் திரு.எபநேசர் மற்றும் அவர் மனைவி திருமதி.எமல்டா:

ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.சாமிநாதன் அவர்கள் சமீபத்தில் சந்தித்த கிறிஸ்தவ ஊழியர் திரு.எபநேசர் மற்றும் அவர் மனைவி திருமதி.எமல்டா இவர்களைப் பற்றி இங்கு எழுத சொன்னார் அதன்படி என் மனைவி சொல்ல நான் எழுதுகிறேன்.

திரு.எபினேசர் மற்றும் திருமதி.எமல்டா இருவரும் கிறிஸ்தவ ஊழியகாரர்களாய் இருந்திருக்கின்றனர். 1960ல் இருந்து 2000 வரை மிகப் பிரபலமாக அறியப்பட்ட கிறிஸ்தவ ஊழியர் சகோதரர் DGS.தினகரன் அவர்களிடம் இவர் பணி புரிந்திருக்கிறார், இவர் மேலும் கூறுகையில்

தான் இறந்த போது என் நம்பிக்கையின் படி பரலோகம் செல்வேன் என்று எதிர்பார்த்தேன், மேலும் எங்கள் ஊழியத்தில் பிரசங்கிக்கும் போது நாங்கள் சொன்ன –

"இறந்த பிறகு கடவுளை முகமுகமாய் தரிசிப்போம்"

என்ற வார்த்தையின் படி நடக்கும் என்று எதிர்பார்த்தேன். எங்கள் போதனைக்கு எதிர் மாறாக, நான் இறந்த பிறகு, நாங்கள் போதித்த எதையுமே எங்களால் காண முடியவில்லை. மாறாக எந்த இடத்தில் இறந்தோமோ அதே இடத்தில் ஆத்ம சரீரத்துடன் உலவி வருகிறோம், அதே உணர்ச்சிகள், அதே எண்ணங்கள், அதே ஆசைகள், அதே பசி, ஆனால் உடல் மட்டும் ஆத்மா சரீரமாக மாறிவிட்டது. மேலும் எங்களால் உயிருள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை, மற்றபடி உயிர் உள்ளவர்கள் வாழும் வாழ்க்கையை நாங்கள் ஆத்ம சரீரம் கொண்டு வாழ்கிறோம். எங்களுக்கு எந்த ஒரு பிரத்தியேக சக்தி எதுவும் இல்லை. உடல் உள்ள மனிதர்களால் எவ்வாறு ஆவி உலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாதோ அதேபோல் தான் எங்களாலும் முடியாது. இது ஒரு இடைப்பட்ட நிலை என்கிறார்கள், இதன்பின் மறுபிறவிக்கு செல்வோம் என்று ஆத்மாக்களின் வழிகாட்டி திரு. சாமிநாதன் கூறுகிறார், இதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதைப் பற்றி என்னுடன் ஆத்ம

உலகத்தில் வாழும் போதகர்கள் இந்த இடைப்பட்ட நிலை வெறும் நினைவுகள் மட்டுமே என்று கூறுகிறார்கள், இந்த நிலை தானாகவே சிறிது காலத்தில் மறைந்துவிடும் என்று கூறுகிறார்கள். நம்முடைய உண்மையான ஆத்மா இங்கு இல்லை அது நாம் இறந்த உடனே பரலோகம் சென்று விட்டது, ஆகவே இந்த நினைவுகளின் நிலை ஒவ்வொருவருக்கும் இறந்த பிறகு சிறிது காலம் தொடரும், இது உடலின் தொடர்ச்சியே தவிர வேறொன்றுமில்லை. இந்த நிலையில் எந்த ஒரு முக்கியத்துவமும் இல்லை. இதன் காரணத் தினால் தான் இப்படிப்பட்ட இந்த இடைப்பட்ட நிலையை நமக்கு கடவுள் வெளிப்படுத்தவில்லை. ஆகவே இந்த இடைப்பட்ட நிலை இயற்கையாகவே மறைந்து போகும். இது நம் நினைவுகளால் உருவான கற்பனை உலகம். இந்த உலகத்தை ஆத்மாக்கள் உலகம் என்று கூறுவது தவறு. இறந்தவர்களின் ஆத்மா இங்கு இல்லை, அவர்களின் நினைவுகள் மட்டுமே இங்கு உள்ளது அதுவும் ஒருவர் உடல் சரிரத்தோடு இருந்த சமயத்தில் அவர்களின் நினைவுகளின் அழுத்தத்திற்கு தக்கவாறு இந்த கற்பனை உலகத்தில் அவர்களின் நினைவுகள் இருக்கும். இதன் காரணமாகவே சிறுவர் சிறுமியர் வெகு விரைவாக இந்த நினைவு உலகத்தில் இருந்து மறைந்து விடுகின்றனர். வயதாகி இறப்போரின் நினைவுகள் அதிக சக்தி வாய்ந்ததாக

இருப்பதால் அவர்கள் மேலும் சில காலம் இந்த நினைவு உலகத்தில் இருப்பது போல் தோன்றும்.

திரு.சாமிநாதன் ஆத்மாக்களின் வழிகாட்டி தான் நடத்தும் மறுபிறவி மையத்தில் தியானம் செய்யும் ஆத்மாக்கள், தியானத்திலே மறுபிறவி அடைவதாக சொல்லப்பட்டதற்கு, கிறிஸ்தவ போதகர்கள் கூறும் பதில்:

இவ்வாறு தியானம் செய்யும் போது நம்முடைய சிந்தனைகளின் அழுத்தம் குறைந்து நம் குழந்தைகள் போல் ஆகிறோம், ஆகவேதான் அந்த நிலையில், நாம் இந்த நினைவு உலகத்தில் இருந்து விடுபடுகிறோம். இந்த நிகழ்வை ஆத்மாக்கள் மறுபிறவிக்கு செல்வதாக எடுத்துக்கொள்ள முடியாது, ஏனென்றால் இங்கே ஆத்மாக்கள் யாரும் இல்லை வெறும் நினைவுகள் மட்டுமே உள்ள கற்பனை உலகம். இது பற்றி எபினேசர் அவர்கள் மேலும் கூறுகையில் இறந்தவுடன் ஆத்மாவானது நேரடியாக பரலோகம் செல்கிறது, என்பது எங்களின் நம்பிக்கை இந்த இடைப்பட்ட நினைவு உலகம் எதற்கு என்று எங்களுக்கு புரியவில்லை. இதை நாங்கள் நம் இறப்புக்கு பின் உள்ள நினைவுகளின் வடிவமாகவே பார்க்கிறோம்.

திரு.சாமிநாதன் அவர்கள் நடத்தும் வழிகாட்டு மையத்தில் நடந்த நிகழ்வு:

திரு.சாமிநாதன் அவர்கள் நடத்தும் வழிகாட்டு மையத்தில் நடந்த நிகழ்வைப் பற்றி இங்கு எழுத சொன்னார், அதன்படி என் மனைவி சொல்ல நான் அதை எழுதுகிறேன். 2025 நவம்பர் மாத கடைசி வாரத்தில் திரு.சாமிநாதன் அவர்கள் ஆத்மாக்களுக்கு குண்டலினி தியான பயிற்சியை நடத்திக்கொண்டிருக்கும்போது அதில் பங்குபெற்ற பெரும்பான்மையான ஆத்மாக்கள் ஐ.டி தொழிலில் வேலை பார்த்த இளம் வயதினர். திரு.சாமிநாதன் அவர்கள் இந்த தியான பயிற்சியை இவர்களுக்கு அளிப்பதற்கு முன் அவர்களிடம் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார், அது என்னவென்றால், ஒருவேளை நீங்கள் இந்த தியானம் மேற்கொள்ளும் பொழுது மறையும் நிலை உங்களுக்கு ஏற்பட்டால் நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்பதை என்னிடம் கூறிவிட்டு செல்லுங்கள், என்ற வேண்டுகோளுடன் திரு.சாமிநாதன் அவர்கள் தியான பயிற்சியை அளித்திருக்கிறார். இவ்வாறு பயிற்சி நடந்து கொண்டிருக்கும் சமயத்தில், திடீரென்று தியான பயிற்சி பெறும் ஆத்மாக்களை சுற்றி ஒளிவட்டம் ஏற்பட்டு இருந்த இடத்திலேயே மறைந்து விட்டனர். இவ்வாறு அவர்கள் மறையும் பொழுது தாங்கள் செல்லும் இடத்தை அவர்களால் காண முடிவதாக கூறினார்கள். அந்த இளம் வயது ஆத்மாக்கள் அவர்கள் மறையும் போது

பேசுகையில் அவர்கள் எதிர்பார்த்தது போலவே ஒரு தாயின் கர்ப்பப்பைக்குள் தாங்கள் செல்வதாக கூறி சென்றனர். இவ்வாறு ஆத்மாக்கள் மறையும் பொழுது தாங்கள் செல்லும் இடத்தை கூறி செல்வது, திரு.சாமிநாதன் அவர்களுடைய அனுபவத்தில் இதுவே முதல் முறை என்று கூறுகிறார். மேலும் அவர் கூறுகையில் மறுபிறவிக்கு சென்றவர் களுடன் சிறிது நேரம் பேச முடிந்தது என்று கூறுகிறார். இவ்வாறு மறுபிறவிக்கு சென்றவர்களுடன் பேச முடிந்தது இதுவே முதல் முறை என்கிறார், இதுவரை மறைந்து போகும் ஆத்மாக்களுடன் அவரால் பேச முடிந்ததில்லை என்கிறார், இவ்வாறு மறைந்து போகும் ஆத்மாக்கள் யாவரும், தாயின் கர்ப்பப்பைக்குள் தான் செல்கிறது என்பது அவரைப் பொறுத்தவரை நிரூபணம் ஆகிவிட்டது என்கிறார். இந்த நிகழ்வு நடக்கும் சமயத்தில் கிறிஸ்துவ போதகர் சகோதரர் திரு.எபினேசர் உடன் இருந்ததாக கூறுகிறார். இந்த நிகழ்வை நேரில் பார்த்த போதகர் சகோதரர் திரு.எபினேசர், தன் உடன் இருக்கும் மற்ற போதகர்களிடம் இதைப் பற்றி கூறியிருக்கிறார். இதைப் பற்றி கிறிஸ்தவ போதகர்கள் மேலும் அறிந்து கொள்ள திரு.சாமிநாதனின் மறுபிறவி வழிகாட்டு மையத்திற்கு வரத் தொடங்கியுள்ளனர் சகோதரர் திரு.எபினேசர் இதைப் பற்றி கூறுகையில்,

மறுபிறவியில் நம்பிக்கை இல்லாத மதங்கள் வெகு விரைவில் அதன் உண்மை தன்மையை அறிந்து நம்ப தொடங்கி விடுவார்கள் என்று கூறினார். மேலும் எபினேசர் கூறுகையில், அவரும் உயிருடன் வாழும் சில போதர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும், இந்த நிகழ்வைப் பற்றி அவர்களிடம் சொல்லி இருப்பதாகவும், இதன் காரணமாக மறுபிறவி நம்பாதவர்களிடம் விரைவில் ஒரு மாற்றம் வரும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் கூறுகின்றார். திரு எபினேசர் அவர்கள் மேலும் கூறுகையில், தான் முதல் முறையாக திரு.சாமிநாதன் அவர்களை சந்தித்தபோது அவர் கூறியிருந்த மறுபிறவி கருத்துக்களை நானும் நம்பவில்லை ஆனால் தற்போது நான் அவரது வழிகாட்டு மையத்தில் இந்த நிகழ்வை நேரில் பார்த்ததும், மறுபிறவிக்கு சென்றவர்கள் பேசியதை கேட்ட பிறகும், ஆத்மாக்கள் உலகத்திலிருந்து மறைபவர்கள் யாவரும் மறுபிறவிக்கு தான் செல்கிறார்கள் என்ற உண்மையை புரிந்து கொண்டேன். மேலும் இந்த உண்மையை மற்ற உயிருடன் வாழும் போதகர்களிடம் எடுத்துச் செல்வேன், வெகு விரைவாக அவர்கள் மத்தியில் மறுபிறவியை ஆதரித்து ஒரு மாற்றம் வரும் என்று தான் எதிர்பார்ப்பதாக கூறினார்.

திரு.சாமிநாதன் அவர்களின் மறுபிறவி வழிகாட்டு மையத்தில் நடந்த மற்றும் ஒரு நிகழ்வு:

திரு.சாமிநாதன் அவர்கள் தான் பெற்ற ஆற்றலை பற்றி கூறுகையில். தாயின் கர்ப்பபைக்குள் ஒரு ஆத்மா சென்ற பிறகு வெளியில் உள்ள மற்ற ஆத்மாக்களுடன் தொடர்பு கொள்வதில்லை. கர்பப்பைக்குள் இருக்கும் ஆத்மா ஆணாகப் பிறக்குமா அல்லது பெண்ணாக பிறக்குமா ஏன்று வெளியில் இருக்கும் மற்ற ஆத்மாக்களுக்கோ ஆத்மா வழிகாட்டிகளுக்கு தெரியாது ஆனால் திரு.சாமிநாதன் ஆத்மாக்களின் வழிகாட்டி தற்சமயம் பெற்ற ஆற்றலினால் அவர் தாயின் கர்ப்பபைக்குள் இருக்கும் ஆத்மாவுடன் பேச முடிகிறது என்கிறார். இதன் காரணமாக மூன்று மாத கருவுற்ற தாயின் கர்ப்பப்பையில் இருப்பது ஆணா அல்லது பெண்ணா என்று தன்னால் கூற முடியும் என்கிறார், மேலும் பிறக்கப் போகும் குழந்தை ஏதேனும் குறையுடன் பிறக்குமா அல்லது நல்ல நிலையில் பிறக்குமா என்று கர்ப்பப்பைக்குள் இருக்கும் ஆத்மாவுடன் பேசி தெரிந்து கொள்ள முடியும் என்கிறார். இந்த ஆற்றலை விருப்பமுள்ள மற்ற ஆத்ம வழிகாட்டிகளுக்கு தன்னால் கற்றுத் தர முடியும் என்கிறார்.

ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.கல்பனா அவர்களுடன் தங்கியிருக்கும் ஆத்மாக்கள்,

அவர்கள் இறந்த சமயத்தில் பெற்ற அனுபவத்தை, ஆத்ம வழிகாட்டி திரு கல்பனா அவர்கள் சொல்ல நான் எழுதியது:

திரு.காயத்ரி இறந்த சமயத்தில் என்ன நடந்தது?

திரு காயத்ரி அவர்கள் கம்பம் அருகில் உள்ள உத்தமபாளையம் என்ற் ஊரைச் சேர்ந்தவர். பெரியகுளத்தில் உள்ள ஒரு பெண்கள் கல்லூரியில் முதலாம் ஆண்டு M.sc படித்துக் கொண்டிருந்தபோது, உத்தமபாளையத்தில் உள்ள கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த சொக்கலிங்கம் என்பவரை காதலித்திருக்கிறார், பெண் வீட்டில் எதிர்ப்பு தெரிவித்ததனால், மனமடைந்து தன் வீட்டிலேயே விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். அவர் தன் தாய் தந்தையரிடம், தான் செய்ததை நினைத்து வருந்துவதாகவும் அதற்காக அவர்களிடம் மன்னிப்பு கேட்பதாகவும் கூறுகிறார். தாயின் பெயர் திருமதி மகாலட்சுமி, தந்தையின் பெயர் பெரியசாமி என்று கூறுகிறார். திரு காயத்ரியின் தங்கை பெயர் விசாலாட்சி தற்பொழுது இரண்டாம் ஆண்டு M.sc படித்து வருகிறார் இவரிடமும் தான் மன்னிப்பு கேட்பதாக கூறுகிறார். தன் குடும்பத்தை பிரிந்து நாண்கு வருடமாக மிகுந்த வேதனையுடன் இருப்பதாக கூறுகிறார். திரு.காயத்ரி அவர்கள் மேலும் கூறுகையில் எந்த பெண்ணும் தன்னைப்போல்

தற்கொலை செய்து கொள்ள வேண்டாம், ஒரு நிமிடத்தில் எடுக்கும் இந்த தற்கொலை முடிவு இறந்த பிறகு மறுபிறவி வரை மிகுந்த மனவேதனையை கொடுக்கும், என்கிறார். இந்த நூலை ஒருவேளை தன் தங்கை படிக்க நேர்ந்தால், தாய் தந்தை தன்னை மன்னித்து விடும்படி கேட்டுக்கொள்ள சொல்கிறார். தன் தம்பி மகேஷையும் கேட்டதாக சொல்கிறார். தன் தந்தை பெரிய சாமியிடம் காலில் விழுந்து மன்னிப்பு கேட்பதாக கூறுகிறார். மறு ஜென்மத்தில் இதே பெற்றோருக்கே தான் மகளாக பிறக்க விரும்புவதாக கூறுகிறார், அதற்குத்தான் வேளாங்கண்ணி சென்று புனித ஆரோக்கிய மாதாவிடம் வேண்டி இருப்பதாகவும் கூறுகிறார். (நூலாசிரியராகிய ஜேசுராஜன் காயத்ரி உட்பட ஆத்ம குழுக்களை அழைத்துக் கொண்டு வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதாவிடம் ஜெப விண்ணப்பம் கொடுத்துள்ளேன்)

காயத்ரி அவர்கள் திரு.கல்பனா ஆத்மா வழிகாட்டியை சந்தித்ததைப் பற்றி கூறுகையில், நான் விஷம் குடித்த சமயத்தில் தன்னை கம்பம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள், அங்கு சிகிச்சை பலனின்றி தான் இறந்து விட்டதாகவும் கூறுகிறார். தான் இறந்து விட்டோம் என்று தெரிந்தவுடன் மருத்துவமனை வாயிலுக்கு சென்றதாகவும் அச்சமயத்தில் ஆத்மாக்களின் வழிகாட்டி கல்பனா அவர்கள் தனக்காக காத்துக்

கொண்டிருந்ததாகவும் கூறுகிறார். இந்நிகழ்வை பற்றி ஆத்மா வழிகாட்டி கல்பனா அவர்கள் கூறுகையில், ஆம்புலன்ஸ் ஒலி எப்பொழுதெல்லாம் தனக்கு கேட்கிறதோ அப்பொழுதெல்லாம் தான் அரசு மருத்துவ மனைக்கு செல்வது வழக்கம் என்று கூறுகிறார்.

திருமதி.ரேவதி இறந்த சமயத்தில் என்ன நடந்தது?

திருமதி.ரேவதி அவர்கள் கம்பம் வரதராஜபுரத்தில் வசித்து வந்திருக்கிறார். அவர் வயது சுமார் 40 இருக்கையில் அவர்கள் சிறுநீரக கோளாறு இருந்திருக்கிறது, கொரோனா சமயத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் கம்பம் அரசு மருத்துவமனையில் இறந்திருக்கிறார். ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.கல்பனா அவர்கள் அதே வரதராஜபுரத்தில் இருப்பதால், ரேவதி அவர்கள் இறந்ததை கேள்விப்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றிருக்கிறார், அங்கு ரேவதி தன் உடல் அருகே குழப்பத்துடன் நிற்பது கண்டு, ரேவதியை கூட்டிக்கொண்டு தான் தங்கி இருக்கும் வீட்டிற்கு சென்று இருக்கிறார். திருமதி. ரேவதி அவர்கள் தன்னை பற்றி கூறுகையில் எனக்கு ஒரு அன்பான கணவரும் ஒரு மகளும் இருப்பதாகவும் அவர்களை விட்டு பிரிந்தது தனக்கு மிகுந்த பல வேதனை அளிப்பதாகவும் கூறுகிறார். அவர் கணவர் பெயர் பாலு என்றும்,

மகள் பெயர் ஜெயசித்ரா என்றும் கூறுகிறார், அவர்களை நினைத்து மிகவும் வருந்துவதாகவும் கூறுகிறார். மகள் தற்போது பிளஸ்டூ படிப்பதாகவும் இந்த நேரத்தில் தன் மகளை தனியாக விட்டுவிட்டு வந்தது எனக்கு மிகுந்த மன வேதனை அளிப்பதாகவும் கூறுகிறார். மறு ஜென்மத்தில் இதே குடும்ப உறவுகளுடன் தான் பிறக்க விரும்புவதாகவும், இதற்கு ஆரோக்கிய அண்ணை அருள் புரிய வேண்டும் என்று கூறுகிறார். (நூலாசிரியர் ஜேசுராஜன், திருமதி. ரேவதி உட்பட ஆத்ம குழுக்களை அழைத்துக் கொண்டு வேளாங்கண்ணி சென்று புனித ஆரோக்கிய அண்ணையிடம் ஜெப விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்)

ரேவதி அவர்கள் மேலும் கூறுகையில், தன் கம்பம் வீட்டிற்கு செல்ல விரும்புவதாகவும் அரசு மருத்துவமனையில் இறந்த பிறகு தன் வீட்டை அடையாளம் காண முடியவில்லை என்றும், யாராவது உயிருள்ளவர்கள் தன்னை அழைத்துக் கொண்டு தன் வீட்டை அடையாளம் காட்ட வேண்டும் என்று கூறுகிறார். இதை எழுதிக் கொண்டிருக்கும் ஜேசுராஜன் ஆகிய நான் இன்னும் இரண்டு மாதத்தில் கம்பம் செல்லும் பொழுது திருமதி.ரேவதி அவர்களை வீட்டிற்கு கூட்டி செல்கிறேன் என்று உறுதி கூறியிருக்கிறேன்.

திருமதி.மாலதி இறந்த சமயத்தில் என்ன நடந்தது?

திருமதி.மாலதி கம்பத்தில் வசித்திருந் திருக்கிறார். அவருக்கு சுமார் 35 வயது திருமணம் ஆகாதவர். அவருக்கு திருமணம் செய்து வைக்க அவர்கள் வீட்டில் வசதி இல்லை, இவர் பிளஸ்டூ மட்டுமே படித்தவர், ஒரு பேன்சி ஸ்டோரில் பணிபுரிந்து இருக்கிறார், கம்பத்தில் வசிக்கும் ஒரு ஆணிடம் காதல் வயப்பட்டு சில காலம் திருமணம் ஆகாமல் சேர்ந்து வாழ்ந்திருக்கிறார். ஒரு வருடத்தில் மாலதி கர்ப்பமாய் ஆகியிருக்கிறார். இதை அறிந்த அவர் கணவர் கருவை கலைக்க சொல்லி கட்டாயப்படுத்தி இருக்கிறார் இதில் மனம் உடைந்த மாலதி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இவரை காப்பாற்ற கம்பம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள், அங்கு சிகிச்சை பலனின்றி இறந்திருக்கிறார். அந்த இடத்தில் ஆத்மாக்களின் வழிகாட்டி திருமதி.கல்பனா அவர்கள் மாலதியுடன் பேசி, தான் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். நூலாசிரியர் ஆகிய நான் ஜேசுராஜன், மாலதி உட்பட மற்ற ஆத்மாக்களை அழைத்துக் கொண்டு வேளாங்கண்ணி சென்றேன் திரு.மாலதி விருப்பப்படி புனித ஆரோக்கிய மாதாவிடம் ஜெப விண்ணப்பம் வைத்தேன். திருமதி.மாலதியின் ஜெப விண்ணப்பம்: "புனித ஆரோக்கிய மாதாவே

என்னுடைய அடுத்த பிறவியில் நல்ல அன்பான அறிவான வசதி உள்ள பெற்றோருக்கு நான் ஆண் பிள்ளையாக பிறக்க வேண்டும் இதற்கு புனித ஆரோக்கியமாதா அருள் புரிய வேண்டுகிறேன்"

தற்சமயம் மாலதி அவர்கள் ஆத்மாக்களின் வழிகாட்டி திருமதி.கல்பனா அவர்களின் பாதுகாப்பில் மறுபிறவியை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கிறார். இந்த நூலை படிக்கும் நல்ல உள்ளம் படைத்தோர் நீங்களும் திருமதி.மாலதிக்காக புனித ஆரோக்கிய அண்ணையிடம் வேண்டுமாறு கேட்கிறார். திருமதி.மாலதி விரைவில் மறுபிறவிக்கு செல்ல புனித ஆரோக்கிய அண்ணையே அருள் புரிய வேண்டும்.

திரு.ஜெயலட்சுமி இறந்த சமயத்தில் என்ன நடந்தது?

திரு.ஜெயலட்சுமி அவர்கள் கம்பம் அருகே உள்ள உத்தமபாளையத்தை சேர்ந்தவர். தையல் தொழில் செய்பவர். வயது 40, புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர். கொரோனா காலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் இறந்திருக்கிறார். அச்சமயத்தில் அங்கிருந்த ஆத்மாக்களின் வழிகாட்டி திருமதி.கல்பனா அவர்கள் திரு.ஜெயலட்சுமியை தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். இன்று வரை திரு.ஜெயலட்சுமி அவர்கள் ஆத்மாக்களின்

வழிகாட்டி கல்பனா அவர்களின் பாதுகாப்பில் இருக்கிறார். திரு.ஜெயலட்சுமி அவர்கள் கூறுகையில், தன்னை ஒரு முறை வேளாங்கண்ணிக்கு கூட்டி செல்லுமாறு கேட்கிறார். புனித ஆரோக்கிய அண்ணையின் அருளால், பலர் மறுபிறவிக்கு சென்றதை இவர் கேள்விப்பட்டதாக கூறுகிறார். நூலாசிரியர் ஆகிய நான் அடுத்த முறை வேளாங்கண்ணி செல்லும்போது திரு.ஜெயலட்சுமியை கூட்டி செல்வேன் என்று உறுதி கூறியிருக்கிறேன். இதை படிக்கும் நல்ல உள்ளம் படைத்தோர் திரு. ஜெயலட்சுமிக்காக புனித ஆரோக்கிய அண்ணையிடம் கீழ்க்கண்டவாறு வேண்டிக் கொள்ளுமாறு கேட்கிறார், "புனித ஆரோக்கிய அண்ணையே, திரு.ஜெயலட்சுமி அவர்கள் அடுத்த பிறவியில் ஒரு அன்பான அறிவான வசதியான பெற்றோருக்கு ஆண் பிள்ளையாக பிறக்க அருள் புரிய வேண்டுகிறேன், திரு.ஜெயலட்சுமி விரைவில் மறுபிறவிக்கு செல்ல அருள் புரிய வேண்டும்."

திருமதி.மகாலட்சுமி இறந்த சமயத்தில் என்ன நடந்தது?

திருமதி.மகாலட்சுமி வயது 45 கம்பத்தில் தள்ளு வண்டியில் காய்கறி விற்கக் கூடியவர் தன்னுடைய 45 வயதில் தன் கணவருடன் கேரளாவிற்கு காய்கறி ஏற்றிக்கொண்டு லாரியில் சென்றபோது விபத்தில் இருவரும்

இறந்துவிட்டனர். இருவரையும் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருக் கின்றனர். இதை பற்றி ஆத்மா வழிகாட்டி திரு.கல்பனா கூறுகையில், திருமதி.ஜெயலட்சுமி ஆத்மாவை மட்டும் காண முடிந்தது, ஜெயலட்சுமி தன் கணவரின் ஆத்மாவிற்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை, இதைப் பற்றிய விவரம் திருமதி.ஜெயலட்சுமிக்கும் தெரியவில்லை. நூலாசிரியர் ஆகிய நான் திருமதி.ஜெயலட்சுமி விருப்பப்படி அடுத்த முறை வேளாங்கண்ணி செல்லும் பொழுது திருமதி.ஜெயலட்சுமி உட்பட ஆத்துமாக்களை வேளாங்கண்ணிக்கு கூட்டி சென்று அவர்களின் வேண்டுதலை நிறைவேற்று வேன் என்ற உறுதி கூறுறியிருக்றேன். திருமதி. ஜெயலட்சுமி, தன் வேண்டுதலை இவ்வாறு தெரிவிக்கிறார், “தான் இந்த பிறவியில் அதிகம் துன்பப்பட்டு விட்டதாகவும் தனக்கு அடுத்த பிறவி வேண்டாம்” என்றும் தனக்கு மறுபிறவி இல்லாமல் இறைவனிடத்தில் சேர புனித வேளாங்கண்ணி மாதா அருள் புரிய வேண்டும் என்று கேட்கிறார்.

ஆத்மாக்களின் வழிகாட்டி திரு சாமிநாதன் தான் ஆரம்பித்த புதிய ஆத்மாக்களின் மறு பிறவி மையத்தை பற்றி கூறு கிறார்:

திரு.சாமிநாதன் அவர்கள் ஆத்மாக்கள் உலகில் கடந்த ஐம்பது வருடங்களாக (சென்னை விநாயகபுரத்தில்) மறுபிறவி மையத்தை நடத்தி

வந்தார். அந்த இடத்தின் உரிமையாளரான ஆத்மா, அந்த இடத்தை காலி பண்ண சொல்லவே, அவர் தற்பொழுது (கதிர்வேடு சென்னையில்) ஒரு பெந்தகோஸ்தல் சர்ச்சில் தன் மறுபிறவி மையத்தை அமைத்திருக்கிறார். இதைப் பற்றி திரு.சாமிநாதன் கூறுகையில், இந்த பெந்தெகொஸ்தல் சர்ச்க்கு முதல் முறையாக சென்றபோது அங்கு சில ஆத்மாக்கள் தங்கி இருந்தனர். இவ்வாறு ஆத்மாக்கள் தங்கியிருக்கும் ஒரு இடத்தை மற்ற ஆத்மாக்கள் பயன்படுத்த மாட்டார்கள், ஆனால் இந்த பெந்தெகொஸ்தல் சர்ச் மூன்றடுக்கு கொண்டு பெரிய இடமாக இருப்பதால் திரு.சாமிநாதன் அவர்கள் அங்கு இருக்கும் ஆத்மாக்களிடம் தன் தேவையை கூறி இருக்கிறார். அதற்கு அங்கு தங்கி இருந்த ஆத்மாக்கள் சம்மதம் தெரிவித்தனர். திரு.சாமிநாதன், திரு. எபினேசர் அவர்களை முதல்முறையாக இங்குதான் சந்தித்தார். இந்த விஷயத்தில் எபினேசர் அவர்கள் அவருடன் தங்கி இருக்கும் மற்ற ஆத்மாக்களுடன் பேசி, அங்கு மறுபிறவி மையத்தை நடத்தும் சம்மதத்தை பெற்றிருக்கிறார். சாமிநாதன் அவர்கள் ஒரு மாற்று இடம் தேடிக் கொண்டிருக்கும் பொழுது, நான்(நூலாசிரியர்) இந்த இடத்திற்கு அவரைக் கூட்டிச் சென்றேன். இதற்காக திரு.சாமிநாதன் அவர்கள் எனக்கு நன்றி கூறுகிறார். மேலும் அவர்

தனக்கு இடம் கொடுத்த அங்கு தங்கி இருக்கும் ஆத்மாக்களான: திரு.ஆல்பர்ட், அவரின் மனைவி திருமதி.எஸ்தர், திரு.எட்வின், அவரின் மனைவி திருமதி.ரோஸ், திரு.எபநேசர், அவரின் மனைவி எமல்டா இவர்களுக்கும் நன்றி கூறுகிறார். மேலும் திரு.சாமிநாதன் கூறுகையில், தன்னுடன் இரண்டு வருடகாலமாக தொடர்ந்து பணியாற்றி வரும் திரு.ஜெரால்ட்(ஆத்மா) (நூலாசிரியரின் மச்சான்) அவர்களுக்கும் நன்றி கூறுகிறார். இந்த புதிய மறுபிறவி மையத்திற்கு அந்த சர்ச்சின் பெயரையே வைத்திருப்பதாக கூறுகிறார். அந்த மறுபிறவி மையத்தின் பெயர்:

தி பெந்தெகொஸ்தல் ஆத்மாக்களின்
மறுபிறவி மையம்

கேள்வி, பதில்கள்:

1)நாம் எல்லோரும் இறந்த பிறகு எதிர் கொள்ளபோகும் ஆச்சரியங்கள் என்ன ?

*நான் இறக்கவில்லை, இன்னும் உயிரோடுதான் இருக்கிறேன், என்று நினைப்பது.

*அசைவற்று கிடக்கும் தன் உடலைப் பார்த்து, குழப்பம் அடைதல். தன் உடலை தட்டி எழுப்ப முயற்சி செய்தல்.

*இறந்த உடலுக்கு செய்யப்படும் சடங்குகளை பார்த்து, நான் இறந்துவிட்டேன் என்று புரிந்து கொள்ளுதல்.

*உடல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களும், என்னை விட்டுப் போய்விட்டது என்று உணர்வது.

*குடும்ப உறவுகளை பார்க்க முடிகிறது, ஆனால் நான் பேசுவது, நான் தொடுவது, அவர்களுக்கு தெரியவில்லை. அவர்கள் என்னை கவனிக்கவும் இல்லை என்ற குழப்பம் சிறிது காலம் நீடிக்கும்.

*ஆத்மாக்களின் வழிகாட்டிகள் அல்லது இறந்த முன்னோர்களை சந்தித்தல்.

*ஆத்மாக்களின் வழிகாட்டிகள் அல்லது இறந்த முன்னோர்கள் வழியாக ஆத்மாக்கள் உலகத்தை புரிந்து கொள்ளுதல்.

*புதிதாக ஆத்மசரீரம் தனக்கு இருப்பதை புரிந்து கொள்ளுதல்.

*இந்த புதிய ஆத்மசரீரம் பழைய உடல் போல் இருப்பதை பார்த்து ஆச்சரியப்படுதல்.

*வயோதிகத்தில் இறந்தாலும் தற்போது மிக இளமையான ஆத்மஉடல் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுதல்.

*உயிரோடு இருக்கும் தன் உறவுகளுடன் தொடர்பு கொள்ள முடியாததை நினைத்து வருந்துதல்.

*இறந்த உறவுகளுடனும், இறந்த நண்பர்களுடனும், தொடர்பு கொள்ள முடிகிறது என்பதை நினைத்து மகிழ்தல்.

*ஆத்ம சரீரத்திற்கும் உணவு உடை தேவை என்பதை புரிந்து கொள்ளுதல்.

*என்னிடமிருந்த எண்ணங்கள், ஆசைகள், வெறுப்பு, குணங்கள், உணர்ச்சிகள். எல்லாம் இந்த ஆத்ம சரீரத்திலும் தொடர்கிறது என்பதை உணர்த்தல்.

*ஆத்மாக்கள் உலகில் என் உணர்வுகள், என் சிந்தனைகள், அனைத்தும் அருகில் உள்ள மற்ற ஆத்மாக்களுக்கு வெளிப்படையாக தெரிகிறது என்பதை நினைத்து ஆச்சிரியபடுதல்.

*இறந்த பிறகு நான் எங்கும் செல்லவில்லை, என் உறவுகளுடன் தான், அவர்கள் கண்ணுக்கு தெரியாமல் இருக்கிறேன், என்பதை உணர்த்தல்.

*என் மதம் கற்பித்த மோட்சம், நரகம், நித்திய தண்டனை, இவை போன்றவைகள் எதுவும் இல்லை என்று புரிந்து கொள்ளுதல்.

*இறந்த பிறகு தேவர்கள், கடவுள்கள், போன்றவர்களை காணவும் தொடர்பு கொள்ளவும் முடியாது என்பதை புரிந்து கொள்ளுதல்.

*உயிருள்ள உறவுகளுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில், ஆத்மாக்கள் குழுக்களுடன் வாழக்கற்றுக் கொள்ளுதல்.

*ஆத்மாக்கள் உலகில், எனக்கு அடுத்து வர இருப்பது மறுபிறவி மட்டும்தான் என்று புரிந்து கொள்ளுதல்.

2) ஆத்மாக்கள் வேறு ஒரு அலைவரிசையில் இதே பரிமாணத்தில் நம்முடன் தான் வாழ்கிறார்கள் என்பதை, ஏற்றுக்கொள்ள மறுக்கும், மத கோட்பாடுடன் உள்ளவர்கள், இறந்த பிறகு அவர்களின் நிலை என்ன?

ஆத்மாக்கள் உலகத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மத கோட்பாடுடன் வாழ்ந்தவர்கள், இறந்தபின், ஆத்மாக்கள் வேறு ஒரு அலைவரிசையில் இதே பரிமாணத்தில் இங்கே தான் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வார்கள். இருப்பினும் அவர்கள் மறுபிறவியை நம்புவதில்லை. இந்த ஆத்மாக்கள் நம்புவது என்னவென்றால், அவர்கள் இந்த ஆத்மாக்கள் உலக வாழ்க்கையை சொர்க்கத்திற்கு செல்லும் ஒரு வழியாக

பார்க்கிறார்கள். மேலும் அவர்கள், ஆத்மாக்களாக வாழும் காலத்தில் தங்களை தானே தூய்மைப்படுத்தி, சொர்க்கத்திற்கு செல்ல முடியும் என்றும் கருதுகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், ஆத்மாக்கள் உலகத்தில் நம்மை நாமே புனிதப்படுத்திக் கொள்ள எந்த வாய்ப்பும் இல்லை. மாறாக அங்கு நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஒரே வாய்ப்பு, மறு பிறவிக்கு செல்வது மட்டுமே. ஆகையால் இவர்களின் மறுபிறவி நேரம், மற்றும், எந்த பெற்றோர்ற்றிற்கு பிறக்கப் போகிறார்கள் என்பது, அவர்களின் கர்மாவால் முடுவுசெயயப்படும்.

3) நாம் இறந்த பிறகு எவ்வளவு நேரம் கழித்து நாம் இறந்து விட்டோம் என்று நமக்குத் தெரியும்?

நாம் இறந்து விட்டோம் என்று நமக்குத் தெரிய, ஒரு வினாடியில் இருந்து 49 நாட்கள் வரை வேறுபடலாம். நல்ல சுயநினைவோடு இறப்பவர்கள், தாங்கள் இறந்த உடனே நாம் இறந்து விட்டோம் என்று புரிந்து கொள்வார்கள். சரியான சுயநினைவின்றி இறப்பவர்கள் சில மணி நேரத்திலிருந்து 49 நாட்கள் வரை, தாங்கள் இறந்து விட்டோம் என்பதை புரிந்து கொள்ள எடுத்துக் கொள்வார்கள்.

உடனடி உணர்வு (ஆன்மீக ரீதியாக முன்னேறியவர்களுக்கு)தியானத்தில் ஆழ்ந்த அனுபவமுள்ளவர்களும் (ஞானிகள், புத்தர்

போன்றவர்கள்) தங்கள் மரணத்தைக் உடனடியாக உணரலாம். அவர்கள் சாந்தமாக மரணத்தை ஏற்றுக்கொண்டு, உடல் வாழ்க்கையின் நிலையின்மையை புரிந்து கொள்வார்கள்.

சாதாரண மக்கள், முதலில் அவர்கள் இறந்ததை உணராமல், உயிருடன் இருப்பது போல உணரலாம். சிறிது நேரம் கழித்து (பொதுவாக 49 நாட்களுக்குள்), பொருள் உலகத்துடன் (material world) தொடர்பு கொள்ள முடியாது. என்பதைக் காணும்போது, தாங்கள் இறந்ததை உணரத் தொடங்குகிறார்கள்.

தாமதமான உணர்வு: (உலகப்பற்றில் ஆழ்ந்தவர்கள்)

உலகப்பற்றும் ஆசைகளும் அதிகமான வர்கள், தங்கள் மரணத்தை உணர தாமதமாகலாம். சில ஆத்மாக்கள், தாங்கள் இறந்துவிட்டதை உணராமல் தங்கள் வீட்டிற்கு அருகில் அல்லது பிரியமான வர்களிடம் நிலைக்கலாம்,. அவர்கள் உணவு உண்வதற்கும், குடிப்பதற்கும், மற்ற வர்களுடன் தொடர்பு கொள்ள முடியாததை உணரும்போதும் மட்டுமே, தாங்கள் இறந்து விட்டோம் என்ற உணர்விற்கு வருவர்.

4) நாம் இறந்தவுடன் என்ன நடக்கும்?

நாம் இறக்கும்போது, ஆத்ம வழிகாட்டிகள் யாரேனும் அருகில் இருந்தால், ஆத்மாக்கள் வெகு விரைவாக ஆத்ம வழிகாட்டிகளின் உதவியுடன்

தங்கள் புது உலகத்தை புரிந்து கொள்வார்கள். மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் தங்கள் உறவுகளுடன் அவர்கள் சேருவதற்கு ஆத்ம வழிகாட்டிகள் உதவுவார்கள். ஒருவேளை இறந்தவர்களின் ஆத்மாக்களை அவர்களின் உறவுகளுடன் சேர்க்க முடியாத நிலையில், பல குழுக்களாக வாழும் ஆத்மாக்களுடன் தங்க வைப்பார்கள்.

ஒருவர் இறந்த பிறகு, ஆத்மா வழிகாட்டிகள் (SoulGuides) ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றனர். அவர்கள் ஆத்மாக்களை வழிநடத்தி, ஆறுதல் அளித்து, அதன் பயணத்தை எளிதாக்குவார்கள். சில ஆத்மாக்கள் உடலை விட்டு பிரிந்து விட்டோம் என்பதை உணராமல் இருப்பார்கள், அவர்களை ஆத்மாக்களின் வழிகாட்டிகள் மெதுவாக அதை உணரச் செய்வார்கள்.

5) நாம் இறந்து விட்டோம் என்று உணர்ந்த பிறகு நாம் முதலில் செய்வது என்ன?

நாம் இறந்து விட்டோம் என்று தெரிந்த பிறகு நாம் முதலில் செய்வது, நாம் எங்கு இருக்கிறோம் என்று புரிந்து கொள்வோம். பிறகு நமக்கு பயமும், ஆச்சரியமும், தொடரும். முதலில், ஆத்மா தன் உடலை விட்டு பிரிந்துவிட்டதை உணர வேண்டும். சிலர் உடலை பார்த்து அதனுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கலாம், ஆனால் எந்த பதிலும்

வராது என்பதால் உண்மை புரியும். உடலை பிரிந்து விட்டோம் என்ற உணர்வு மெதுவாக வரும்.

6)வழிகாட்டிகளை சந்தித்தல்:

ஆத்மா வழிகாட்டிகள் (Soul Guides) அல்லது முன்னோர்கள் உதவிக்கு வருகின்றனர். அவர்கள் மனம் அமைதியாக இருக்க வழிவகுப்பார்கள், மற்றும் ஆத்மாக்கள் உலகத்தில் வாழ்வது எப்படி என்று கற்று கொடுப்பார்கள்.

7)ஆத்மாக்கள், அவர்கள் இறந்த சமயத்தில் அவர்களின் உடல் புதைக்கப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட இடத்திற்கு செல்வார்களா?

சில ஆத்மாக்கள் தங்கள் இறந்த சமயத்தில், அவர்கள் உடலை அடக்கம் செய்யும் இடத்திற்கு தங்கள் உறவுகளுடன் சென்று வருவார்கள், அனால் எந்த ஒரு ஆத்மாவும், அடக்கம் செய்யப்பட்ட இடத்திலோ, மயானத்திலோ, தங்குவதில்லை மேலும் அவர்களின் நினைவுநாளன்று உறவினருடன் கலந்து கொள்வார்கள்.

8) ஆத்மாக்களுக்கு உறக்கம் இருக்கிறதா?

ஆம், ஆத்மாக்களும் நம்மைப் போல உறங்குவார்கள். ஆத்மாக்கள் உறங்கும் போது, அவர்களை சுற்றி நடக்கும் நிகழ்வுகளை உணர முடியும். ஆனால், நம்மை சுற்றி என்ன நடக்கிறது என்பதைக் கவனிக்க முடியாது. இறந்த பின்னர், ஆத்மாக்கள் சில நாட்கள் குழந்தைகள் போல

நீண்ட நேரம் உறங்கலாம். பின்னர், அவர்கள் படிப்படியாக உறங்கும் நேரத்தை குறைத்துக் கொள்வார்கள். இருப்பினும், உறங்கும் நிலையில் இருந்தாலும், அவர்களைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை உணர முடியும்

9)ஆத்மாக்கள் பூமியில் வாழ்ந்த காலத்தின் அனைத்து நிகழ்வுகளையும் நினைவில் வைத்திருப்பார்களா?

ஆத்மாக்கள் பூமியில் வாழ்ந்த காலத்தின், அனைத்து நிகழ்வுகளையும் நினைவில் வைத்திருக்க முடியாது, ஆனால் முக்கியமான மற்றும் ஆழ்ந்த உணர்வுப் பூர்வமான அனுபவங்கள் அவர்கள் நினைவில் நிலைத்திருக்கலாம்.

வாழ்க்கையின் முக்கிய தருணங்கள்:

மகிழ்ச்சி, துயரம், அன்பு, பிணைப்பு, போன்ற ஆழ்ந்த உணர்வுகளுடன் கூடிய சம்பவங்கள் நினைவில் நீடிக்கலாம். தாங்கள் செய்த நற்கருமங்கள், தவறுகள் மற்றும் வாழ்க்கையின் முக்கிய பாடங்கள், அவர்களுக்கு நினைவில் இருக்கலாம். ஆத்மா மறுபிறப்புக்குச் செல்லும்போது, புதிய வாழ்க்கைக்குத் தேவையான தகவல்களை மட்டும் எடுத்துக்கொண்டு, பழைய நினைவுகள் மறந்துவிடும்.

10)நாம் இறந்த உடனேயே நமக்கு மறுபிறவி கிடைக்க வாய்ப்புள்ளதா?

சிறு குழந்தைகள், சிறுவர், சிறுமியர், கொலை செய்யப்பட்டவர்கள், விபத்தில் உயிரிழந்தவர்கள், அல்லது தற்கொலை செய்தவர்கள் ஆகியோருக்கு, பூமியில் திரும்பி மீண்டும் வாழ வேண்டும் என்ற ஆழ்ந்த ஆசை காரணமாக, அவர்களுக்கு விரைவில் மறுபிறவி எடுக்க அதிக வாய்ப்பு இருக்கிறது.

11)இறந்தவர்கள் தாங்கள் இறந்ததை நினைத்து அழுவார்களா?

இறந்தவர்கள் தாங்கள் உயிரிழந்ததை அறிந்தவுடன், மனதில் குழப்பம், பயம், மற்றும் ஆச்சரியம் ஏற்படலாம். ஆரம்பத்தில், அவர்கள் தாங்கள் இறந்துவிட்டோம் என்பதைக் கொஞ்சம் நேரம் உணரமுடியாது. உடலினை விட்டுச் செல்லும் உணர்வு புதிதாக இருந்தாலும், அவர்கள் வாழ்க்கையில் பழக்கப்பட்ட அலைவரிசையை விட்டு பிரிவதை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கும்.

இறந்தவுடன் உள்ள உணர்வுகள் பயமும் ஆச்சரியமும்:

மரணத்திற்குப் பின், சில ஆத்மாக்கள் தாங்கள் இன்னும் உயிரோடு இருக்கிறோம் என்று நினைக்கலாம். தங்களின் உடல் செயலற்ற நிலையில் இருப்பதைக் காணும் போது, பயமும்

குழப்பமும் ஏற்படும். ஆத்மாக்கள் தங்கள் உறவினர்களின் அழுகையை பார்க்கும்போது, ஏன் அவர்களால் என்னைக் காண முடியவில்லை? என்ற கேள்விகள் தோன்றலாம்.

தாங்கள் இறந்து விட்டோம் என்பதை உணரும் தருணம்:

சில நேரங்களில், மரணத்திற்குப் பிறகு, சத்தம் கேட்காமல் இருப்பது, உடலுடன் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பது போன்ற அனுபவங்கள் உருவாகும். இதன் மூலம், அவர்கள் தாங்கள் உடலை விட்டு பிரிந்துவிட்டோம் என்று புரிந்து கொள்வார்கள். இதை உணர்ந்ததும், சிலர் துக்கமடைந்து அழலாம். அவர்கள் தங்கள் பழைய வாழ்க்கையை நினைத்து வேதனை அடையலாம்.

ஆத்மாக்கள்வுலகை அறிந்தவர்கள் அழுவது இல்லை:

ஆன்மீக விழிப்புணர்வு பெற்றவர்கள், அல்லது மரணத்திற்கு பின் ஆத்ம உலகம் பற்றிய தெளிவான புரிதல் உள்ளவர்கள் துயரப்படமாட்டார்கள். அவர்கள் உடல்லிருந்து பிரிவு என்பது ஒரு மாற்றம் மட்டும் தான் என்று உணர்வார்கள். அவர்கள் அடுத்த பயணத்தை எளிதாக ஏற்றுக்கொள்வார்கள் மற்றும் அமைதியாக முன்னேறுவர்.

வழிகாட்டிகள் மற்றும் முன்னோர்களின் உதவி:

சில சமயங்களில், ஆத்ம வழிகாட்டிகள் (Soul Guides) அல்லது முன்னோர்கள் புதிய ஆத்மாவை வரவேற்க முடியும். அவர்கள் ஆத்மாவை துன்பத்திலிருந்து வெளியேற்ற, மற்றும் அடுத்த வாழ்க்கை நிலையை புரிந்துகொள்ள உதவுவார்கள். இதன் மூலம், ஆத்மா, துக்கம் அல்லது அழுகை என்ற உணர்வுகளிலிருந்து விடுபடும்.

12)ஆத்மாக்கள் பெரும்பாலும் கனவு உலகில் தான் வாழ்கிறார்கள் என்பது உண்மையா?

ஆத்மாக்கள் கனவு உலகில் வாழ்கிறார்களா? உண்மை என்ன? இல்லை, ஆத்மாக்கள் முழுமையாக கனவு உலகில் வாழ்கிறார்கள் என்று கூறுவது உண்மையல்ல. நம் பார்வைக்கு, நம் புரிதலுக்கு, ஆத்மாக்கள் கனவு உலகில் வாழ்வதுபோல தோன்றலாம். அனால் ஆத்மாக்கள் வாழும் அலைவரிசையில் அவர்களுக்கு அதுவே உண்மை.

கனவு உலகம் மற்றும் ஆத்மாகள் (வாழும் அலைவரிசையில்) உலகம் வேறுபாடு:

கனவு உலகம் (Dream World) என்பது முழுமையாக மனதை சார்ந்தது. ஆனால் ஆத்மாக்கள் உலகம் நாம் வாழும் அதே பரிமணத்தில் உள்ள உயற் அலைவரிசை. ஆத்மாக்கள் அவர்கள் நினைப்பதன் அடிப்படையில் அந்த உலகத்தை

அனுபவிக்க முடியாது, அவர்களுக்கும் அந்த அலைவரிசையின் வதிமுறைகள் உண்டு.

13)ஆத்மாக்கள், அவர்கள் வாழ்ந்த காலத்தின் இறைநம்பிக்கையை தொடர்கிறார்களா?

ஆத்மாக்களின் இறைநம்பிக்கை மற்றும் மறுபிறவியுடன் அதன் தொடர்பு:

மரணத்திற்குப் பிறகு, ஆத்மாக்களின் மதம் சார்ந்த இறை நம்பிக்கைகள் தொடர்ச்சியாக இருந்துவிடாது.

மறுபிறவி நம்பிக்கையின் நிலைத்தன்மை:

மறுபிறவி என்பது ஒரு உண்மை என்பதால், மரணத்திற்குப் பிறகு அதை ஆத்மாக்கள் உணர்வார்கள். மறுபிறவி ஒரு சுழற்சி (Cycle) ஆக இருப்பதால், மனிதர்கள் மறுபிறவி எடுப்பதற்கான உண்மை விளக்கங்களை ஆத்மாக்கள் புரிந்துகொள்வார்கள். மறு பிறவியை பொறுத்தவரை எந்தவித மத பாகுபாடும் இருக்காது.

மறுபிறவியியை நம்பாதவர்களுக்கு ஏற்படும் அனுபவம்:

சிலர் மறுபிறவியை நம்பாமல் வாழ்ந்திருக்கலாம். அவர்கள் மரணத்திற்குப் பிறகு, தாங்கள் இன்னும் இருக்கிறோம், ஆனால் உடல் இல்லை என்று உணரும் போது, இது அவர்களுக்கு பெரிய அதிர்ச்சி ஆகும். அத்துடன், "இது என்ன? மறுபிறவி உண்மைதானா?" என்ற குழப்பம்

ஏற்படும். அவர்கள் நினைத்திருந்தது போல் முடிவும், வெறுமையும் கிடையாது என்பதால், அவர்கள் பயப்படலாம், திக்குமுக்காடலாம்.

வழிகாட்டிகள் ஆத்மாக்களுக்கு உதவு வார்கள்:

மறுபிறவியை நம்பாத ஆத்மாக்களுக்கு வழிகாட்டிகள் (soul Guides) வழிகாட்டும் பணி மேற்கொள்வார்கள். அவர்கள் ஆத்மாக்கள் வாழும் நிலையை விளக்கி, இது ஒரு தற்காலிக இடம் என்று புரிய வைப்பார்கள். இதனால், அந்த ஆத்மாக்கள் தங்களது பயம், குழப்பம், மற்றும் அதிர்ச்சியை விடுவித்து, மறுபிறவிக்கான பயணத்தை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது அவர்களின் மத நம்பிகையில் தொடரலாம்.

14)மரணத்திற்குப் பிறகு, நாம் இறக்க வில்லை என்று நினைக்கும் மனப் போராட்டம் உண்டா?

ஆம், மரணத்திற்குப் பிறகு, ஆத்மாக்கள் உலகத்தைப் பற்றிய முழுமையான புரிதல் இல்லாத ஆத்மாக்களுக்கு, தாங்கள் இன்னும் உயிரோடு இருப்பதாக நினைக்கும் மனக்குழப்பம்(Cognitive Dissonance) ஏற்படும். இது சிறிது நேரத்திலிருந்து சில நாட்கள் வரை நீடிக்கலாம்.

திடீர் மரணம் மற்றும் உணர்வியல் மாற்றம்:

மரணம் திடீரென்று ஏற்பட்டால், உதாரணமாக விபத்து, கொலை அல்லது தற்கொலை

போன்றவற்றால் மரணித் தவர்கள், தாங்கள் இறந்து விட்டோம் என்பதைக் கணிக்க முடியாமல் இருக்கலாம். நாமே உயிரோடு இருக்கிறோம் என்ற நினைப்பில் உறுதி கொள்ளலாம். பழைய வாழ்க்கையின் நினைவுகள் மிகக் காட்சிப் படமாக தோன்றும், இதனால் உண்மையோ, கனவோ என்று புரியாமல் இருக்கும். இயல்பாக இறந்தவர்களுக்கு கூட, உடலை விட்டு பிரியும் அந்த முன்னோடிய அனுபவம் (Transition Phase) குழப்பம் தரலாம். "நான் இன்னும் உயிரோடு இருக்கிறேனா?" என்ற தன்நிலை உணர்வு ஏற்படலாம்.

15)ஆத்மா உலகத்தைப் பற்றிய அறிவு கொண்டவர்களுக்கு என்ன நடக்கும்?

ஆன்மீக விழிப்புணர்வு அதிகமுள்ளவர்கள், தாங்கள் உடல் இல்லாத நிலைக்கு சென்று விட்டோம் என்பதை விரைவாக உணர்வார்கள். அவர்கள் தங்களது பயணத்தை நிதானமாக ஏற்றுக் கொள்வார்கள், அச்சமில்லாமல் அதை அனுபவிக்கவும் செய்வார்கள். ஆனால், ஆத்மாக்கள் உலகத்தை பற்றி புரிதல் இல்லாத ஆத்மாக்களுக்கு மட்டும் குழப்பம் நீடிக்கும்.

16)ஆத்மா உலகத்திற்கான ஏற்ப்பு எப்படி உருவாகும்?

மரணத்திற்குப் பிறகு புரிதல், அந்த ஆத்மாவுக்கு புதிய உண்மைகளை புரிய வைப்பது மிக

முக்கியம். இதற்காக, ஆத்மாக்களின் வழிகாட்டிகள் (soul Guides) உதவுவார்கள்.

வழிகாட்டிகளின் பங்கு:

முதலில் அவர்கள் ஆத்மாவை அமைதிப்படுத்துவார்கள். பயம், பதற்றம், சோகம், வியப்பு ஆகியவை குறையும். தாங்கள் இறந்து விட்டோம் என்பதையும், ஆனால் இருப்பதை தொடர்கிறோம் என்பதையும் உணர்த்துவார்கள். இது பெரும்பாலான ஆத்மாக்களுக்கு பெரும் ஆச்சரியமாக இருக்கும். சில ஆத்மாக்கள் ஒரே நிலையில் நிலைத்துவிடும் (Stuck Souls) சில ஆத்மாக்கள் தங்கள் மரணத்தை ஏற்க மறுக்கலாம். பழைய வாழ்க்கையின் செயல்களைத் தொடர்வதற்காக, மனிதர்களை தொடர்புகொள்கின்ற முயற்சி செய்வார்கள். தங்கள் குடும்பத்தாரை, வீடுகளை, பழைய இடங்களை சுற்றிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் மனிதர்களால் பார்க்க முடியாது என்பதால், இது மேலும் பயம் மற்றும் குழப்பத்துக்கு வழிவகுக்கும். இந்த நிலையை மாற்ற, வழிகாட்டிகள் அவர்களுக்கு ஆத்மாக்கள் உலக உண்மைகளை விளக்குவார்கள்.

17) நாம் இறக்கும் போது, ஏற்கனவே இறந்த நமது குடும்பத்தார்கள் அருகில் இருப்பார்களா?

ஆம், நாம் மரணிக்கும்போது, முன்னே இறந்த நம் குடும்பத்தாரை (Ancestors) நாம் சந்திக்கிறோமா அல்லது வேறு ஆத்மாக்களின் வழிகாட்டிகளே வருவார்கள் என்பதை பல அம்சங்கள் தீர்மானிக்கின்றன.

18)இறந்த முன்னோர்களை நாம் சந்திக்க வாய்ப்புள்ளதா?

நாம் இறக்கும் போது, நமக்கு முன் இறந்த, நம்முடைய உறவினர்கள், நண்பர்கள், பெற்றோர், மற்றும் பிற உறவுகள், மறுபிறவி அடையாமல் இருந்தால், முக்கியமாக, அவர்கள் நம் அருகில் இருந்தால், அவர்கள் நம்மை வரவேற்க வாய்ப்பு இருக்கிறது. ஆத்மாக்கள் மறுபிறவி எடுத்து விட்டால், அவர்களை சந்திக்க முடியாது. ஆனால் அவர்கள் ஆத்ம உலகில் உள்ளவராக இருந்தால், அருகில் இருந்தால், அவர்கள் நம்மை

பார்க்கலாம், பேசலாம், நம்மை சமாதானப்படுத்தலாம்.

19)ஆத்மா வழிகாட்டிகள் (soul Guides) எப்போதும் இருப்பார்களா?

மிகவும் அதிகமான சந்தர்ப்பங்களில், நம்மை சந்திக்க வருபவர்கள் ஆத்மா வழிகாட்டிகள் (soul Guides) ஆவார்கள். அவர்கள் நம்மை ஆத்ம உலகிற்கு அழைத்துச் செல்வதற்கும், மரணத்திற்கு பிறகு ஏற்படும் குழப்பத்திலிருந்து நம்மை விடுவிக்கவும் முக்கிய பங்காற்றுவர். அவர்கள் நம்மை அமைதியாக, நம் அடுத்த பயணத்திற்கான தெளிவை கொடுப்பார்கள். சில நேரங்களில், நம் முன்னோர்களும் வழிகாட்டிகளாக செயல்படலாம், ஆனால் வழக்கமாக உண்மையான வழிகாட்டிகளே முதல் முறையாக நம்மை சந்திப்பார்கள். ஆத்மா வழிகாட்டிகளை நம் உறவினர்களும், நண்பர்களும் அழைத்து வர வாய்ப்புள்ளது.

20)இறந்த குடும்பத்தாரின் வருகை எந்த சூழ்நிலையில் ஏற்படும்?

அவர்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை பொறுத்து, அவர்களை நாம் பார்க்க வாய்ப்பு இருக்கிறது. ஆத்ம உலகில் தங்கி இருப்பவர்கள், நாம் இறக்கும் போது நம்மை வரவேற்கலாம். மறுபிறவி எடுத்துவிட்டால் அவர்களை சந்திக்க முடியாது. நாம் இறக்கும்

இடத்தில் அவர்கள் இல்லை என்றாலும் அவர்களை சந்திக்க முடியாது.

நம் முன்னோர்களை சந்திக்க இயலாத சூழ்நிலைகள்:

அவர்கள் மறுபிறவி எடுத்து விட்டால், அவர்கள் ஆத்ம உலகில் இல்லை என்பதால், நாம் அவர்களை சந்திக்க முடியாது. ஆகவே, நம்முடைய உறவினர்கள் ஒவ்வொரு முறையும் நம்மை வரவேற்க வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

21)ஆத்மாகளின் குழுக்கள் (Soul groups) என்றால் என்ன?

பெரும்பாலும் ஆத்மாக்கள் ஆத்ம உலகத்தில் இரண்டு விதமாக தங்கி வாழ்கிறார்கள்.
1.உயிருடன் இருக்கும் தங்கள் கும்பத்துடன் இருப்பார்கள்

2.ஆத்மாகளின் வழிகாட்டிகள் பராமரிப்பில் குழுக்களாக இருப்பார்கள்.

22)நாம் தனியாக (தனிமையில்) இறந்தால் என்ன நடக்கும்?

மரணம் என்பது மனித வாழ்க்கையின் மிக முக்கியமான மாற்றம். சிலர் குடும்பத்தினரால் சூழப்பட்டு அமைதியாக இறக்கிறார்கள், ஆனால் சிலருக்கு தனிமையில் மரணம் நேரலாம். இது நம்முடைய ஆன்மாவுக்கு எப்படி பட்ட அனுபவமாக இருக்கும் என்பதையும், அதன்

பின்விளைவுகளையும், புரிந்து கொள்ள இங்கே விரிவாக பார்ப்போம்.

மரணத்தின் தருணம் தனிமையில் ஏற்பட்டால்...

நாம் தனியாக இருக்கும்போது மரணம் நிகழ்ந்தால், முதல் நிலையில், திகைப்பு, குழப்பம், பயம் போன்ற உணர்வுகள் உண்டாகும். “நான் எங்கே இருக்கிறேன்?”, “எனக்கு என்ன ஆனது?” என்ற கேள்விகள் மனதில் தோன்றும்.

23) தனிமையான ஆத்மா செய்வது என்ன?

தாங்கள் மரணமடைந்ததை உணர்ந்த பிறகு, அந்த ஆத்மா தனியாக இருக்கிறோம் என்பதை உணரத் தொடங்கும். பிறகு, அந்த ஆன்மா தனது உறவுகள், நண்பர்கள், அறிந்த முகங்களைத் தேடிக் கொண்டு அலையத் தொடங்கும். இது ஒரு உணர்ச்சி நிரம்பிய தேடல் அன்பையும் பாதுகாப்பையும் தேடுவது போல.

வழிகாட்டிகள் (soulGuides) முக்கியமான துணை:

இவ்வாறு தனிமையில் அலையும் ஆத்மாவை, வழிகாட்டிகள் அல்லது மற்ற ஆத்மாக்கள் கவனித்து அணுகுவார்கள். அவர்கள், ஆத்மாவுக்கு அமைதி அளிப்பார்கள், தாங்கள் மரணமடைந் துள்ளதை விளக்குவார்கள், தவறான இடங்களில் சிக்காமல், உண்மையான பாதையில் செல்ல வழிகாட்டுவார்கள். சில நேரங்களில், அந்த ஆத்மா தங்கள் இறந்த உறவுகளை சந்திக்க ஆசைப்படுவார்கள்.

வழிகாட்டிகள் அந்த உறவுகளை தேடி, தொடர்பு ஏற்படுத்தி, மீண்டும் சந்திப்பதற்கு உதவுவார்கள். அல்லது, அவர்கள், அதே நிலையில் இருக்கும் மற்ற ஆத்மாக்கள் உள்ள குழுக்களில் சேர்த்துவைக்கப்படுவார்கள்.

24)மருத்துவர்கள் "இறந்துவிட்டார்" என்று அறிவித்த பிறகு சிலர் உயிர் பெற்று வருகிறார்கள் இது எப்படி சாத்தியம்?

மருத்துவர்கள் ஒருவர் இறந்துவிட்டார் என அறிவிக்கும்போது, அவர்கள் உடலின் இயற்பியல் செயல்பாடுகளை மட்டுமே கணித்து முடிவை அறிவிக்கிறார்கள் இதில் இதயத்தின் துடிப்பு, மூச்சின் இயக்கம், மூளையின் electrical activity ஆகியவை அடிப்படையாகின்றன. ஆனால், ஆத்மா உடலை விட்டு பிரிந்ததா இல்லையா, என்பதை மருத்துவ சாதனங்கள் உணர இயலாது. இதுவே மிக முக்கியமான அம்சம். சில சமயங்களில், ஆத்மா உடலை விட்டு முழுமையாக விலகாமல், ஒரு இடைநிலைக்குள் நுழைகிறது இந்நிலையில், அது இன்னும் ஒரு வாய்ப்பிற்காக காத்திருக்கும், அல்லது தவிர்க்க முடியாத ஆத்ம நிகழ்வுகள் காரணமாக உடலுக்குள் திரும்பவும் நுழைகிறது. இதுதான் மருத்துவ ரீதியாக மரணமாக அறிவிக்கப்பட்ட ஒருவரின் உடல் மீண்டும் உயிர் பெறும் ("Near-Death Revival") நிகழ்வுகளுக்கான ஆன்மீக விளக்கம். இது மரண அனுபவம் (Near-Death Experience NDE) என்றும்

அழைக்கப்படுகிறது, மேலும் இது அனுபவித்த நபர்களால் பிறகு விவரிக்கப்படும் ஒளிச்சுடர், அமைதி, முன்னோர்கள் தோற்றம், உடலை விட்டு வெளியேறும் அனுபவம் போன்ற வைகள் எல்லாம் அவர்களின் கற்பனையே. முடிவில், மருத்துவ அறிவியல் மரணத்தை அறிவிக்க ஒரு அளவிற்கே செல்லும்; ஆன்மா அதற்கும் அப்பாற்பட்ட ஒரு உண்மை. ஆத்மா விட்டுவிடாமலே, சிலசமயம் உடலை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் இதுவே அதிசயமாகத் தோன்றும், மரணத்திலிருந்து மீட்பு நிகழ்வுகளின் ஆன்மீக உண்மை.

25)ஆத்மாக்களின் உலகம் எங்கு இருக்கிறது?

"ஆத்மா உலகம்" என்பது எங்கோ பிரத்தியேகமாக தனித்துவமாக இருக்கும் இடம் அல்ல. உண்மையில், அது நாம் இருக்கும் அதே பரிமணத்தில் உள்ள, ஒரு உயற் அலைவரிசை தான். நாம் நினைப்பது போல் எங்கோ வானத்தில் அல்லது வேறொரு பிரபஞ்சத்தில் இருக்கவில்லை, அவர்கள், நாம் வாழும் இந்த பூமியிலேயே, மனிதர்களுடன் இரண்டற கலந்து இருக்கின்றனர். ஆனால் நாம் உணரவும் மற்றும் பார்கவும் இயலாத ஓர் உயற் அதிர்வெண் நிலைக்குள் வாழ்கின்றனர்.

ஆத்மா உலகம் ஒரு உயர் அதிர்வெண்:

ஆத்மாக்கள் தம்முடைய உடலை விட்டு பிரிந்த பிறகு, அவர்கள் நேரடியாகக் கண்ணுக்குத் தெரிவதில்லை, ஆனால் இடம், காலம், தூரம் போன்ற விதிகளுக்கு கட்டுப்பட்டு, நமக்கு அருகில் இருக்க முடியும். அலைவரிசை (frequency) நிலைகள் வேறுபடுவதால் தான், நம்மால் அவர்களை உணர முடியவில்லை. ஆத்மாக்கள், பல நேரங்களில் தாங்கள் விரும்பிய இடங்களிலும், தங்கள் பிரியமான வர்களுடன், நினைவுகள் நிறைந்த இடங்களில் இருக்க விரும்புகிறார்கள்.

மனிதர்கள் மற்றும் ஆத்மாக்கள் ஒரே பரப்பில்:

ஆத்மாக்கள் பூமியின் மேற்பரப்பிலேயே இருக்கிறார்கள், ஆனால் ஒரு வேறு அலைவரிசையில். அவர்கள் நம்மைப் பார்க்கவும் உணரவும் முடியும், ஆனால் நாம் அவர்களை உணர்வது மிகவும் அபூர்வம். இது தான், சில சமயங்களில் நம்மால் உணரக்கூடிய “அறிகுறிகள்” அல்லது “உணர்வுகள்” உருவாகும் காரணம்.

26)ஆத்மாக்களுக்கு உடல் என்ற ஒன்று உண்டா?

ஆத்மாக்களுக்கு உடல் என்ற ஒன்று உண்டு, அது எவ்வாறு இருக்கும் என்று மனிதர்களாகிய நமக்கு புரிந்து கொள்ள இயலாது. ஆனால் ஆத்மாக்கள் ஒருவருக்கு ஒருவர், உயிருள்ள

மனிதர்களின் தோற்றத்திலே தங்களை பார்கின்றனர்.

ஆத்மாக்கள் தங்களின் ஆத்மசரரீரம், உயிருள்ள உடல்சரிரீரம் போலவே

இருபதாக கூறுகிறார்கள். பல சந்தர்பங்களில், ஆத்மாக்கள் பொது வெளியில் இருக்கும்போது, அவர்களால் உயருள்ள மனிதர்கள் யார், ஆத்மாக்கள் யார், என்று வேறுபடுத்தி பார்க்க இயலாமல் குளம்பிபோகிறார்கள்.

ஆத்மாக்கள் தங்கள் ஆத்மசரிரதிற்கும் உணவு தேவை என்று கருதுகிறார்கள்.ஆத்மாக்களும் நம்மைபோல் உணவு சமைத்து உண்கிறார்கள்.

27)ஆத்ம உலகம் இறைத்தன்மை கொண்டதா? மற்றும் ஆத்மாக்களுக்கு இறைவனுடன் தொடர்பு கொள்ள இயலுமா?

பொதுவாக நம்மிடையே ஒரு தவறான எண்ணம் உள்ளது — ஆத்ம உலகம் என்பது முழுமையாக தெய்வீகமும், இறைத்தன்மை நிறைந்ததுமாக இருக்கும் என்று. ஆனால் உண்மையில், ஆத்ம உலகம் என்பது நம் பரிமாணத்தின் வேறு ஒரு உயற் அலைவரிசை மட்டுமே. அது இறைத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

ஆத்ம உலகம் ஒரு ஆன்மீக இடைநிலை:

ஆத்மா உலகம் என்பது இறைவனின் அருகாமை நிறைந்த பிரபஞ்சமோ, அல்லது பரம தெய்வீக உலகமோ அல்ல. இது, உடலை விட்டு பிரிந்த ஆத்மாக்கள் தங்கள் பயணத்தில் தங்கும் ஒரு இடைநிலை.

28) ஆத்மாக்களின் உடலுக்கு வயது உண்டா? ஆத்மாக்களுக்கு வயது என்பது இல்லை.

29)ஆத்மாக்களின் வயது உடலமைப்பு எவ்வாறு முடிவெடுக்கப்படுகிறது?

ஆத்மாக்களின் உடலமைப்பு தோற்றம் இவைகள் அவர்களின் எண்ணம் போல் அமைகிறது உதாரணத்திற்கு வயதாகி இறந்த ஒருவர் இளமையாக தன்னை மாற்றிக் கொள்ள முடியும்.

30)கொலை குற்றம் செய்தவர்களும் மற்றும் அதற்கு சமமான குற்றம் புரிந்தவர்களும், சாமானியர்களும் இறந்த பிறகு வேறு வேறு ஆத்ம உலகத்திற்கு செல்கிறார்களா?

கொலை குற்றம் செய்தவர்களும் அதுக்கு சமமான குற்றவாளிகளும் இறந்த பிறகு மற்ற ஆத்மாக்களுடன் இல்லை. அந்த ஆத்மாக்கள், வேறு ஒரு அலைவரிசையில் இருக்கிறார்கள், அங்கு அந்த ஆத்மாக்களுக்கு, [1] ஆவிகளால், மனிதனாக எவ்வாறு வாழ்வது என்று கற்றுத்தரபடுகிறது. அத்தகைய ஆத்மாக்கள் மனதளவில் தண்டணையை அனுப்விகிறார்கள் .

31)மனிதர்கள் இறந்த பிறகு இறைவனை அடைய முடியுமா?

பிறப்பும், மரணமும், மனித வாழ்வின் இயற்கையான ஓர் அங்கமாகும். நாம் மனிதராக வாழ்ந்த பிறகு இறக்கிறோம், அதனால் நாம் உடனடியாக இறைவனை அடைகிறோம் என்று எண்ணுவது ஒரு தவறான புரிதல்.

32) இறந்த பிறகு நம் பயணம் எங்கே?

ஒரு சாதாரண மனிதன், தன் வாழ்க்கையை இயல்பாக வாழ்ந்து இறந்த பின், ஆத்மா உலகத்தில் தங்குகிறான். இந்த உலகம், நாம்

---

[1] ஆவிகள் என்பவர்கள் மனித ஆத்மாவைவிட உயாரந்த நிலையில் உள்ளவர்கள்

இருக்கும் பரிமாணதில் உள்ள உயற் அலைவரிசை.

மறுபிறவியே ஒரே வாய்ப்பு:

ஆத்மாவிற்கு இருக்கும் முக்கியஒரே வாய்ப்பு என்பது — மீண்டும் மனிதனாக பிறப்பது.

தவ வாழ்க்கையும் இறைவனை அடைவதற்கான பயணம்:

சிலர் தவமுயற்சி, துறவியல், யோகா, ஞானம் ஆகியவற்றின் மூலம் இறைவனை நேரடியாக உணர முயற்சிக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை முறையே, இறை உணர்வை அடையும் நோக்கத்தில் அமைந்திருக்கிறது. ஆனால், அவர்கள் இறந்தவுடன் உண்மையாகவே இறைவனை அடைந்தார்களா என்பது மனிதக் கண்களுக்கு மறைந்த, புரிய முடியாத ஒரு மர்மம். நாம் இறந்த பிறகு இறைவனை அடைவதில்லை. நாம் முதலில் ஆத்மா உலகத்தில் தங்குகிறோம். அதன்பின், மறுபிறவிக்காக காத்திருக்கிறோம்.

33)இறந்த பிறகு நமக்கு ஒரு வாழ்க்கை உள்ளதா?

மனிதர்களாகிய நாம் இறந்த பிறகு ஆத்மா உலகத்தில் தங்குகிறோம். ஆத்மாக்களுக்கு இருக்கும் எதிர்பார்ப்பு மறுபிறவி மட்டுமே. ஆனால் இறப்புக்கும், மறுபிறவிக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் ஆத்மாக்களின் வாழ்க்கை

கிட்டத்தட்ட உயிரும் உடலும் உள்ள மனிதர்களின் வாழ்க்கையை போன்றது.

34)இறந்த பிறகு உள்ள வாழ்க்கையின் வாழ்நாள் நமக்குத் தெரியுமா?

ஒரு ஆத்மா மறுபிறவி அடைய எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளும் என்பதை இயற்கைக்கு விட்டு விடலாம் அல்லது வாய்ப்பை தேடி செல்லலாம். ஆனால் மறுபிறவி அடையாமல் ஓர் ஆத்ம, ஆத்ம உலகத்தில் தொடர்ந்து இருப்பதற்கு எல்லா ஆத்மாகளுக்கும் சுதந்திரம் கொடுக்கப் பட்டுள்ளது.

35)இறந்த குழந்தைகளின் ஆத்மாக்கள் எவ்வாறு ஆத்ம குழுக்களுடன் வந்து சேருகிறார்கள்?

ஆத்மாக்களின் வழிகாட்டிகள் என்று அறியப்படுகிறவர்கள், தங்கி இருக்கும் இடங்களில், திடீரென்று குழந்தை அழுகை சத்தம் கேட்கும், அந்த நேரத்தில் ஆத்மாக்களின் வழிகாட்டிகள் அல்லது அங்குள்ள ஆத்மாக்கள் அந்த குழந்தை ஆத்மாவை பராமரிப்பார்கள். இத்தகைய குழந்தை ஆத்மாக்கள் சிறிது காலத்தில் காணாமல் போய்விடும். இவ்வாறு திடீரென்று தோன்றும் குழந்தை ஆத்மாவை ஆவிகள்(spirits) கொண்டு வந்து விடுவதாக ஆத்மாக்கள் உலகத்தில் நம்பப்படுகிறது. இவ்வாறு திடீரென தோன்றும் குழந்தை

ஆத்மாக்கள் சிறிது காலத்தில் மறைந்து விடுவதை, அவர்கள் மறுபிறவி அடைந்து விட்டதாக ஆத்மாக்கள் உலகத்தில் நம்பப்படுகிறது.

36) சிறுவர் சிறுமியர் இறக்கும் சமயத்தில் என்ன நடக்கும்?

இவர்கள் இறக்கும் சமயத்தில், அந்த குடும்பத்தில் முன்னர் இறந்த ஆத்மாக்கள் ஆருகில் இருந்தால், அவர்கள் அந்த சிறுவர் சிறுமியர்களை பராமரிப்பார்கள். மாறாக யாரும் அருகில் இல்லாத பட்சத்தில் இத்தகைய சிறுவர், சிறுமியர் ஆத்மாக்கள் உயிருடன் இருப்பவர்களுடன் தொடர்பு கொள்ளாத முடியாத நிலையில், பொது இடங்களில் பசியுடனும் பயத்துடனும் போவோர் வருவோர்ரிடம் பேச முயல்வார்கள். இத்தகையோரை ஆத்மாக்கள் அல்லது ஆத்ம வழிகாட்டிகள் எதிர்கொள்ள நேர்ந்தால் அவர்களை அழைத்து வந்து, ஆத்ம குழுக்களுடன் தங்க வைத்து பராமரிப்பார்கள். இவர்களும் குழந்தை ஆத்மா போல் சிறிது காலத்தில் மறைந்து விடுவார்கள். இதையே அந்த சிறுவர் சிறுமியர் மறுபிறவி அடைந்து விட்டதாக ஆத்மா உலகத்தில் நம்பப்படுகிறது.

37)தாய்ப்பால் குடிக்கும் வயதில் இறந்த குழந்தைகள் எவ்வாறு பராமரிக்கப் படுகின்றன?

இத்தகைய குழந்தை ஆத்மாக்களை பராமரிப்பது கடினம் என ஆத்மாக்கள் கருதுகின்றனர். ஏனென்றால் அவர்களுக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும். இதற்காக அந்த குழந்தைகளை எடுத்துக்கொண்டு அந்த குழந்தையை இழந்த தாயிடம் செல்வார்கள். அந்த உயிருடன் இருக்கும் தாய்மார்களின் ஆத்மாவுடன் பேசி குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் படி செய்வார்கள். இந்த குறிப்பிட்ட குழந்தையின் தாய் எங்கே உயிருடன் இருக்கிறது என்பது, எல்லா ஆத்மாக்களுக்கும் வெளிப்படையாக தெரியும். ஒருவேளை தாயும் சேர்ந்து இறக்க நேர்ந்தால், அந்த தாயின் ஆத்மா அந்த குழந்தையை எடுத்துக்கொண்டு, மற்ற ஆத்மாக்கள் உதவியுடன் குழந்தை பிரசவ மருத்துவமனைக்கு சென்று இந்தக் குழந்தை ஆத்மாவிற்கு தாய்ப்பால் கிடைக்கச் செய்வார்கள்.

38)ஆத்மாக்கள் இருக்கும் உலகில் குடும்பங்கள் உண்டா?

ஆத்ம உலகத்தில் குடும்ப அமைப்புகள் இல்லை, மாறாக ஆத்மாக்கள் தாங்கள் வாழ்ந்த குடும்பங்களுடன் இருப்பார்கள், அல்லது பல குழுக்களாக இருப்பார்கள்.

39)இறந்தவர்களின் ஆத்மாக்கள் இங்கு உலகில் உள்ள அவர்கள் குடும்பத்துடன் தான் இருக்க விரும்புவார்களா?

இறந்தவர்களின் ஆத்மாக்கள், இந்த உலகில் உள்ள, அவர்களின் குடும்பத்துடன் தான் இருக்க விரும்புவார்கள். ஆனால் அந்த குடும்பத்தில் முன்னர் இறந்தவர்களின் ஆத்மாக்கள் யாராவது அந்த இடத்தில் தங்கி இருக்கவேண்டும். இல்லையெனில் அந்த ஆத்மா மற்ற ஆத்மாக்களின் குழுக்களுடன் சென்று விடுவார்கள்.

40)தங்கள் உயிருள்ள உறவுகளுடன் தங்கியிருக்கும் ஆத்மாக்களை மனிதர் களாகிய நாம் பூஜைகள் மற்றும் சடங்குகள் மூலம், அவர்களை வீட்டை விட்டு வெளியே அனுப்ப முடியுமா?

உயிருள்ள மனிதர்களாகிய நாம், ஆத்மாக்களை விரட்டுவதற்காக. நாம் செய்யும் பூஜைகளும், சடங்குகளும், அவர்களை எந்த விதத்திலும் பாதிக்காது, மாறாக இந்த செயல் ஆத்மாக்களுக்கு மிகுந்த மண வேதனையை ஆளிக்கும். சில மந்திரங்களால் ஆத்மக்களை கட்டுபடுத்த முடியும்.

41)ஆத்மாக்களின் உலகத்தில் கடவுள், மதம், ஜாதி, இவைகள் உண்டா?

ஆத்மாக்கள் உலகத்தில், கடவுள், மதம், ஜாதி, இவைகள் அனைத்தும் உண்டு. அவர்கள் உயிருடன் வாழ்ந்த காலத்தில், கடைப்பிடித்த, கடவுள், மதம், ஜாதி, அனைத்தும் தொடரும்.

அனால் மறுபிறவிக்கு எதிராக உள்ள மத நம்பிகைகள் தொடராது, அத்தகைய நம்பிக்கைகள் அவர்களுக்கு கேள்விக்குறியாக நிற்கும்.

42) **ஆத்ம உலகத்தில் பேசும் மொழி என்ன?**

ஆத்மாக்கள் உலகத்தில் மொழி என்பது உணடு, அனால் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசித்தான் ஆகவேண்டும் என்பது இல்லை. ஏனென்றால் ஒருவர் மனதில் நினைப்பது, அருகில் இருக்கும் மற்ற ஆத்மாக்களுக்கு, வெளிப்படையாக தெரியும்

ஆனால் தமிழ் மொழியில் சிந்திக்கும் ஒருவர், அருகில் தமிழ் மொழி தெரியாத அருகில்



இருக்கும் மற்றொரு ஆத்மாக்களுக்கு, இவர் தமிழில் என்ன நினைக்கிறார் என்பது தெரியாது.

43)ஆத்மாக்கள் பூமியில் உயிருடன் உள்ள தங்கள் விரோதிகளை உடல்ரீதியாக, மன ரீதியாக தண்டிக்க இயலுமா

ஆத்மாக்களால் உயிருள்ளோரை, மனரீதி யாகவோ, உடல்ரீதியாகவோ, தண்டிக்க இயலாது. ஆனால் மனிதர்கள் ஏவல் போன்ற சித்திகளை, ஆத்மாகளிடம் பயன்படுத்தி, உயிருள்ளோரை தொந்தரவு செய்யமுடியும். இவ்வாறு ஏவலில் சிக்கிக் கொண்ட ஆத்மாக்களை, ஆத்மாக்களின் வழிகாட்டிகளால் மீட்க முடியும்.

44)ஆத்மாக்கள் வாழும் உலகத்தில் பரிமாணம் என்ன?

அதிர்வெண்களால் பிரிக்கப்பட்டு, நாம் வாழும் இதே பரிமாணத்திற்குள் இணைந்து வாழ்கிறார்கள்.

45)ஆத்மாக்களை, உயிருள்ள நாம் இறந்தவர்கள் என்று குறிப்பிடுவது சரியா?

"இறந்தவர்கள்" என்ற வார்த்தையை உண்மையில் ஆத்மாக்கள் விரும்பு வதில்லை, ஏனெனில் அது ஒரு இறுதி நிலையைக் குறிக்கிறது. அவர்கள் மிகவும் உயிருடன் இருக்கிறார்கள்.

46)ஆத்துமாக்களுக்கு உயிருடன் இருக்கும் நம்மை போல் எல்லா புலன் உணர்வுகளும் உண்டா?

ஆம், ஆத்மாக்களுக்கு நம்மை போல் எல்லா புலன் உணர்வுகளும் உண்டு.

47)ஆத்மாக்களால் உயிருடன் இருக்கும் நம்மை பார்க்க இயலுமா?

ஆத்மாக்களால், உயிரோடு இருக்கும் நம்மை போல், அருகில் இருக்கும் எல்லா வற்றையும், நாம் பார்ப்பது போல் பார்க்க முடியும், உணர முடியும்.

48) ஆத்மாக்களால் உயிரோடு இருக்கும் நாம் பேசுவதை கேட்க இயலுமா?

ஆத்மாக்களால் அவர்களுக்கு தெரிந்தவர்கள் பேசுவதை மட்டுமே புரிந்து கொள்ள முடியும், மற்றவர்கள் பேசுவது அவர்களுக்கு கேட்கும் ஆனால் புரியாது.

49) ஆத்மாக்களால் உயிருடன் இருக்கும் நாம் நினைப்பதை அவர்களால் தெரிந்து கொள்ள முடியுமா?

ஆத்மாக்கள் உயிருடன்(உடலுடன்) இருந்த காலத்தில், அவர்களுக்கு மிகவும் அன்பானவர்கள், தொடர்ந்து அவர்கள் இறந்த பிறகும் அவர்களுடன் அன்பாக இருக்கும் பட்சத்தில், ஆத்மாக்களுக்கு உயிருடன் இருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது தெரியும்.

50)ஆத்மாக்களுக்கு உயிருடன்(உடலுடன்) இருக்கும் நம்மைப் போல் எல்லா உடல் தேவைகளும் இருக்குமா ?

ஆம் ஆத்மாக்களுக்கு உயிருடன்(உடலுடன்) இருக்கும் நம்மை போல் எல்லா உடல் தேவைகளும் உண்டு. இது நமக்கு, அவர்கள் கற்பனையில் வாழ்கிறார்கள் என்பதுபோல் தோன்றினாலும், அதுவே அவர்களுக்கு உண்மை.

51)ஆத்மாக்களின் மறுபிறவி நேரம் எவ்வாறு முடிவெடுக்கப்படுகிறது?

எவ்வாறு உயிருள்ள நமக்கு இறக்கப் போகும் நேரம் நமக்கு தெரியாதோ, அதேபோல் ஆத்மாக்களுக்கும் தங்கள் மறுபிறவி நேரத்தை முடிவு செய்ய முடியாது, ஆனால் தங்களின் மறுபிறவிக்காக கடவுளிடம் வேண்டுதல், யோகப் பயிற்சி செய்தால், இவைகளால் ஆத்மாக்கள் மறுபிறவிக்கு விரைவாக செல்ல வாய்ப்பிருக்கிறது. மறுபிறவியை விரும்பாத ஆத்துமாக்கள், மறுபிறவி இல்லாமல் தொடர்ந்து ஆத்ம உலகத்தில் நீடிக்கலாம்.

52)ஆத்மாக்களுக்கு நம்மைப் போல் காலம் நேரம் உண்டா?

நாம் உயிருடன் வாழும் இந்த பூமியின் கால நேரத்தையே அவர்களும் அனுபவிக் கிறார்கள்.

53)ஆத்மாக்களுக்கு நாம் துன்பம் தர முடியுமா?

ஆத்மாக்களுக்கு, உயிருள்ள நம்மால் மனரீதியாக மற்றும் உடல் ரீதியாக துன்பம் தர இயலாது.

மாறாக சில மந்திரங்களால், அவர்களுக்கு துன்பம் தரஇயலும் .

54)ஆத்மாக்களால் நம்முடைய எதிர் காலத்தை கூற முடியுமா?

ஆத்மாக்களால், உயிருள்ளவர்களின் எதிர் காலத்தை கணிக்க முடியாது.

55)ஆத்மாக்கள் என்னென்ன முறையில் நம்முடன் பேச முடியும்?

ஆத்மாக்களுடன் பேசுவதற்கு நான்கு எளிய வழிகளை பயன்படுத்தலாம், தியானத்தின் மூலம், தன்னிச்சையாக எழுதுதல், பெண்டுலம் வழியாக, கனவுகள் வழியாக.

56)ஆத்மாக்களுடன் தவறில்லாமல் பேசு வதற்கு எது சிறந்த முறை?

தியானத்தின் மூலம் பேசுவதையே ஆத்மாக்கள் சிறந்த ஒன்றாக கருதுகிறார்கள்.

57)ஆத்துமாக்கள் நம்மை வழிநடத்த முடியுமா?

ஆத்மாக்களுடன் நாம் தொடர்பில் இருக்கும் பட்சத்தில், ஆத்மாக்களால் நம்மை வழி நடத்த முடியும்.

58)ஆத்மாக்கள் நம் அருகில் இருப்பதை நாம் உணராத பட்சத்தில் அவர்கள் நம்மை வழி நடத்த முடியுமா?

ஆத்மாக்கள் அருகில் இருப்பதை நாம் உணராத பட்சத்திலும், அவர்களுடன் எந்த தொடர்பில்

இல்லாத பட்சத்திலும், ஆத்மாக்களால் நம்மை வழிநடத்த முடியாது.

59)ஆத்மாக்களால் நம் உடலை மற்றும் நம் மனதை சரி செய்ய முடியுமா?

ஆத்மாக்களுடன் தொடர்பில் இருக்கும் பட்சத்தில், அவர்களால் நம் மனதை மற்றும் உடலை சரி செய்ய முடியும், இதில் குலதெய்வ வழிபாடும், மூதாதையர்கள் வழிபாடும் அடங்கும்.

60)ஆத்மாக்கள் எவ்வாறு ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்கிறார்கள்?

ஆத்மாக்கள், அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் சென்று வந்த இடங்கள் அவர்கள் ஞாபகத்தில் இருக்கும் பட்சத்தில், அந்த இடத்தை நினைத்து மாத்திரத்திலேயே, அந்த இடத்திற்கு அவர்களால் செல்ல முடியும். புதிய இடங்களுக்கு ஆத்மாக்களை உயிருள்ள நாம் கூட்டிச் செல்ல முடியும், அல்லது நாம் அறியாமலே அவர்கள் நம்முடன் வரக்கூடும். உயிருள்ள நம்முடைய உதவி இல்லாமல், ஆத்மாக்கள் தானாக சென்று புதிய இடங்களை ஆராய்வதில்லை. ஆத்மாக்களுக்கு அன்பானவர்களும், ஆத்மாக்களும் ஒருவரை ஒருவர் நினைக்கும் பட்சத்தில், ஆத்மாக்களால் தங்கள் அன்புக் குரியவர்களை எங்கிருந்தாலும் தேடிசெல்ல முடியும்.

61)ஆத்மாக்கள் உலகத்தில் இங்கு உள்ளது போல் கல்வி, கலாச்சாரம், தொழில், கேளிக்கை, உணவு, விளையாட்டு, சண்டை, விரோதம், சடங்குகள், போன்றவைகள் உண்டா?

ஆத்மாக்கள் உலகத்தில் இங்கு உள்ளது போல் தெய்வ வழிபாடு, கலாச்சாரம், கேளிக்கை, உணவு, போலி சண்டை, போன்றவைகள் உண்டு. மறுபிறவி சார்ந்த செய்திகள் கற்பிக்கப்படும். தொழில், விரோதம், சடங்குகள் ஆத்ம உலகத்தில் கிடையாது.

62)ஆத்மாக்களால் கடவுளை பார்க்க மற்றும் உணர முடியுமா?

ஆத்மாக்களால் கடவுளை மட்டுமல்ல, மனிதர்களை விட உயர்ந்த நிலையில் இருக்கும் எதையும் அவர்களால் பார்க்க, பேச முடியாது. இறை சக்தியை நாம் உணர்வது போல், அவர்களாலும் உணர முடியும்.

63)ஆத்மாக்களின் உலகத்தில், இங்கு உள்ளது போல் சுற்றுப்புற சூழ்நிலை இருக்குமா?

ஆத்ம உலகம் என்று தனியாக ஒன்றும் இல்லை. அவர்கள் நம்முடன் தான் இருக்கிறார்கள், வேறொரு அலை வரிசையில். அவர்கள் நாம் இருக்கும் சுற்றுப்புற சூழலையே அவர்களும் அனுபவிக்கிறார்கள்.

64) ஆத்மாக்களுக்கு நம்மைப் போல் பசி, பிணி, மூப்பு, உண்டா?

ஆத்மாக்களுக்கு நம்மைப் போல் பசி மட்டும் உணடு. பிணி, மூப்பு கிடையாது.

65)ஆத்மாக்களுக்கு நம்மைப் போல் வீடு, உணவு, உடை தேவையா?

ஆத்மாக்கள் நம்முடன் தான் வசிக்கிறார்கள். நாம் உண்ணும் உணவு உடுத்தும் உடை இவைகளையே அவர்களும் பயன் படுத்துகிறார்கள். ஆத்மாக்களுக்கு நம்மைப் போல் பசி என்ற உணர்வு உண்டு ஆனால் மூப்பு, பிணி போன்றவைகள் கிடையாது.

66)ஆத்மாக்கள் நாம் பயன்படுத்தும் எல்லா வசதிகளையும் அவர்களும் பயன் படுத்துகிறார்களா?

நாம் பயன்படுத்தும் எல்லா வசதிகளையும், ஆத்மாக்கள் பயன்படுத்துகிறார்கள்.

67)ஆத்மாக்கள் நாம் பயன்படுத்தும் வங்கிகள், பணம் இவற்றை அவர்களும் பயன்படுத்துகிரர்களா?

ஆத்மாக்கள் நாம் பயன்படுத்தும் வங்கிகள், பணம் இவற்றை அவர்கள் பயன்படுத்துவது இல்லை. அவர்களுக்கு தேவையான பொருட்களை அவர்களால் பயன்படுத்திக் கொள்ள முடியும். நம் பார்வைக்கு அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் குறையாமல்

அப்படியே தான் இருக்கும் ஆனால் அவர்களின் பார்வைக்கு அந்த பொருள் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

68)ஆத்மாக்கள் அவர்களின் பொருள் தேவைக்கு உழைக்க வேண்டுமா?

இந்த பூமியில் உள்ள எல்லா பொதுவான பொருட்களையும் அவர்களால் பயன் படுத்திக் கொள்ள முடியும். உதாரணத்திற்கு ஒரு உணவு விடுதியை அவர்களால் பயன்படுத்திக் கொள்ள முடியும் ஆனால் அவர்களுக்கு சம்பந்தமில்லாத ஒருவரின் சமையலறையை அவர்கள் பயன்படுத்த மாட்டார்கள், இது ஆத்துமாக்கள் உலகத்தின் கட்டுப்பாடு.

69)ஆத்மாக்கள் மறுபிறவியின் சமயத்தில் தங்களின் பெற்றோர்களை தேர்ந்தெடுக்க முடியுமா?

மறுபிறவி சமயத்தில் ஆத்மாக்கள் தங்கள் உறவுக்குள் தான் பிறக்க விரும்புகிறார்கள், அதற்கு வாய்ப்பில்லாத பட்சத்தில், அவர்கள் விரும்பும் பெற்றோர்களை தேர்ந்தெடுக்க அவர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஆத்மாக்கள் மறுபிறவி சமயத்தில் தங்கள் பெற்றோர்களை தேர்ந்தெடுக்க முடியும், ஆனால் இது அவர்களுடைய கர்ம பலன் அடிப்படையில் நிகழ்கிறது.

70)ஆத்மாக்கள் அவர்கள் உலகத்தில் தவம் போன்ற செயல்களால் மறுபிறவியை தவிர்த்து ஆவிகள் நிலையை அடைய முடியுமா?

ஆத்மாக்கள் உலகத்தில் அவர்களுக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு மறுபிறவி அடைதல் அல்லது தொடர்ந்து ஆத்ம உலகத்திலேயே இருத்தல், இவை இரண்டைத் தவிர அவர்கள் வேறு எங்கும் செல்ல இயலாது.

71)இறந்தவர்களின் ஆத்மாக்கள் எல்லாரும் ஒரே இடத்திற்கு தான் செல்கிறார்களா?

இறந்தவர்களின் ஆத்மாக்கள் எல்லாரும் ஒரே இடத்திற்கு தான் செல்கிறார்கள், அந்த ஒரே இடம் நாம் உயிரோடு இருக்கும் இடமே ஆகும். அனால் அவர்கள் நம் கண்களுக்கு தெரிவதில்லை. அவர்கள் வேறு ஒரு உயர் அலைவரிசையில், இதே பரிமாணத்தில் இருக்கிறார்கள்.

72)ஆத்மாக்களை கொண்டு, உயிரோடு உள்ளோர்ரை ஏதாவது ஒரு வகையில் தொந்தரவு செய்ய முடியுமா?

ஆத்மாக்கள், உயிருடன் உள்ளோர்ரை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும், தன்னிட்சையாக தொந்தரவு செய்ய முடியாது. அனால் உயிருள்ள ஒருவர், மற்ற உயிருள்ள ஒருவரை, சில ஆத்மாக்கள் மேல் மந்திரங்களை பயன்படுத்தி சக உயிருள்ள மனிதர்களை

தொந்தரவு செய்யமுடியும். எல்லா ஆத்மாக்களும் இது போன்ற மந்திரங்களுக்கு கட்டுப்படாது, இவ்வாறு மந்திரங்களால் கட்டுண்ட ஆத்துமாக்களை, ஆத்துமாக்களின் வழிகாட்டிகளால் விடுவிக்க முடியும் .

73)ஆத்மாக்களை, உயிருடன் உள்ள நாம் மகிழ்விக்க முடியுமா?

ஆத்மாக்கள், உயிருடன் இருக்கும் நம்மோடு தான் இருக்கிறார்கள் என்று அங்கீகரித்தல், ஆத்மாக்களுடன் பேசுதல், அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுதல், இவை போன்றவைகள் ஆத்மாக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

74)இறந்தவர்களை, உயிருடன் உள்ளோர், மறந்துவிட்ட நிலையிலும் ஆத்மாக்கள் அவர்களுடன் இருபார்களா?

இறந்தவர்களை, உயிருடன் இருக்கும் நாம், முற்றிலுமாக மறந்து விட்ட நிலையில் அந்த ஆத்மாக்கள் அந்த இடத்தில் இருக்க விரும்ப மாட்டார்கள்.

75)ஆத்மாக்கள் தங்கள் மறுபிறவியை தள்ளிப் போடவோ அல்லது முன்கூட்டியே செயல்படுத்தவோ முடியுமா?

ஆத்மாக்கள் அவர்கள் விரும்பிய பெற்றோர்கள் கிடைக்கும் பட்சத்தில், தங்கள் மறுபிறவியை அவர்களால் உடனே செயல்படுத்த முடியும்,

மாறாக தங்கள் மறுபிறவியை அவர்கள் தள்ளிப்போட விரும்பினால், எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தள்ளி போட்டுக் கொள்ளலாம் அல்லது அதை இயற்கைக்கு விட்டுவிடலாம் .

76)மறுபிறவியின் போது ஆத்மாக்கள் ஆணா, பெண்ணா, என்று முடிவெடுக்க முடியுமா?

ஆத்மாக்கள் மறுபிறவியின் போது ஆணாக அல்லது பெண்ணாக பிறக்கும் முடிவு அவர்கள் கையில் இல்லை, அது இயற்கை அல்லது கடவுள் தான் முடிவு செய்ய வேண்டும். மேலும் தாங்கள் என்னவாக பிறக்கப் போகிறோம் என்பதும் அவர்களுக்கு தெரியும்.

77)ஆத்மாக்களின் வாழ்க்கை முறையை உலகில் உள்ள எந்த மதமாவது 100% சரியாகக் கூறுகிறதா?

பூமியில் உள்ள எந்த ஒரு மதமும் ஆத்மாக்களின் வாழ்க்கையை 100% சரியாக வெளிப்படுத்து வதில்லை.

78)இங்கு உடல் ஊனமுற்றவர்களாக, மனநலம் குன்றியவர்களாக பிறப்பவர்கள் இறந்த பிறகு அவர்களின் நிலை என்ன?

உடல் ஊனமுற்றவர்களாக, மனநலம் குன்றியவர்களாக பிறப்பவர்கள், இறந்த பிறகு ஆத்மாக்கள் உலகில் அவர்கள் உடல் ஊனத்துடனனும், மனநல குறை பாட்டுடனும் தொடருவார்கள். அனால் அடுத்தபிறவியில்

அவர்கள் உடல் மற்றும் மனநலத்துடன் பிறப்பது அவர்களின் கர்மாவை பொருத்தது.

79)மறுபிறவியின் பொழுது உடல் ஊனத்துடன் தான் பிறக்கப் போகிறோம் என்பது தெரியுமா?

மறுபிறவியின் போது உடல் ஊனத்துடன் தான் பிறக்கப் போகிறோம் என்று மறுபிறவி எடுக்கும் ஆத்மாக்களுக்கு தெரியும்.

80)ஆத்மாக்களுக்கு மறுபிறவியின் பொழுது அவர்கள் பெறப்போகும் பொருளாதாரம், வேலை, கல்வி, போன்றவைகள் முன்கூட்டியே தெரியுமா?

ஆத்மாக்கள் மறுபிறவியின் போது அவர்களுடைய அறிவு, கல்வி, பொருளாதாரம், போன்றவைகள் அவர்களின் கர்ம வினையினால் முடிவெடுக்கப்படும், மறுபிறவியின் பொழுது இது அவர்களுக்கு தெரியாது.

81)ஆத்மாக்களுக்கு தாங்கள் உயிருடன் இருந்தபோது உள்ள தோற்றம் வயது போன்றவைகள் இறந்த பிறகு தொடருமா?

ஆத்ம உலகத்தில் இருக்கும் ஆத்மாக்கள், தங்கள் உருவமைப்பு, வயது போன்றவைகளை தங்கள் விருப்பம் போல் மாற்றிக் கொள்ள முடியும். இதை செயல் படுத்த அவர்கள், தங்கள் இளம் வயது புகைப்படங்களை பார்க்கும் பட்சத்தில். எளிதாக அந்த தோற்றத்திற்கு மாறிவிடுவாகள்

ஆத்மாககள் தங்கள் உறவினருடன் தங்கி வாழும்போது, அவர்கள் தங்கள் இளம் வயது புகைப்படங்களை எளிதாக பார்கக்கூடும். இவ்வாறு தங்கள் புகைபடங்களை பார்க்காமலே, தங்களின் இளமை தோற்றத்திற்கு செல்லமுடியும்.

82)ஆத்மாக்கள் கேட்கும், பார்க்கும், திறன் மனிதனுக்கு நிகரானதா?

ஆத்மாக்கள் பார்க்கும், கேட்கும், திறன்

உயிரோடு இருக்கும் மனிதர்களுக்கு ஒப்பானது.

83)ஆத்மாக்களின் தூக்கமும், நம்முடைய தூக்கமும் ஒன்றா?

ஆத்மாக்கள் தூங்கும் சமயத்தில், அவார்கள் உலகத்தில், அவர்களை சுற்றி நடப்பதை அவர்களால் உணர முடியும்.

84)ஆத்மாக்களின் உணவு உண்ணும் முறையும் நாம் உணவு உண்ணும் முறையும் ஒன்றா?

ஆத்மாக்கள் நம்மைப் போலவே உணவு உண்கிறார்கள், ஆனால் அவர்களுக்கு ஒரு பிரத்தியேக சக்தி உண்டு, அதாவது உணவைப் பார்த்த மாத்திரத்திலேயே உணவு உண்ட திருப்தி அவர்களுக்கு கிடைத்துவிடும். ஒன்றுக்கு மேற்பட்ட ஆத்மாக்கள் கூட்டமாக உணவு உண்ணும் போது, நம்மை போல் உண்ணுகிறார்கள். தனியாக இருக்கும் போது

உணவைப் பார்த்த மாத்திரத்திலேயே உணவு உண்ட திருப்தி அவர்களுக்கு கிடைத்துவிடும்.

85)ஆத்மாக்களுக்கு மழை வெயில் மற்றும் பூமியில் உள்ள தட்பவெப்ப மாறுதல்களால் பாதிப்பு உண்டா?

மனிதர்களை எவ்வாறு பாதிக்கிறதோ, அதே பாதிப்பு அவர்களுக்கும் உண்டு. ஆத்மாகள் நம்முடன் தான் இருக்கிறார்கள் வேறு ஒரு அலைவரிசையில்.

86)ஆத்மாக்கள் கடல் ஆறு போன்றவைகளில் மூழ்கும் அபாயம் உண்டா?

ஆத்மாக்கள் தண்ணீரில் மூழ்கும் அபாயம் உண்டு, அவர்களை மற்ற ஆத்மாக்கள் காப்பாற்ற முடியவில்லை என்றால், அந்த ஆத்மா மறுபிறவி அடைந்துவிட்டதாக நம்பப்படுகிறது. இது எல்லா விபத்துகளுக்கும் பொருந்தும்.

87) ஆத்மாக்களை நாம் அழிக்க முடியுமா?

அவர்களை ஒரு இடத்தை விட்டு விரட்டமுடியும் ஆனால் முற்றிலுமாக அழிக்க முடியாது.

88)ஆத்மாக்களை நாம் நம்முடைய முழு கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியுமா?

ஆத்மாக்களை சில மந்திரங்களால் நம்முடைய முழு கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும், பிறகு அவர்களை உயிருள்ள மனிதர்களுக்கு எதிராக பயன்படுத்த முடியும்.

89)ஆத்மாக்கள், விலங்குகள் மற்றும் பறவைகள் கண்களுக்கு தெரிவார்களா?

ஆத்மாக்கள் பறவைகள் மற்றும் விலங்குகள் கண்களுக்கு தெரிவதில்லை. ஆனால் இரண்டு மாதத்திலிருந்து மூன்று மாதம் வரை உள்ள குழந்தைகள் கண்ண்களுக்கு ஆத்மாக்கள் தெரிவார்கள்.

90)ஆத்மாக்களால் அவர்களை விட உயர்ந்த நிலையில் உள்ள ஆவிகளை பார்க்க, அவர்களுடன் பேச, முடியுமா?

பொதுவாக ஆத்மாக்களால் மனிதர்களை தவிர வேறு யாரையும் அவர்களால் பார்க்க, பேச, முடியாது. அனால் சில ஆத்மாக்களால், ஆவிகள் ளுடன் தொடர்ப்பு கொள்ள முடியும்.

90)புனிதர்கள், வலிமார்கள், சித்தர்கள், இவர்கள் எல்லாம் யார்?

புனிதர்கள், வலிமார்கள், சித்தர்கள், இவர்கள் எல்லாம், மனிதனாக பிறந்த ஆவிகள். இவர்கள் மனிதனாக பிறந்து, இறந்த பிறகு, ஆவிகள் உலகத்திற்கு சென்றுவிடுவார்கள்.

91)நாம் உயிருடன் இருக்கும் பொழுது கற்ற கல்வி, தொழில், ஆற்றல், இவைகள் நாம் இறந்த பிறகு நமக்கு உதவுமா?

ஆத்மாக்கள் உயிருடன் இருக்கும் பொழுது, அவர்கள் இந்த பூமியில் கற்ற கல்வி, தொழில், அறிவு, போன்றவைகள், அவர்கள் இறந்த பிறகு,

உயிருடன் இருக்கும் அவர்களின் அன்பானவர்களை வழிநடத்த பயன்படும். அனால் இவைகள் ஆத்மாக்கள் உலகில் பயன்படாது.

92)எந்த மாதிரியான அறிவு, ஆற்றல், தொழில், நாம் இறந்த பிறகு நமக்கு உதவும்?

பிறர் அன்பு மட்டுமே, நாம் இறந்த பிறகு நமக்கு பயன்படும்.

93)ஆத்மாக்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளும் முறையும் நாம் பேசிக் கொள்ளும் முறையும் ஒன்றா?

பல சந்தர்ப்பங்களில் உயிரோடு இருக்கும் நாம் ஒருவருக்கொருவர் உரையாடுவது போல் தான் ஆத்மாக்களும் பேசிக் கொள்கிறார்கள், ஆனால் ஆத்மாக்கள் உலகில், ஒரு ஆத்மாவின் மனதில் தோன்றும் எண்ணம், மற்ற ஆத்மாக்களுக்கு வெளிப்படையாக தெரியும்.

94)ஆத்மாக்கள் உண்மை போல கற்பனையில் எவையெல்லாம் உருவாக்க முடியும்?

அவர்கள் நம்மை போல கற்பனை மட்டுமே பண்ணமுடியும், எதையும் உருவாக்க முடியாது.

95)ஆத்மாக்களை வழிநடத்துவதற்கென்றே சில ஆத்மாக்கள் இருக்கிறார்களா? யாரெல்லாம் ஆத்மாக்களை வழி நடத்த முடியும்?

மறுபிறவியில் நாட்டம் இல்லாத பல காலம் ஆத்மாக்கள் உலகத்தில் வாழ்ந்து அனுபவமுள்ள ஆத்மாக்களால் பிற ஆத்மாக்களை வழிநடத்த முடியும்.

96)மறுபிறவி அடைந்த ஒரு ஆத்மா, இந்த பெற்றோருக்கு தான் பிறந்திருக்கிறது என்று அந்த ஆத்மா உடன் இருந்த மற்ற ஆத்மாக்களுக்கு தெரியுமா?

தெரியும்.

97)இவ்வுலகில் பிறக்கும் குழந்தைகள் எந்த வயது வரை ஆத்மாக்களை பார்க்கையிலும்?

மூன்று மாதங்களுக்கு உட்பட்ட சில குழந்தைகளால் ஆத்மாக்களை பார்க்க இயலும்.

98)ஆத்மாக்கள் மறுபிறவி அடையும் பொழுது தாங்கள் இந்த வயதில் இவ்வாறு இறப்போம் என்பதை அவர்கள் அறிவார்களா?

மறுபிறவி அடையும் ஆத்மாக்கள், தங்கள் வாழ்க்கையைப் பற்றியோ, இறப்பை பற்றியோ, அறிய மாட்டார்கள்.

99)ஆத்மாக்கள் உலகத்தில் வாழ இந்த உலகத்தில் நாம் எவ்வாறு தயாராக வேண்டும்?

பிறர் அன்பு என்ற ஒன்று மட்டுமே போதும்.

100)மனிதர்கள் மரணம் அடைவதில்லை என்ற கூற்று உண்மையா?

ஆம் உண்மைதான் மரணம் என்பது முடிவல்ல, அது ஒரு மாற்றமே.

101)நாம் உயிருடன் இருக்கும் பொழுது செய்யும் தியானம் போன்றவைகள் நாம் இறந்த பிறகு ஆத்மா உலகத்தில் உதவுமா?

நாம் எவ்வளவு அன்பானவர்களாக இருந்தோம், நாம் எவ்வளவு நேசித்தோம், சேவை செய்தோம், மற்றவர்களை மன்னித்தோம் என்பது மட்டுமே ஆத்மாக்கள் உலகத்தில் பயன்படும்.

102)மனித ஆத்மாக்கள் மறுபிறவி அடையும் பொழுது வேறு ஏதாவது உயிரினமாக இந்த உலகில் பிறக்க இயலுமா?

இதற்கு பதில் அளித்த ஆத்மாக்களின் வழிகாட்டி திரு.சாமிநாதன், ஒரு மனித ஆத்மா மறுபிறவி எடுக்கும் பொழுது மீண்டும் மனிதனாக மட்டுமே தான் பிறக்கும்,என்று கூறினார்.

103)இங்கு மரணம் என்பது கட்டாயம் என்பது போல் ஆத்ம உலகத்தில் மறுபிறவி என்பது கட்டாயமா?

ஆத்மாக்கள் உலகத்தில் மறுபிறவி என்பது கட்டாயம் அல்ல. ஆத்மாக்கள் எவ்வளவு காலம் வேண்டுமென்றாலும் ஆத்மாக்கள் உலகத்தில் தொடர்ந்து இருக்கலாம்.

104)ஒரு ஆத்மா மறுபிறவி அடைந்து விட்டது என்று மற்ற ஆத்மாக்கள் எவ்வாறு புரிந்து கொள்கின்றன?

மறுபிறவி அடைந்த ஆத்மா மற்ற ஆத்மாக்களின் பார்வையில் இருந்து மறைந்துவிடும், இத்தகைய நிகழ்வை வைத்து அந்த ஆத்மா மறுபிறவி அடைந்து விட்டது என்று மற்ற ஆத்மாக்கள் புரிந்து கொள்வார்கள்.

105)ஆத்மாக்களுக்கு இருட்டு என்றால் பயமாக இருக்குமா ?

ஒரு இருட்டான சூழ்நிலையில் ஆத்மாக்கள் அருகிலுள்ள மற்ற ஆத்மாக்களை பார்க்க முடியாத பட்சத்தில் "நான் தனித்து விடப்பட்டேன்" என்ற உணர்வு அந்த ஆத்மாவுக்கு தோன்றும் இத்தகைய பய உணர்வு எல்லா ஆத்மாக்களுக்கும் தோன்றுவதில்லை.

106)ஆத்மாக்களின் உடல் சாயல் தாங்கள் இறப்பதற்கு முன் எவ்வாறு இருந்தார்களோ அதே உடல் சாயலுடன் தான் இருப்பார்களா?

ஆத்மாக்கள் அவர்களின் உடல் அமைப்பு வயது இவற்றை அவர்கள் எண்ணம் போல் மாற்றிக் கொள்ள முடியும்.

107)தற்கொலை செய்து இறந்தவர்கள் ஆத்ம உலகத்திற்கு சென்ற பிறகு தங்கள் தற்கொலைக்கு காரணமானவர்களை பழி வாங்க முடியுமா?

ஆத்மாக்கள் தங்கள் தற்கொலைக்கு காரணமானவர்களை எந்த விதத்திலும் பழிவாங்க முடியாது, ஆனால் மற்றவர்களின்

தற்கொலைக்கு காரணமானவர்கள் தங்களின் கர்ம பலன்னினால் அதற்குரிய தண்டனையை அனுபவிப்பார்கள்.

108)தற்கொலைக்கு தாங்களே காரணம் என்ற பட்சத்தில் அந்த ஆத்மாவின் மனநிலை எவ்வாறு இருக்கும்?

இத்தகைய ஆத்மாக்கள் பல காலம் தாங்கள் செய்ததை நினைத்து வருந்தி கொண்டிருப்பார்கள்.

109)வாழுகின்ற உறவுகளின் கர்மாவை ஆத்ம உலகில் இருக்கும் உங்களால் முன்கூட்டியே கூற முடியுமா?

ஆத்மாக்களால் அவர்களின் அன்பான உறவுகளின் எதிர்காலத்தையோ, கர்மவையோ அவர்களால் கூற இயலாது.

110)மறுபிறவின்போது ஆத்மாக்களால் தங்கள் கர்மாவை முடிவு செய்ய முடியுமா?

மறுபிறவி எடுக்கும் ஆத்மாக்கள் தங்கள் எதிர்காலத்தையோ, கர்ம வினையை முடிவு செய்ய முடியாது அதைப்பற்றி அவர்கள் அறியவும் முடியாது.

111)ஆத்மாக்களுக்கு தங்களின் மறுபிறவி நேரம் வந்தவிட்டது என்பதை உணர முடியுமா?

ஆத்மாக்கள் தங்கள் மறுபிறவியை இயற்கை மற்றும் கடவுளிடம் விட்டுவிடும் பட்சத்தில்,

அதற்கான நேரம் வரும்போது அதை அவர்களால் உணர முடியும். ஆத்மாக்கள் தாங்களே விருப்பப்பட்டு மறுபிறவியை செயல்படுத்தும் போதும், அந்த தருணத்தை அவர்களால் உணர முடியும்.

112)ஆத்மாக்கள் புனிதர்களின் நிலையை அடைய, ஆத்ம உலகத்தில் முயற்சி எடுக்க முடியுமா?

ஆத்மாக்கள் புனிதர்களின் நிலை அடைய அவர்கள் இருக்கும் ஆத்மாக்கள் உலகத்தில் எந்த முயற்சியும் எடுப்பதற்கு வாய்ப்பில்லை. புனிதர்கள் என்பவர்கள், மனித ஆத்மாக்களுக்கு அடுத்த நிலையில் உள்ள ஆவிகள். இவர்கள் அவ்வப்போது பூமியில் மனிதனாக பிறக்கிறரர்கள்.

113)ஆத்ம உலகத்தில் பேய்கள் என்று சொல்லப்படுகிற கெட்ட ஆவிகள் உண்டா?

உயிருடன் இருக்கும் நாம் நம்முடன் இருக்கும் மற்ற உயிரினங்களை மட்டுமே நம்மால் பார்க்க, உணர முடியும், இதே போல் ஆத்மாக்கள் உலகத்தில் சக ஆத்மாக்களை தவிர வேறு ஆவி வடிவத்தில் இருக்கும் சக்திகளை அவர்களால் பார்க்க, உணர முடிவதில்லை.

114)இந்த உலகத்தில் தீயவர்கள் இருப்பது போல் ஆத்ம உலகத்திலும் தீய ஆத்மாக்கள் இருக்கின்றனவா?

இங்கு உயிருள்ள மனிதர்கள் தீ எண்ணத்துடன் இறக்கும் போது, அதே தீய எண்ணங்கள் ஆத்மாக்கள் உலகிலும் தொடரும் ஆனால் அத்தகைய தீய குணங்களை அடுத்த ஆத்மாக்கள் மேல் செயல்படுத்த முடியாது. ஏனென்றால் தீய குணங்களை வெளிப்படுத்த அவர்களுக்கு உயிருள்ள உடல் சரிரம் தேவை, அவர்களுடைய ஆத்ம சரிரம் தீய எண்ணங்களை வெறும் எண்ணங்களாகவே மட்டும் வெளிப்படுத்தும்.

115)ஆத்மாக்கள் தங்களின் மனதில் தோன்றுவதை மற்றொரு ஆத்மாவால் புரிந்து கொள்ள முடியுமா?

ஆத்மாக்கள் உலகத்தில் ஒரு ஆத்மாவின் மனதில் தோன்றும் எண்ணங்கள் அருகில் இருக்கும் மற்ற ஆத்மாக்களுக்கு வெளிப் படையாக தெரியும்.

116)இந்த உலகத்தில் ஒருவருக்கொருவர் விரோதிகளாக இருந்தவர்கள் இறந்த பிறகு விரோதிகளாகவே தொடர்வார்களா?

ஆத்மாகள் உலகிலும் இவர்கள் விரோதிகளாக தொடரலாம், அல்லது பரஸ்பரம் மன்னிப்பு, அன்பு, போன்றவைகளால் அவர்கள் தங்கள் விரோதத்தை கைவிடலாம். இதேபோல் உயிருடன் இருக்கும் போது நண்பர்களாய் இருந்தவர்கள் ஆத்மாக்கள் உலகத்தில் கருத்து வேறுபாடு காரணமாக பிரியவும் வாய்ப்பு உள்ளது.

117)ஆத்மாக்கள் பெரும்பாலும் குழுக்களாகத்தான் வாழ்கிறார்களா?

நம் உயிரோடு இருக்கும் உலகத்தில், கூட்டுக் குடும்பங்கள் இருந்த காலத்தில், இறந்து போகும் நபர்கள், ஆத்மாக்களாக அவர்கள் வீட்டிலேயே மறுபிறவி நாள் வரை தங்கி இருந்து, அவர்கள் உறவுக்குள்ளே மீண்டும் பிறப்பார்கள். கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து விட்ட இக்காலகட்டத்தில், ஆத்மாக்கள், அவர்கள் வாழ்ந்த குடும்பத்துடன் தங்க இயலாமல் பல குழுக்களாக வாழ கற்றுக் கொண்டார்கள். இது ஆத்மாக்கள் உலகத்தில் ஏற்பட்ட ஒரு மாற்றம் ஆகும்.

118) ஆத்மாக்கள், அவர்கள் உலகத்தில் அறிவு, ஆற்றல், மொழி, தொழில், இவைகளை கற்றுக் கொள்ள முடியுமா?

ஆத்மாக்கள் உலகத்தில், மறுபிறவி, பிற ஆத்மாக்களுடன் அன்பாக இருத்தல், புதிதாக வரும் ஆத்மாக்களுக்கு வழிகாட்டுதல், போன்றவைகளை தவிர ஆத்மாக்கள் உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை.

119)ஆத்மாக்கள் மறுபிறவியின் போது தங்களின் முக சாயல் உடல் தோற்றம் இவைகளை தேர்வு செய்ய முடியுமா?

பிறக்கப் போகும் ஒரு குழந்தையின் தோற்றத்தை அந்தக் குழந்தையின் தாய், தந்தையர் தான் முடிவு செய்கிறார்கள்.

120)நாம் இந்த உலகத்தில் உயிருடன் இருக்கும் பொழுது, நம் ஆத்மா மட்டும் வெளியே சென்று வர முடியுமா?

நாம் இறக்கும் சமயத்தில் மட்டும்தான் நம் ஆத்மா இந்த உடலை விட்டு பிரிகிறது.

121)ஆத்மாக்கள் மறுபிறவி எடுக்கும் பொழுது அவர்கள் எந்த பெற்றோரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை வழிகாட்டுவதற்கு, ஆத்ம உலகில் ஏதேனும் அமைப்புகள் உண்டா?

ஆத்மாக்களின் வழிகாட்டிகள் என்ற அமைப்பினர், மறுபிறவி எடுக்கும் ஆத்மாக்களுக்கு தங்கள் பெற்றோர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அறிவுரையும், மேலும் நல்ல பெற்றோர்களை கண்டறிந்து, ஆத்மாக்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றார்கள். மறுபிறவி எடுக்கும் ஆத்மாக்கள் ஒரு தாயின் வயிற்றுக்குள் செல்லும் வரை இந்த வழிகாட்டு மையங்கள் உதவுகின்றன.

122)இந்த உலகத்தில் உயிரோடு இருக்கும் போது உள்ள உறவுகள் தாங்கள் இறந்து ஆத்ம உலகத்திற்கு சென்ற பிறகு அதே உறவு உடன் தான் இருப்பார்களா?

ஆம், அதே உறவுடன் தான் தொடர்வார்கள் .

123)ஆத்மாக்கள் உலகத்தில் புதிய உறவுகளை உருவாக்கிகொள்ள முடிமா?

முடியாது.

124)ஆத்ம உலகத்தில் உள்ள உறவுகளும் நண்பர்களும் மறுபிறவி எடுக்கும் காலத்தைப் பற்றி அவர்களுக்குள் பேசிக் கொள் வார்களா?

ஆம், ஆத்மாக்கள் தங்களுக்குள் எந்த பெற்றோருக்கு பிறக்க வேண்டும், எப்பொழுது பிறக்க வேண்டும், என்பதைப் பற்றி பேசிக் கொள்வார்கள்.

125)மறுபிறவி வழிகாட்டுதல் மையம் என்பது என்ன?

மறுபிறவி வழிகாட்டும் மையங்கள் கீழ்க்கண்ட வேலைகளை செய்கிறது:

ஆத்மாக்கள் உலகத்திற்கு வரும் ஆத்மாக்களுக்கு, ஆத்மாக்கள் உலகத்தின் சூழ்நிலையை புரிய வைப்பார்கள். மறுபிறவி எடுக்கும் ஆத்மாக்களுக்கு பெற்றோர்களை கண்டறிந்து தருவார்கள். ஆத்மாக்களை, உயிருடன் வாழும் உறவுகளுடன் சேர்த்து வைப்பார்கள். ஆத்மாக்களை, மறுபிறவி காலம் வரும் வரை ஆத்மாக்களின் குழுக்களில் தங்க வைத்து பாதுகாப்பார்கள்.

126)மறுபிறவி வழிகாட்டுதல் மையத்தில் பயிலக் கூடியவர்கள் யார்?

ஆத்மாக்களின் வழிகாட்டியாக மாற விரும்பும் ஆத்மாக்களுக்கு, ஆத்மாக்களின் வழிகாட்டு மையத்தில் பயிற்சிகள் கொடுக்கப்படும்.

127)தாயின் கர்ப்ப காலத்தில் எத்தனாவது மாதத்தில் ஆத்மாக்கள் அந்தக் கர்ப்பத்துடன் இணைவார்கள்?

மறுபிறவி சமயத்தில், மறுபிறவி எடுக்க விரும்பும் ஆத்மாவானது, ஒரு தாய் கர்ப்பம் தரிப்பதற்கு முன்னதாகவே, அந்த ஆத்மா தாயின் கர்ப்பத்திற்குள் சென்று விடும். அந்தத் தாய் கர்ப்பம் தரிக்கும் வரை அங்கேயே தங்கி இருக்கும். எப்பொழுது கரு உருவாகிறதோ அந்த நாளிலே, உள்ளே தங்கி இருக்கும் ஆத்மாவானது கருஉடன் இணைந்து விடும்.

128)எவ்வாறான கோயில்களில் ஆத்மாக்கள் தங்கள் பெற்றோர்களை தேர்ந்தெடுக் கிறார்கள்?

பிள்ளை பெற்றிற்காக பிரசித்தி பெற்ற எல்லா கோயில்களிலும் ஆத்மாக்கள் தங்கள் பெற்றோர்களை தேர்ந்தெடுப்பார்கள். பெற்றோர் களை தேர்ந்தெடுத்த பிறகு, அந்த பெற்றோர்கள் கருஉறும் வரை அவர்களுடன் இருந்து, கரு உன்டான உடன் அந்த கருவுடன் இணைவர்கள்.

129)மறுபிறவி வழிகாட்டுதல் மையத்தில் ஆத்துமாக்களுக்கு என்ன கற்றுக் கொடுக்கப்படுகிறது?

மறுபிறவி சமயத்தில் ஆத்மாக்கள் ஒரு தாயின் கருடன் இணைவதற்கு முன்னால் சில காலம் அவர்கள் வீட்டில் தனிமையில் கரு உருவாவதை

எதிர்பார்த்து தங்கி இருக்கும். இந்த காலகட்டத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை மறுபிறவி வழிகாட்டு மையத்தில் கற்றுக் கொடுக்கப்படும். இவ்வாறு ஒரு ஆத்மவானது மூன்று மாதம்வரை காத்திருக்கும், இந்த காலகட்டத்தில் அந்த தாய் கருவுறவில்லை என்றால், வேறு ஒரு பெற்றோரை தேடி அந்த ஆத்மா சென்றுவிடும்.

130)ஆத்மாக்கள் மறுபிறவியை தவிர்த்து தாங்கள் இருக்கும் நிலையிலேயே தொடர்ந்து இருக்க முடியுமா?

ஆத்மாக்கள் மறுபிறவியை தவிர்த்து எவ்வளவு காலம் வேண்டுமானாலும் ஆத்மாக்கள் உலகத்தில் தங்கி இருக்கலாம்.

131)ஆத்துமாக்கள் மறுபிறவிக்கு செல்லாமல் தொடர்ந்து அவர்கள் உலகத்தில் இருப்பதற்கு ஆத்துமாக்கள் ஏதேனும் முயற்சி எடுக்க வேண்டுமா?

ஆத்மாக்கள் தாங்கள் மறுபிறவி எடுப்பதற்கு தான் முயற்சி எடுக்க வேண்டுமே தவிர ஆத்மாக்கள் உலகத்தில் மறுபிறவி இல்லாமல் தொடர்ந்து வாழ எந்த முயற்சியும் தேவையில்லை. அனால் மறுபிறவியின் மேல் எந்த நாட்டமும் இல்லாமல் இருக்கவேண்டும்.

132)ஆத்மாக்கள் எவ்வாறு தங்கள் (மறுபிறப்பு) பெற்றோர்களை தேர்ந்தெடுக்கிறார்கள்?

பெரும்பாலும் ஆத்மாக்கள் தங்கள் உறவுக்குள்ளே தான் பிறக்க விரும்புவார்கள், இவ்வாறான சூழ்நிலைக்கு வாய்ப்பில்லாத சமயத்தில், பொருளாதார வாய்ப்பு வசதி உள்ள பெற்றோர்களிடமே பிறக்க விரும்புகிறார்கள், அதுவும் முதல் பிள்ளையாக, அழகான ஆணாக பிறக்க விரும்புகிறார்கள். ஆத்மாக்களின் இத்தகைய மனப்பான்மை இந்தியா போன்ற நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும்.

133) தூங்கும் சமயத்தில் மறைந்து போகும் ஆத்மாக்களும், ஒளி வட்டத்துடன் மேலே சென்று மறையும் ஆத்மாக்களும், மறுபிறவிக்கு தான் செல்கிறார்களா?

இந்தக் கேள்வியை என் மனைவி வழியாக திரு. சாமிநாதன் அவர்களிடம் கேட்டபோது, அவர் சொன்ன பதில், எல்லா ஆத்மாக்களும் இவ்வாறு தான், அவர்களின் ஆத்ம சரீரத்தை சுற்றி ஒளி வட்டத்துடன் மறுபிறவிக்கு செல்வார்கள், அவர்கள் தூங்கும் போதும் இவ்வாறு தான் நடக்கும் என்கிறார்.

134) ஆத்ம சரீரத்தை சுற்றி ஒளியுடன் மேலே சென்று மறையும் ஆத்மாக்கள், மறுபிறவிக்கு

தான் செல்கிறார்களா? அல்லது கடவுளின் அருகாமைக்கு செல்கிறார்களா?

இந்த கேள்வியை என் மனைவி வழியாக திரு. சாமிநாதன் அவர்களிடம் கேட்டபோது, திரு. சாமிநாதன் அவர்கள் கூறியது, தான் அறிந்தவரை மனித ஆத்மா மீண்டும் பிறந்ததாக வேண்டும், மனித ஆத்மாவிற்கு மீண்டும் மனிதனாக பிறப்பதை தவிர வேறு வாய்ப்பு இல்லை. இருப்பினும் மனிதனாக வாழும் காலத்தில், அவனின் கரும பலன் காரணமாக, இறந்த பிறகு மனிதப் பிறவியில் இருந்து விடுபட வாய்ப்புள்ளது.

135)ஆத்மாக்கள் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு புதிய இடத்திற்குச் செல்லும் பொழுது தனியாகச் செல்வார்களா?

ஆத்மாக்கள் இவ்வாறு புதிய இடம் செல்லும் பொழுது குழுக்களாகத்தான் செல்கிறார்கள். குறைந்தபட்சம் ஐந்து பேர் கொண்ட குழுக்களாகவே செல்கிறார்கள். இவ்வாறு அவர்கள் தனியே செல்லாமல் குழுக்களாக செல்வதற்கு காரணம், தன்னந்தனியே சென்றால் தொலைந்து விடுவோம் என்ற அச்சம் காரணமாக இவ்வாறு குழுக்களாக செல்கிறார்கள். ஆத்மாக்கள் அவர்கள் தங்கி இருக்கும் இடத்தின் முகவரியையோ அல்லது வழிகளையோ அடையாளமாக கொள்வதில்லை. அந்த இடத்தில் தங்கி வாழும் உயிருள்ள மனிதர்களையே

அடையாளமாக கொள்கின்றனர். இதன் காரணமாக ஒரு இடத்தின் அடையாளமாக பல உயிருள்ள மனிதர்களை, ஆத்மாக்கள் தங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்கின்றனர். சில சமயங்களில் வளர்ப்பு நாய்களை தங்களின் இருப்பிடத்திற்கு அடையாளமாகக் கொள் கின்றனர்.

136)ஆத்மாக்கள் உலகத்தில் நேரமும் நாட்களும் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது?

ஆத்மாக்கள் நேரத்தையும் நாட்களையும் உயிருள்ள மனிதர்கள் பேசுவதை வைத்தே புரிந்து கொள்கிறார்கள். மேலும் சூரிய உதயம், அஸ்தமனம் இவற்றையும் வைத்து நேரத்தை புரிந்து கொள்கிறார்கள். சில ஆத்மாக்கள் டிஜிட்டல் நாள்காட்டி மற்றும் டிஜிட்டல் கடிகாரம் போன்றவற்றை புரிந்து கொள்கிறார்கள். நாம் பயன்படுத்தும் காலண்டரையோ, முள் வைத்த கடிகாரத்தையோ அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

137)ஆத்மாக்கள் எவ்வாறு தங்கள் பொழுதை கழிக்கிறார்கள்?

உயிருள்ள மனிதர்கள் மேற்கொள்ளும் எல்லா பொழுதுபோக்கு செயல்களும் ஆத்மாக்களுக்கும் பொருந்தும், கூடுதலாக ஆத்மாக்களுக்கு கற்பனைத் திறன் அதிகம் இருப்பதால், அந்த

கற்பனை சக்தியை பயன்படுத்தி, ஆத்மாக்கள் கூட்டாக தங்களுக்கு விருப்பப்பட்ட பொழுதுபோக்கு சூழ்நிலைகளை உருவாக்கி மகிழ்வார்கள்.

138)ஆத்மாக்கள் தாங்கள் இழந்த உடல் சரீரத்தை நினைத்து வருந்துவார்களா?

விபத்தில் இறந்தவர்கள், நல்ல உடல் நிலையில் இருந்து திடீரென்று இறந்தவர்கள், தாங்கள் இழந்த உடல் சரீரத்தை நினைத்து சிறிது காலம் வருந்துவார்கள். வயதாகி இறப்பவர்கள், நீண்ட நாள் நோய் வாய்ப்பட்டு இறப்பவர்கள், இது போன்றவர்களுக்கு, அவர்கள் புதிதாக பெற்ற ஆத்ம சரீரம் மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. அவர்கள் உடல் சரீரத்தை இழந்ததை பெரிய விடுதலையாக நினைக்கிறார்கள்.

139)இறந்தவர்களின் பொருட்களை உடனே அப்புறப்படுத்தலாமா?

இறந்தவர்கள் தாங்கள் இறந்து விட்டோம் என்ற உணர்வு வருவதற்கே சில நாட்கள் ஆகலாம், அவ்வாறு அவர்கள் தாங்கள் இறந்ததை புரிந்து கொண்ட பின்பு, அவர்களின் ஆத்ம சரீரம் உயிர் உடல் போலவே இருப்பதால் அவர்கள் தாங்கள் இருந்த இடத்திலேயே தங்கி தாங்கள் பயன்படுத்திய பொருட்களை தொடர்ந்து பயன்படுத்துவார்கள். இத்தருணத்தில் அவர்களின் பொருட்களையும் உடைமை

களையும், இறந்தவர்களின் உறவினர் அப்புறப்படுத்தினால், ஆத்மாக்களுக்கு அவர்களை அவர்கள் உடமையுடன் வெளியேற்றப்பட்டதாக நினைத்துக் கொண்டு மிகுந்த மனவேதனை அடைவார்கள். மேலும் இது அவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும். வேறு வழியில்லாமல் தங்கள் வீட்டை விட்டு ஆத்மாக்கள் குழுக்களுடன் தங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். ஆகையால் உயிருள்ள நாம் இந்த மனவேதனையை ஆத்மாக்களுக்கு கொடுக்காமல் இருக்க அவர்கள் உடைமைகளையும் பொருட்களையும் அவர்கள் விட்டுச் சென்றபடி அப்படியே சிறிது காலத்திற்கு பாதுகாப்பதே உயிருள்ள நாம் ஆத்மாக்களுக்கு செய்யும் பேர் உதவியாக இருக்கும்,

140)இறந்தவர்களின் தாலி கொடியை பற்றி ஆத்மாக்கள் கூறுவதென்ன?

தாலிக்கொடி தங்கமாக இருந்தாலும் அல்லது மஞ்சள் கயிறாக இருந்தாலும் இறந்த அந்தப் பெண்ணின் புகைப்படத்தில் பூமாலை போல் போடுவதையே பெண் ஆத்மாக்கள் விரும்புகின்றனர். தாலி கொடியை உயிருள்ள உறவுகள் பயன்படுத்த விரும்பினால் ஆத்மாக்களின் சம்மதத்துடன் பயன்படுத்திக் கொள்ளலாம். யார் இந்த சம்மதத்தை எவ்வாறு பெறுவது?

கணவர் அல்லது பெண் பிள்ளைகள் அல்லது பேத்திகள் இவர்கள் யாரும் இல்லை என்றால் அண்ணன் தம்பிகள், தாலி கொடியை பயன்படுத்திக் கொள்ளலாம். தாலி கொடியை பயன்படுத்த சம்மதம் என்பது இறந்து ஒரு வருடம் ஆன பிறகு அவர்களது பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு முன் பயன்படுத்த வேண்டும் என்றால் அந்த ஆத்மாவின் புகைப்படத்தின் முன் நின்று அதன் தேவையை விளக்கி சொல்லி பிறகு பயன்படுத்திக் கொள்ளலாம். இது தாலி கொடிக்கு மட்டுமல்ல அந்த ஆத்மாவின் எல்லா சொத்துக்களுக்கும் பொருந்தும்.

141)ஆத்மாக்கள் உலகத்தில் வாழும் பல மதத்தினர் அவர்கள் இருக்கும் இந்த இடைப்பட்ட நிலையை பற்றி என்ன நம்புகிறார்கள்?

இந்த கேள்விக்கு பதில் ஆத்மாக்களின் வழிகாட்டி திரு சாமிநாதன் அவர்கள் கூறுகையில் உத்தரிக்கும்ஸ்தலம், மோட்சம், நரகம், என்பவைகளை நம்பும் பிரிவினர், மரணத்திற்கும் மறுபிறவிக்கும் இடையில் உள்ள இந்த நிலையை அவர்கள் உத்தரிக்கும்ஸ்தலம் என்று நம்புகிறார்கள். இந்த இடைப்பட்ட காலத்தை ஆத்மாக்கள் கடந்த உடன், மோட்சம் சென்று விடுவோம் என்றும் நம்புகிறார்கள்.

மோட்சம் மற்றும் நரகம் என்ற இரண்டை மட்டும் நம்பும் பிரிவினர் இந்த இடைப்பட்ட நிலையை மோட்சத்திற்கு செல்லும் வழியாக நம்புகின்றனர்.

இந்த இரண்டு பிரிவினரும் “இறந்தபின் நரகத்திற்கு செல்லும் ஆத்மாக்கள்”, இந்த இடைப்பட்ட நிலையில் அவர்களுடன் இல்லை என்று கருதுகின்றனர்.

மறுபிறவியை நம்பும் பிரிவினர் இந்த இடைநிலையை மறுபிறவியின்போது, எந்த பெற்றோருக்கு பிறக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய கடவுள் கொடுத்த சுதந்திரமாக நினைக்கின்றனர். இவ்வாறு பெற்றோரை தேர்வு செய்ய விரும்பாத பட்சத்தில் அந்தப் பணியை அவர்களது கர்மா செய்யும். மதம் மற்றும் கடவுள் நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்தவர்கள், அவர்கள் இறந்தவுடன், இந்த இடைப்பட்ட நிலையில் வாழ்ந்த சில காலத்தில், மறுபிறவிக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் மதத்தையோ கடவுளையோ ஏற்பதில்லை.

142)ஆத்மாக்கள் உலகில் பல நிலைகள் உள்ளனவா?

இந்த கேள்விக்கு ஆத்மாக்களின் வழிகாட்டி திரு சாமிநாதன் பதில் கூறுகையில், தான் ஐம்பது வருடமாக ஆத்மாகளின் வழிகாட்டியாக பணிபுரிகிறேன் என்னுடைய அனுபவத்தில்,

ஆத்மாக்கள் உலகில் எல்லா ஆத்மாக்களும் ஒரே நிலையில் தான் இருக்கிறார்கள். இந்த இடைப்பட்ட நிலையில் உள்ள ஆத்மாக்களுக்கு இடையே எந்த வேறுபாடும் கிடையாது. அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் அவர்களின் படிப்பு, வேலை, பதவி, இவைகளின் அடிப்படையில் ஆத்மாக்கள் உலகில் எந்த வேறுபாடும் கிடையாது. வாழ்ந்த காலத்தில் அவர்கள் கடைப்பிடித்த மத நம்பிக்கை கலாச்சாரம் போன்றவைகளை தொடர்கிறார்கள். மறுபிறவிக் கொள்கையில் நம்பிக்கை இல்லாத பலர், ஆத்மாக்கள் உலகத்துக்கு வந்த பிறகு அதை நம்பவும் செய்கிறார்கள்.

143)ஆத்மாக்கள் உலகம் என்ற இந்த இடைப்பட்ட நிலை எதற்கு?

இந்த கேள்விக்கு பதில் ஆத்மாக்களின வழிகாட்டி திரு.சாமிநாதன் அவர்கள் கூறுகையில்

* பெற்றோர்களை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு

*மறுபிறவி இல்லாமல் தொடர்ந்து ஆத்மாக்கள் உலகில் வாழும் சுதந்திரம்

மேற் சொன்ன இரண்டும், ஆத்மாக்களுக்கு கொடுக்கப்படும் சுதந்திரத்தை பயன் படுத்தும்போது மட்டுமே சாத்தியப்படும். ஆத்மாக்கள் இந்த சுதந்திரத்தை பயன்படுத்தவில்லை என்றால் ஆத்மாக்களின் கர்மாப்படி எல்லாம் நடந்தேறும்.

144)ஆத்மாக்கள் உலகில் உள்ள நம்பிக்கைகளும், மூடநம்பிக்கைகளும், ஆத்மாக்களின் வழிகாட்டி திரு சாமிநாதன் கருத்துப்படி?

ஆத்மாக்கள் உலகத்தில் உள்ள நம்பிக்கைகள்:

*இயற்கை தான் கடவுள்.

*இறந்தவர்களில் பெரும்பான்மையோர் மறு பிறவிக்கு செல்வார்கள்.

*இறந்தவர்களில் சிலர் ஆத்மாக்கள் உலக்கத்தை தவிர்த்து மறுபிறவி இல்லா உயர்நிலையை அடைவார்கள்.

*அந்த உயர்ந்த நிலை ஆவிகள் உலகம் (புனிதர்களும்,முக்தி அடைந்த வர்களும் இருக்கும் இடம்) என்று நம்பப்படுகிறது

*இறந்தவர்களில் சிலர் நீண்ட காலம் மறுபிறவிக்கு செல்லாமல் ஆத்மாக்கள் உலகில் வாழ்வார்கள்

மூடநம்பிக்கைகள்:

*ஆத்மாக்கள் உலகத்திலிருந்து ஆவிகள் உலகத்திற்கு செல்ல முடியும்.

*ஆத்மாக்கள் உலகத்திலிருந்து மோட்சம் செல்ல முடியும்.

*எல்லா ஆத்மாக்களும் தங்களை விட உயர்ந்த நிலையில் உள்ள ஆவிகளுடன் தொடர்பு கொள்ள முடியும்

*ஆத்மாக்கள் உயிருள்ள மனிதர்களை பழிவாங்க முடியும்

*ஆத்மாக்கள் மறுபிறவியின் போது மற்ற உயிரினமாக பிறக்க முடியும்

*ஆத்மாக்களுக்கு அழிவு உண்டு

145)கர்ப்பத்துடன் இணைந்து விட்ட ஆத்மாவுடன் மற்ற ஆத்மாக்கள் தொடர்பு கொள்ள முடியுமா?

கர்ப்பத்திற்கு முன் தாயின் வீட்டில், ஆத்மாவானது தங்கிவிடும். அந்த தாய் கர்பந்தரிக்கும் காலம் வரை காத்திருக்கும். கர்ப்பம் தரித்தவுடன் ஆத்மாவானது அந்த கருவுடன் இணையும். அச்சமயத்தில் இவ்வாறு கருவுடன் இணைந்து விட்ட ஆத்மாவுடன் மற்ற ஆத்மாக்கள் தொடர்பு கொள்ள முடியாது. கருவுடன் இணைய முன் வேண்டுமானால் தொடர்பு கொள்ளலாம். ஆத்மாவானது கருவுடன் இணைந்த பிறகு கருச்சிதைவு ஏற்பட்டுவிட்டால், அந்த ஆத்மா கருப்பையிலிருந்து வெளியே வந்துவிடும்.

146) நாம் உயிரோடு இருக்கும் இந்தப் பொருள் உலகம் அடைந்த மாறுதல்கள் போல் ஆத்மாக்கள் உலகிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா?

ஆம் இங்குள்ள பொருள் உலகத்தில் ஏற்பட்ட அறிவியல் மற்றும் கலாச்சார மாறுதல்கள் போல் ஆத்மாக்கள் உலகிலும் பல மாறுதல்கள் உண்டு அவைகளில் சில:

*ஆத்மாக்கள் தங்கள் உயிருள்ள உறவுகளை பிரிந்து குழுக்களாக வாழ கற்றுக் கொண்டது.

*ஆத்மாக்கள் பல இடங்களுக்கு பயணிக்க கற்றுக்கொண்டது.

*ஆத்மாக்கள் மறுபிறவியின் போது தங்கள் பெற்றோர்களை தேர்ந்தெடுக்க கற்றுக் கொண்டது. மேலும் மறுபிறவி நேரத்தை தாங்களே முடிவு செய்ய கற்றுக் கொண்டது.

*பத்மாசனத்தில் அமர்ந்து, குண்டலனி யோகா, செய்வதுமுலம் மறுபிறவியை செயல்படுத்த கற்றுக் கொண்டது .

*உயிருள்ள உறவுகளுடன் பேசி பழக கற்றுக் கொண்டது

*பொருள் உலகத்தில் உள்ள பொருட்களை, தாங்களும் பயன்படுத்த கற்றுக் கொண்டது.

*ஒரு காலத்தில் தனித்து வாழ்ந்த ஆத்மாக்கள் இப்பொழுது உயிருள்ள மனிதர்களுடன் இரண்டறக் கலந்து வாழ கற்றுக் கொண்டது.

*பில்லி, சூனியம், ஏவல், போன்ற உயிருள்ள மனிதர்களால் செய்யும் காரியங்களில் இருந்து தங்களை காத்துக் கொள்ள கற்றுக் கொண்டது.

*உயிருள்ள மனிதர்களின் ஆத்மாவுடன் பேசி மனிதர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மண நோய்க்கு சிகிச்சை அளிக்க கற்றுக் கொண்டது.

*ஆத்மாக்களை நெறிப்படுத்தும் ஆத்மாக்களின் வழிகாட்டிகளை உருவாக்கியது .

*மறுபிறவி வழிகாட்டும் மையங்களை ஏற்படுத்தியது.

இவை போன்ற சில மாறுதல்கள் ஆத்மாக்கள் உலகத்தில் ஏற்பட்டிருக்கின்றன.

திரு சாமிநாதன் ஆத்மாக்களின் வழிகாட்டி நடத்தும் மறுபிறவி மையத்தில் நடந்த அதிசய நிகழ்வு:

குண்டலினி யோகா பயிலும் ஆத்மாக்கள், ஒவ்வொருவராக அவர்களை சுற்றி ஒளி வாட்டத்துடன் மேலே எழும்பி மறைந்து கொண்டிருக்கும் சமயத்தில், அந்த ஆத்மாக்களை வரவேற்க வெண்ணிறை உடை அணிந்த பிரகாசமான ஆவிகள் பலர் நின்றதை திரு. சாமிநாதனால் காண முடிந்தது என்கிறார். இதை மேலும் அவருடன் இருந்த திரு.எபினேசர் மற்றும் அங்கு தங்கியுள்ள பல ஆத்மாக்களால் காண முடிந்தது. திரு.சாமிநாதன் அவர்களால் அங்கு வந்த வெந்நிறை உடை அணிந்தவர்களுடன் பேச முடிந்தது என்கிறார். திரு.சாமிநாதன் வெந்நிறை உடை அணிந்தவர்களை பற்றி விவரிக்கையில் அவர்கள் மிகப் பிரகாசத்துடன் காட்சி தந்ததாக கூறுகிறார்.

பின் வரும் கேள்வி, பதில்கள் யாவும், ஆத்மகளின் வழிகாட்டி திரு.சாமிநாதன் அவர்களும், ஆவி உலகத்தினரும் நடத்திய உரையாடல்.

நீங்கள் யார்? என்று திரு சாமிநாதன் கேட்டதற்கு.

அந்த ஆவிகள், நாங்கள் எல்லாம் ஆவி உலகத்தை சார்ந்தவர்கள்.

உங்கள் பணி என்ன? என்ற கேள்விக்கு

எங்களின் பணி மறுபிறவிக்கு செல்லும் ஆத்மாக்களை தாயின் கருவில் சேர்ப்பது ஆகும். மேலும் இறக்கும் குழந்தைகளின் ஆத்மாவை ஆத்மாக்களின் பராமரிப்பில் கொண்டு வந்து விடுவது, கொடிய குற்றம் புரிந்த மனிதர்களின் ஆத்மாக்களை தனியாக கூட்டி சென்று, அவர்கள் செய்த தவறை உணரச்செய்தல்.

கொடிய குற்றம் செய்து இறந்தவர்களுக்கு தண்டனை ஏதும் உண்டா?

இங்கு யாருக்கும் எந்த தண்டனையும் கிடையாது, அவர்களை மற்ற ஆத்மாக்களிடமிருந்து பிரித்து தனித்தனியாக வைப்பதே அவர்களுக்கு தண்டனையாக அமையும். இந்த ஆத்மாக்கள் தனித்தனியாக வைத்து பராமரிக்கப்படுவார்கள், இவர்களுக்கு தூக்கம் என்பது இருக்காது, ஏனென்றால் அவர்கள் செய்த குற்றமே அவர்கள் காதில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும். அவர்கள் செய்த குற்றத்திற்கு ஏற்ப இந்த பரிகார உலகில் தனித்தனியாக தங்கவைக்கப் படுவார்கள். பரிகார காலம் முடித்தவுடன் அவர்கள் மறுபிறவிக்கு செல்வார்கள்.

எத்தகைய குற்றம் புரிந்தவர்கள் இந்த பரிகார உலகத்தில் தங்க வைக்கப் படுவார்கள்?

இதற்கு பதில் அளித்த அந்த ஆவி உலகத்தினர் கீழ் வரும் குற்றங்களை பட்டியலிட்டனர்:

*கொலை குற்றம்.

*கொலைக்கு உடந்தையாக இருத்தல்.

*போரில் கொலை செய்தல்.

*போரை செயல்படுத்திய தலைவர்கள்.
*கற்பழிப்பினால் ஏற்படும் சாவுகள்.
*கருக்கலைப்பு

*தற்கொலைக்கு தூண்டுதல்.

*இயற்கையை அழிக்கும் பூச்சி மருந்து தயாரிப்பவர்கள்.

*தன்னை சார்ந்தவர்களையும், தன் உறவுகளையும் நிர்கதியாக விட்டு செல்லுதல்.

*மற்ற உயிர்களை துன்புறுத்துதல் அல்லது துன்புறுத்திக் கொல்லுதல்.

*இயற்கையை அழிக்கும் நச்சுப் பொருட்களை தயாரிப்பவர்கள்.

*இயற்கையின் சமநிலையை அளிக்கக் கூடிய செயல் செய்பவர்கள்.

*மனித உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு தயாரிப்பவர்கள்.

*மனித உயிரை அச்சுறுத்தும் எல்லா செயல்களும்.

மனித ஆத்மாக்கள் உங்கள் நிலையை அடைய முடியுமா?

மனித ஆத்மாக்களுக்கு மறுபிறவி மட்டும்தான் உண்டு, அவர்கள் எங்கள் நிலையை அடைய முடியாது. ஆனால் நாங்கள் மனிதனாக பிறக்க இயலும், இறந்த பிறகு மீண்டும் எங்கள் நிலைக்கு திரும்பி விடுவோம்.

எதற்காக நீங்கள் மனிதனாக பிறக்க வேண்டும்?

அவ்வப்போது மனிதர்களை சீர்படுத்த, நாங்கள் மனிதனாக பிறப்போம்.

மனித வாழ்க்கையின் அர்த்தம் என்ன?

முற்பிறவி பாவத்தை போக்குவதே மனித வாழ்க்கையின் அர்த்தம்.

மனிதனுக்கு பாவம் எப்படி வந்தது?

மனிதன் தன் சுதந்திரத்தையும், அறிவையும் தவறாக பயன்படுத்தியதே பாவமாகும்.

மனித ஆத்மா பிறவா நிலையை அடைய முடியுமா?

மனித ஆத்மாவின் பிறவா நிலை என்பது, அந்த ஆத்மா எங்கள் நிலையை அடைவதாகும்.

ஆத்ம உலகத்திற்கு வந்த பிறகு பிறவா நிலைக்குச் செல்ல முடியுமா?

ஆத்ம உலகத்தில் இருந்து மறுபிறவி ஒன்றே சாத்தியம், மனித நிலையில் இருந்து தான் பிறவா நிலைக்குச் செல்ல முடியும்.

மனித நிலையில் இருந்து பிறவா நிலைக்குச் செல்லும் போது அந்த ஆத்மா கடவுளிடம் சேர்கிறதா?

இல்லை. ஆத்மா, நாங்கள் இருக்கும் ஆவிகள் நிலையை அடைகிறது.

உங்களுக்கு அழிவு உண்டா?

எங்களுக்கு அழிவு இல்லை.

உங்களால் கடவுளை பார்க்க முடியுமா?

இல்லை முடியாது.

உங்களை விட உயர்ந்த ஆவிகள் உண்டா?

ஆவிகள் உலகத்தில் பல நிலைகள் உண்டு.

மனிதர்களால் உங்களை தொடர்பு கொள்ள முடியுமா?

சில யோக பயிற்சி மற்றும் தியான பயிற்சிகளால் எங்களைத் தொடர்பு கொள்ள முடியும். குண்டலினி யோகா வழியாக எங்களை தொடர்பு கொள்வது ஒரு எளிய முறையாகும்.

உங்களால் மனிதர்களுக்கு நேரடியாக உதவ முடியுமா?

நாங்கள் அவ்வப்போது மனித வடிவில் வந்து மனிதர்களுக்கு உதவுவோம். இவ்வாறு உதவுவதற்கு அவர்கள் எங்களை அழைக்கவும் வேண்டியது இல்லை, வேண்டவும் வேண்டியது இல்லை.

உங்களால் ஏஞ்சல்களுடன் தொடர்பு கொள்ள முடியுமா?

எங்களால் ஏஞ்சல்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.

நீங்கள் எல்லாம் யார்?

நாங்கள் எல்லாம் மனித ஆத்மாவிற்கு அடுத்த நிலையில் உள்ள ஆவிகள்

உங்களை யார் உருவாக்கியது?

நாங்கள் கடவுளால் உருவாக்கப்பட்டவர்கள்.

உங்களால் கடவுளை தொடர்பு கொள்ள முடியுமா?

முடியாது

மனிதர்களால் அதிகபட்சம் யாருடன் தொடர்பு கொள்ள முடியும்?

மனிதர்களால் அதிகபட்சம் எங்களுடன் மட்டும் தான் தொடர்பு கொள்ள முடியும். எங்கள் வழியாக ஏஞ்சல்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

எங்களுக்குத் தெரிந்த புனிதர்கள் எல்லாம் உங்களுடன் தான் இருக்கிறார்களா?

நீங்கள் புனிதர்கள் என்று கூறும் சிலர் மனித ஆத்மாக்கள் அவர்கள் எங்களுடன் இல்லை.

நீங்கள் யார் என்று கூற முடியுமா?

உங்களால் புனித சவேரியார் என்று அழைக்கப்படுபவர் நான்தான்.

நீங்கள் இப்பொழுது என் மறுபிறவி மையத்திற்கு வர காரணம் என்ன?

இந்த மறுபிறவி மையத்தில் இருந்து பெரும்பாலான ஆத்மாக்கள் தினந்தோறும் மறுபிறவிக்கு செல்வதாக அறிந்தோம், இதை காணவே நாங்கள் வந்தோம்

எங்களுக்கு உதவும் உயிருள்ள ஒரு மனிதர், ஆத்மாக்களை பற்றி ஒரு நூல் எழுதிக் கொண்டிருக்கிறார், அதில் உங்களைப் பற்றியும், இந்த நிகழ்வைப் பற்றியும் எழுதலாமா?

எழுதலாம்.

அந்த நூலாசிரியர் வழியாக மனிதர்களுக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

கிறிஸ்த்து சொன்ன “உன்னை போல் பிறனை நேசி” இதை மட்டும் கடைப்பிடித்தால் போதும்.

மத சடங்குகள் பற்றி நீங்கள் கூறுவது என்ன?

எல்லா மத சடங்குகளும் வீண் கால விரயம்.

ஆத்மாக்கள் உலகம் கடைப்பிடிக்க வேண்டியது ஏதாவது உண்டா?

சந்தோஷமாக இருங்கள் மற்ற ஆத்மாக்களையும் சந்தோஷப்படுத்துங்கள்.

மனித ஆத்மாக்களை உயிருள்ள மனிதர்கள் மகிழ்விக்க வேண்டுமா?

கட்டாயம் செய்ய வேண்டும். சில காலத்திற்கு, அந்த ஆத்மாக்கள் ஆத்மா உலகத்தை புரிந்து கொள்ளும் வரை. புதிதாக இறந்தவர்களின் ஆத்மா, புதிதாக பிறந்த குழந்தைக்கு சமம்.

மறுபிறவி மையம், குண்டலினி யோகா மூலம் மறுபிறவி அடைதல், இவையெல்லாம் ஏற்புடையதா?

இது மனித ஆத்மாவுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரம், இதில் எந்த தவறும் இல்லை.

நீங்கள் உயிருள்ள மனித கண்களுக்கு காட்சி தருவீர்களா?

தேவைப்படும் பொழுது சாதாரண மனித வடிவில் வந்து போவோம்.

தற்போது பைபிளுக்கு கூறப்படும் விளக்கம் சரிதானா?

பைபிள் மட்டுமல்ல பூமியில் உள்ள எல்லா புனித நூல்களும் பல தவறுகளுடன் தான் விளக்கப்பட்டு இருக்கிறது.

மற்ற கிரகங்களில் மனிதர்கள் உண்டா?

எங்களுக்கு தெரியாது.

மற்ற உயிரினங்களுக்கு ஆத்மா உண்டா?

இல்லை.

மற்ற உயிரினங்களை கொல்வது பாவமா?

மற்ற உயிரினங்களை கொடுமைப்படுத்துவது தான் பாவம்.

கடவுள் வழிபாடும், கோயில்களும் தேவையா?

கோயில்களுக்குச் சென்று நன்றி மட்டும் சொல்லுங்கள். உங்கள் தேவைகளை சொல்லி பிராத்திக்க வேண்டாம். இயற்கையுடன்

இணைந்து வாழுங்கள். இதுவே உங்களுக்கு பாதுகாப்பு

நோய்கள். பிள்ளை பேரு இவைகளுக்காக கோயிலுக்கு செல்லலாமா?

இயற்கையோடு இணைந்து வாழுங்கள் நோய் வராது பிள்ளைகளும் பிறப்பார்கள்.

இயற்கை தான் கடவுளா?

எங்களுக்கு தெரியவில்லை.

மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன?

முக்தி அடைவது, மீண்டும் பிறவாமல், ஆவிகள் உலகத்திற்கு செல்லுதல்.

ஆத்மாக்களின் வழிகாட்டி சாமிநாதன் வாசகர்களுக்கு கூறுகிறார்:

தான் 50 வருடமாக ஆத்மாக்களின் மறுபிறவி மையம் நடத்தியதன் பலன் இப்போதைக்கு தான் எனக்கு கிடைத்திருக்கிறது. நான் இத்தனை வருடங்களாக சென்றது சரியான பாதையாகும். ஆத்மாக்களை விட உயர்ந்த ஆவிகளின் வருகை எனக்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும்.

அடுத்து வருவது:

என்னுடைய அடுத்த நூல், திரு சாமிநாதன் ஆத்மாக்களின் வழிகாட்டி, அவரின் நேரடி வழிகாட்டுதலில் எழுதப் போகிறேன், நூலின் தலைப்பு "ஆத்மாக்களை மகிழ்விப்போம்" இந்த நூல் விரைவில் வெளிவர புனித அதிதூதர் ஆர்க் ஏஞ்சல் மைக்கேல் என்னை வழிநடத்த வேண்டுகிறேன்.